முஸ்லிம் முரசு

ஜனவரி 1952 சென்னை விலை 6 அணா

★ "துருக்கியின் தலைநகரைக் கண்டேன்"

★ சுதந்தர லிபியா (வரலாறு)

★ ஈரானியப் பிரதமர் முஸத்திக்.

★ சினிமா, கேள்வி—பதில்

சங்கு மார்க்கு

கைத்தறி கைலிகள்

K.E.Md. ABOO BACKER

ခရုတံဆိပ်

சங்கு

TRADE MARK

கொ.இ.முகம்மது அபுபக்கர்

ஒவ்வொரு பீஸில் இந்த லேபிலும்
ஒவ்வொரு லுங்கியில் சங்கு மார்க் ஸீலும்
எங்கள் உத்தரவாதம்.

முகம்மது அபூபக்கர் & கோ

95. தம்பு செட்டி தெரு - மதருஸ்-1.

கிளை :—84, கீழ வெளி வீதி, மதுரை.

இலங்கை ஏஜண்ட் :- அபூபக்கர் டெக்ஸ்டைல்ஸ்

25—1/4, டாம் வீதி, கொழும்பு.

முஸ்லிம் முரசு

பொருளடக்கம்

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

கௌரவ ஆசிரியர்: அல்ஹாஜ் வ. மி. ஷம்சுத்தீன்

மலர் 4	சென்னை, ஜனவரி, 19[illegible]2	இதழ் 7

காங்கிரஸின் வெற்றியும் தோல்வியும்	*(தலையங்கம்)*	... 2
முரசொலி	,,	... 7
அட்டைப் படம்	,,	... 14
நபிகள் நாயகம் வாழ்வும் வாக்கும்	*அப்துல் மஜீது எம். ஏ;*	... 17
"இஸ்லாமிய தலைநகர் இஸ்தம்பலைக் கண்டேன்!"	*டாக்டர் எஸ், ஏ. குலுசி,*	... 20
டாக்டர் முஹம்மது முஸத்திக்	*எஸ். ஏ. கமால்*	... 30
சுதந்தர லிபியா	*"சாரா"*	... 36
எதிர்பாராதது!	*சிறு கதை "எம்மெஸ்"*	... 43
படித்துப் பாருங்கள்!	*(மதிப்புரை)*	... 53
திரை உலகம்		... 56
மின்னும் நட்சத்திரங்கள்	*மெஹ்தாப்*	... 57
கேள்வி—பதில்!		... 60

முரசில் வருகின்ற கதைகளும் அவற்றில் உள்ள பெயர்களும் கற்பனையே.

காங்கிரஸின்
வெற்றியும் தோல்வியும்

எங்கு நோக்கினும் 'தேர்தல்', 'தேர்தல்' என்ற பேச்சாகவே இருக்கின்றது. ஊரெல்லாம், தெருவெல்லாம் ஒரே முழக்கமா யிருக்கின்றது. காங்கிரஸின் வெற்றி, தோல்விகளைப்பற்றிக் காரசாரமாகப் பேசப்படுகின்றது.

தேர்தலில் போட்டியிடுகின்ற தனிப்பட்ட அபேட்சகர்களின் வெற்றி, தோல்விகளைப்பற்றிப் பொதுமக்கள் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. அல்லது வேறு பல கட்சிகளின் வெற்றியிலும் தோல்வியிலும் நாட்டு மக்கள் கவனம் செலுத்துவதாகத் தோன்றவில்லை. காங்கிரஸ் அபேட்சகர்களின் வெற்றி, தோல்விகளின் மீதே பொது மக்களின் கருத்தெல்லாம் செலுத்தப்படுவதைப் பார்க்கின்றோம்.

காங்கிரஸ் எப்படியாவது இத் தேர்தலில் முறியடிக்கப் படவேண்டும் என்று விரும்புகின்ற மக்களே இந்த நாட்டில் மிக அதிகமாக இருக்கின்றனர். காங்கிரஸ் அபேட்சகர்களின் தோல்வியைத் தங்கள் வெற்றியாகக் கொண்டாடும் கோடிக் கணக்கான மக்கள் இந்த நாட்டிலே இன்று இருக்கின்றனர். எனினும், இத் தேர்தலில் ஒவ்வொரு இடத்திலும் காங்கிரஸை எதிர்த்து நிற்கும் அபேட்சகர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாலும், காங்கிரஸுக்குப் போட்டியாகத் தேர்தலில் நிற்கக்கூடிய சம பலங்கொண்ட மாற்றுக் கட்சியொன்று இல்லாமையாலும் காங்கிரஸ் அபேட்சகர்கள் அநேக இடங்களில் வெற்றியடைந்து வரக் காண்கிறோம்.

இத்தேர்தலின் விளைவாக, மக்கள் மன்றத்திலும், மாகாண சட்ட சபைகளிலும், காங்கிரஸே மிக அதிகமான ஸ்தானங்களைக் கைப்பற்றி, மீண்டும் நாடாளும் வாய்ப்பைப் பெறுமாயின், நாட்டு மக்களின் அமோகமான ஆதரவு காரண

மாகத்தான் காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வந்தது என்று நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. எதிர்க் கட்சிகளின் ஏமாளித்தனத்தாலும், தனிப்பட்ட அபேட்சகர்களின் எண்ணிக்கைப் பெருக்காலுந்தான், காங்கிரஸ் மீண்டும் பதவிக்கு வர முடிந்திருக்கிறது என்ற உண்மையை காங்கிரஸ் தலைவர் நேருஜி முதல், காமராஜர் வரையில் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

காங்கிரஸை எதிர்த்து நிற்கும் அபேட்சகர்கள் அத்தனை பேர்களுக்கும் கிடைத்த வோட்டுக்களையும் காங்கிரஸ் அபேட்சகருக்கு மட்டும் கிடைத்த வோட்டுக்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நிச்சயமாக காங்கிரஸுக்கு எதிராகப் பதிவான ஓட்டுக்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றது. எனவே, காங்கிரஸுக்கு இத் தேர்தலில் கிடைக்கக் கூடிய வெற்றி, உண்மையான வெற்றி என்றும், நேர்மையான ஜனநாயகத் தேர்தலின் மூலம் கிடைத்த வெற்றி என்றும் நாம் நினைக்க முடியவில்லை; குருட்டு அதிருஷ்டமாகவும் கொல்லைப் புறமாகவும் கிடைத்த வெற்றி என்றுதான் நினைக்கின்றோம். இந்த வெற்றியைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் பெருமை யடித்துக்கொள்வதில் பொருளில்லை.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து நிற்கும் இடங்களில் காங்கிரஸுக்கு வெற்றி கிடைப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அங்கே காங்கிரஸ் எதிரிகள் வெற்றி பெற்றால்தான் ஆச்சரியப்படவேண்டும். இத்தகைய ஆச்சரிய நிகழ்ச்சிகள் எத்தனையோ, திருவாங்கூர்—கொச்சி தேர்தல்களில் நடைபெறக் கண்டோம். சென்னை ராஜ்யத்திலும் அத்தகைய அதிசய முடிவுகளைப் பல இடங்களில் பார்க்கப் போகின்றோம். இதுமட்டுமின்றி, காங்கிரஸ் அபேட்சகர்களே போட்டியிட முடியாத பல இடங்கள் இன்று இருக்கின்றன. ராஜா சர் முத்தய்யா செட்டியார் போன்றவர்களுக்கு எதிராகக் காங்கிரஸ் இத் தேர்தலில் போட்டியிடத் துணிவு பெறவில்லை!

சுமார் 6 ஆண்டுகளுக்கு முன் இந்த நிலையை நாம் எதிர்பார்த்திருக்க முடியுமா? போட்டியின்றியே பல நூற்றுக் கணக்கான இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றிக்கொண்ட காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலத்தில் ராஜா சர்

முத்தய்யா செட்டியார் போன்றவர்களெல்லாம் காங்கிரஸை எதிர்த்து நிற்க நடுங்கினார்கள். ஆனால் இன்று எவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது! ஒரு ராஜா சர் முத்தய்யா செட்டியாரை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றிராத காங்கிரஸ், நூற்றுக்கணக்கான இடங்களைக் கைப்பற்றி, வெற்றி முழக்கம் செய்து பயன் என்ன?

ஒவ்வொரு இடத்திலும் காங்கிரஸ் அபேட்சகர் போட்டியின்றி வெற்றி முழக்கம் செய்த காலம் ஒன்று இருந்தது, யாராவது எதிரிகள் போட்டியிட்டாலும் அவர்களை முறியடித்து முரசு கொட்டிய பெருமை ஒரு காலத்தில் காங்கிரஸுக்கு இருந்தது. அந்தக் காலம் இன்று மலையேறிவிட்டது.

இதற்குக் காரணம் என்ன? காங்கிரஸ்காரர்கள் சிந்திக்க வேண்டும். சிந்திப்பார்களாயின், கடந்த கால சம்பவங்களும் நிகழ்கால உண்மைகளும் அவர்களின் கண்முன்னே காட்சியளிக்கும்.

அதிகார மமதை கொண்டு, காங்கிரஸ்காரர்கள் அந்தக் காலத்தில் செய்த கொடுமைகள் எத்தனை! அவர்கள் நடத்திய கருப்புச் சந்தையும் கள்ளமார்க்கெட்டும் எத்தனை! உற்றார் உறவினர்களுக்கு உவந்தளித்த உத்தியோகங்கள் எத்தனை!

தனிப்பட்ட காங்கிரஸ்காரர்களின் யோக்கியதை இப்படியென்றால், காங்கிரஸ் சர்க்காரின் கண்மூடித்தனமான பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இந்த நாட்டு மக்களின் உணவுக்கும் உடைக்கும் ஏற்பட்ட பஞ்சத்தைப்பற்றிப் பேச வேண்டியதில்லை. 4 வருட காலம் இந்த நாட்டிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றிருக்கின்றது. எனினும் நாட்டு மக்களின் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிந்தபாடில்லை; ஆனால் ஒன்றுக்கு மூன்றாகப் பெருகியிருக்கின்றன. எனவே, கடந்த 4 வருட காலத்தில் காங்கிரஸின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்கசப்புக்குக் காரணம் என்னவென்பது தெளிவாகத் தெரிகிறது.

இத் தேர்தலின் விளைவாக மக்களின் விருப்பத்துக்கு ஏற்ற மாற்றுக் கட்சியொன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று

நடத்த முடியாமற்போயினும், காங்கிரஸ் கட்சியின்மீது நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள மனக் கசப்பைக் காட்டிக் கொள்வதற்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்தியாவெங்கும் மகத்தானமுறையில் நடைபெறுகின்ற இப் பொதுத் தேர்தலுக்காக, நாட்டு மக்களின் பணம் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் செலவிடப்படுகின்றது. இதனால் எந்தவிதமான பயனும் ஏற்படாவிட்டாலும், காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு சரியான பாடம் கற்பிக்கவும், அதனால் வருங்காலத்தில் அவர்கள் திருந்தி நடக்கவும் அந்த இருபது கோடி ரூபாய் பயன்படுமென்று நம்புகிறோம்!

நிதிமந்திரியின் தோல்வி

ஆந்திர நாட்டிலே உதயகிரி தொகுதியில் சென்னை சட்டசபைக்கு காங்கிரஸ் அபேட்சகராக நின்ற சென்னை சர்க்காரின் நிதியமைச்சர் கனம் கோபால ரெட்டியார், மக்கள் கட்சி அபேட்சகரால் முறியடிக்கப் பட்டு விட்டார். ஏறத்தாழ 2500 வோட்டுகள் வித்தியாசத்தில் கோபால ரெட்டியார் தோற்கடிக்கப் பட்டிருக்கின்றார். கோபால ரெட்டிக்கு 15,644 வோட்டுக்களும், ராமய்யா சவுத்ரி (மக்கள் கட்சி)க்கு 18,022 வோட்டுக்களும் கிடைத்திருக்கின்றன.

தென்னிந்தியாவிலேயே காங்கிரஸுக்கு இது ஒரு மாபெரும் தோல்வி என்று கூற வேண்டும். காங்கிரஸ் சர்க்காரிலே ஒரு நிதி மந்திரியாகவும், சென்னை சட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், தேர்தல் இலாகா மந்திரியாகவும் இருந்த ஒரு முக்கியமான மனிதர் தோல்வியுற்றார் என்பது முழு இந்தியாவின் கவனத்தையும் கவரக்கூடிய செய்தி என்பதில் சந்தேகமில்லை. இதைக் கேள்வியுற்றால், காமராஜர் கதறியழுவார்; பண்டித நேரு பதறித் துடிப்பார். அதுவும் சென்னை மாகாணத் தேர்தலின் ஆரம்ப கட்டத்திலேயே இவ்வித அபாய அறிவிப்பு ஏற்பட்டிருப்பது, அகில இந்தியாவிலும் காங்கிரஸைக் கலகலக்கச் செய்து விடக் கூடுமே என்று காங்கிரஸ்காரர்கள் கண்ணீர் விடுவார்கள்; 'கல்கி' போன்ற ஏடுகள் கலங்கி நிற்கும்; ஆனந்த விகடன் ஆயாசப்படும்; 'தினமணி'கள் தீனக் குரலில் பேசும்.

கோபால ரெட்டி போன்ற சர்க்காரிலே செல்வாக்குப் பெற்ற மந்திரிகள், தாங்கள் அபேட்சகர்களாக நிற்கும் தொகுதிகளிலே பொதுமக்களுக்கு நன்மையான

காரியங்கள் பல செய்திருக்கின்றனர். பொது மக்களின் வரிப்பணமாகிய சர்க்கார் பணத்தை மந்திரிகள் தங்கள் பணமாக மதித்து அவரவர் தொகுதிகளில் மக்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்தும், மந்திரிகள் தேர்தலில் தோல்வியடைகின்றனர் என்றால், காங்கிரஸ் மந்திரிகளுக்கு மக்களிடையே எவ்வளவு மதிப்பு இருக்கிறதென்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

நிதியமைச்சரின் தொகுதியிலே பர்தா அணிந்த முஸ்லிம் பெண்கள், மூன்று மைல் தொலைவிலிருந்து நடந்துவந்து காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டார்கள் என்று கனம் கோபால ரெட்டியார் கூறுகின்றார். முஸ்லிம் லீக் தலைவர்களின் உத்திரவையும் மீறி முஸ்லிம்கள் காங்கிரஸை ஆதரித்ததற்குத் தமது மகிழ்ச்சியையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுவதாகவும் அவர் கூறுகின்றார். முஸ்லிம்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று காங்கிரஸ் பெட்டியில் வோட் போட்டதாக கோபால ரெட்டியார் கூறுவது உண்மையாயின், அந்த வோட்டுகள் கோபால ரெட்டிக்குப் போட்ட வோட்டுகளாக இருக்குமே யன்றி, காங்கிரஸுக்குப் போட்ட வோட்டுகளாக இருக்க முடியாது. காங்கிரஸுக்கு வோட்டுப்போடுவதற்காகப்பர்தா அணிந்த பாவையர் பல மைல்களுக்கு அப்பாலிருந்து நடந்து வந்திருக்க மாட்டார்கள். கோபால ரெட்டியார் கொஞ்ச காலமாக முஸ்லிம்களின் நண்பராக நடந்து வருகின்றார். முஸ்லிம்களின் அரசியல் கருத்துக்களையும் அனுதாபத்துடன் பரிசீலனை செய்து, அவர்களுக்கு இந்த நாட்டின் அரசியல் வாழ்வில் நியாயமான பங்கு கிடைக்க வேண்டுமென்று பேசுகிறார். எனவேதான் முஸ்லிம்கள் கனம் கோபால ரெட்டியை ஆதரித்திருக்கின்றனர். ஆனால் காங்கிரஸை ஆதரித்தனர் என்று கூறுவது உண்மையல்ல.

நிதிமந்திரியின் தோல்வி நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. கோபால ரெட்டி மட்டுமின்றி, காங்கிரஸ் மந்திரிகள் அத்தனை பேர்களும் தேர்தலில் தோல்வியடைய வேண்டியவர்களே. அந்த அளவிற்கு சென்ற 4 வருட காங்கிரஸ் ஆட்சியில் நாட்டுப் பொது மக்களுக்குக் கோபம் ஏற்பட்டிருக்கிறது. அதனைக் காட்டிக் கொள்ள ஒரு சந்தர்ப்பந்தான் கிடைக்கவில்லை. காங்கிரஸுக்குப் போட்டியாக ஒரு பலமுள்ள எதிர்க்கட்சி இந்த நாட்டிலே இன்னும் உருவாகாமையால், காங்கிரஸ் மந்திரிகள் மீண்டும் சில இடங்களில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. உதயகிரி தொகுதியில் கனம் கோபால ரெட்டியை எதிர்த்தது போல் ஒரு வன்மையுள்ள எதிர்க்கட்சியின் அபேட்சகர், மற்ற மந்திரிகளையும் நாடெங்கும் எதிர்த்து நின்றிருந்தால், சுகாதார மந்திரி காளா வெங்கடராவைப் போல் மற்றும் பல மந்திரிகளும் நிச்சயமாக முறியடிக்கப் படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம் லீக் : அன்றும் இன்றும்

இந்தியப் பிரிவினைக்கு முன்பு இந்த நாட்டிலே இருந்து வந்த முஸ்லிம் லீகுக்கும், இன்றுள்ள லீகுக்கும் எத்தனையோ விதமான வேற்றுமைகள் உண்டு. அப்போது இருந்த தலைமைப் பதவி இன்று இல்லை. கடந்த காலத்தைப் போல் அகில இந்திய அடிப்படையில் அது இன்று இயங்கவில்லை. தலைவருக்குட் பக்க பலமும் பண பலமும் இல்லை. முஸ்லிம் லீகுக்கும் சில மாகாணங்களில் மெஜாரிட்டி இருக்கிறது என்று நெஞ்சு உயர்த்திப் பேசக்கூடிய நிலையிலும் இன்று இல்லை.

இவ்வளவு மோசமான நிலையிலே இன்றைய முஸ்லிம் லீக் இயங்கிக் கொண்டிருப்பினும், சென்னை மாகாண முஸ்லிம்களிடையே முஸ்லிம் லீகின் செல்வாக்கு முன் போலவேதான் இன்னும் இருக்கிறதென்பதை அறியும்போது எதிரிகள் ஆச்சரியப்படுவார்கள்; நேருஜி நிதானம் தவறுவார்; காமராஜர் கருத்திழந்து பேசுவார்.

நாட்டிலே நடைபெறும் பொதுத் தேர்தல்களில் யாரை ஆதரிப்பது என்பதற்காக முஸ்லிம் லீகின் உத்திரவை எதிர்பார்த்து எத்தனையோ ஊர்களில் முஸ்லிம்கள் காத்திருந்தார்கள் என்று கேள்வியுறுகின்றோம். நாட்டின் பல பாகங்களிலும் அபேட்சகர்களாக நிற்கின்ற பல திற கட்சியினரும் தனிப்பட்ட மனிதர்களும் ஆங்காங்கேயுள்ள முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகளை அணுகி, முஸ்லிம்களின் ஒருமுகமான ஆதரவு தங்களுக்கு வேண்டுமென்று கோரியபோது, முஸ்லிம் லீகின் உத்திரவுப்படி யாரை ஆதரிக்க வேண்டுமோ அவர்களையே ஆதரிக்கப் போவதாக அந்தந்த ஊர்களிலுள்ள முஸ்லிம் தலைவர்கள் கூறியிருக்கின்றனர். இதற்குப்பின், காங்கிரஸ் அபேட்சகர்கள் உட்பட

எத்தனையோ அபேட்சகர்கள் முஸ்லிம் லீக் தலைவருக்கு நேரில் எழுதியும், தூதர்களை அனுப்பியும், சிபாரிஷ்களை மோதவிட்டும் தங்களையே தேர்தலில் ஆதரிக்க வேண்டுமென்று கோரியிருக்கின்றனர். இதன் காரணமாக முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டினருக்கு நடைமுறையில் பல விதமான தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. அனேக தொகுதிகளில் யாரை ஆதரிப்பது என்று தோன்றாமல் கடைசி நிமிஷம் வரையில் திகைத்துத் தடுமாறியிருக்கின்றனர். முஸ்லிம்களின் ஆதரவைக்கோரும் அபேட்சகர்களின் யோக்கியதாம்சங்களை அறிந்து ஆவன செய்ய அவர்களுக்கு அவகாசம் இல்லாமற் போய் விட்டது. இத்தகைய நிலைமை முஸ்லிம் லீக் தலைவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கின்றோம். அப்படி எதிர்பார்த்திருந்தால், ஒரு வருடத்துக்கு முன்பே நாடெங்கும் முஸ்லிம் லீக் முன்போல் ஸ்தாபன ரீதியில் ஒவ்வொரு ஊரிலும் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள். நாட்டுப் பிரிவினைக்கு முன்பு நாடெங்கும் சின்னஞ் சிறு ஊர்களிலெல்லாம் இயங்கிய பிரைமரி லீகுகள் இன்றும் இருந்திருந்தால், முஸ்லிம் லீக் பார்லிமெண்டரி போர்டினருக்கு இப்போது ஏற்பட்ட எதிர்பாராத தொல்லைகள் எதுவும் தோன்றியிராது.

இன்று திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் நாடெங்கும் ஸ்தாபன ரீதியில் இயங்குவது போல் முஸ்லிம் லீகும் இயங்கியிருந்தால், முஸ்லிம் லீக் தலைவருக்கும் பார்லிமெண்டரி போர்டினருக்கும் எவ்வித தொல்லையும் ஏற்பட்டிராது. ஆங்காங்கேயுள்ள முஸ்லிம் சமூக மக்களும் என்ன செய்வது என்று தோன்றாமல் திகைத்து நின்றிருக்க வேண்டியதில்லை. யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்யுமுன், ஒவ்வொரு ஊரிலுமுள்ள முஸ்லிம் லீகின் கருத்தை அறிந்து கடமையைச் செய்திருக்கலாம். இந்த நாட்டிலுள்ள திராவிடச் சமூக உறுப்பினர்களைவிட எவ்வளவோ ஒற்றுமையும் ஒருமைப்பாடும் அதிகமாகப் பெற்றவர்கள் முஸ்லிம்கள் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. எனினும் அவர்களின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் கட்டி வளர்க்கத் தகுந்தவாறு முஸ்லிம் லீக், சமீப காலத்தில் செயலாற்றத் தவறிவிட்டது. லீக் தலைவர்களும் முஸ்லிம் வாலிபர்களும் சற்றே முன்யோசனையுடன் செயலாற்றியிருந்தால் இத் தேர்தலில் இன்னும் பல இடங்களில் காங்கிரஸை முறியடித்திருக்கலாம். முஸ்லிம் லீகை முஸ்லிம்களின் பிரதிநிதி ஸ்தாபனம் என்று ஒப்புக்கொள்ள மறுக்கும் காங்கிரஸுக்குச் சரியான ஒரு பாடமும் கற்பித்திருக்கலாம்.

சென்னை மாகாணத்திலே தேர்தலுக்காக வாக்காளர் தொகுதிகளைப் பிரித்தபோது, முஸ்லிம்களின் வோட்டு பலம் சிதறிப் போகுமாறு காங்கிரஸ் சர்க்கார் ஒரு சூழ்ச்சியைக் கையாண்டிருக்

கிறது. அத்தகைய சூழ்ச்சியை முஸ்லிம்கள் நிச்சயமாக முறியடித்திருக்க முடியும். அதற்காக தீவிரமாகவும் முன்யோசனையுடனும் முஸ்லிம்கள் செயலாற்றியிருக்க வேண்டும். முஸ்லிம்களின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் இன்னும் அதிகமாகக் கட்டி வளர்ப்பதில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஒற்றுமை, கட்டுப்பாடு என்று வாயளவில் சொல்லிக் கொண்டு உட்கார்ந்து விடுவதில் பயனில்லை. செயலில் இறங்கியிருக்க வேண்டும். அவ்விதம் செய்திருந்தால் சுயேச்சை அபேட்சகர்கள் மட்டுமின்றி, காங்கிரஸ் அபேட்சகர்கள் கூட முஸ்லிம் லீகின் ஆதரவை நாடி ஓடிவந்திருப்பார்கள்; நாட்டின் பல பகுதிகளில் தேர்தலின் ஏற்படக்கூடிய வெற்றி, தோல்விகளின் துருப்புச்சீட்டை முஸ்லிம்கள் தங்கள் கைகளிலே வைத்திருக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கலாம். ஒரு சரியான சந்தர்ப்பத்தைத் தென்னிந்திய முஸ்லிம்கள் கைநழுவ விட்டுவிட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

திருநெல்வேலிப் பிரமுகரின் கூற்று

சென்ற டிஸம்பர் மாத இதழில், "பொதுத் தேர்தலும் முஸ்லிம் லீகும்" என்ற தலைப்பின் கீழ் நாம் எழுதிய கருத்தை மறுத்து, திருநெல்வேலிப் பிரமுகர் ஒருவர் எமக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதியிருக்கின்றார். அதன் சரியான நகல் பிரதியொன்று "முஸ்லிம்" இதழில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது. மேற்படி கடிதம் மிகவும் நீளமாக இருப்பதாலும், இடமின்மையாலும் அதனை இந்த இதழில் பிரசுரிக்க வியலாமைக்கு வருந்துகிறோம்.

கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுக்க, என்றும் நாம் தயாராயிருக்கின்றோம். ஆனால், வெறுங் கற்பனை செய்து நம்மைக் குறைகூறுவதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

தேர்தல் விஷயத்தில் முஸ்லிம்களின் ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் 'முஸ்லிம் முரசு' குந்தகம் விளைக்கிறது என்ற பொருள்பட, திருநெல்வேலி பிரமுகர் தமது கடிதத்தில் எழுதியிருக்கின்றார். இதைப்பற்றிய மறுமொழியை அறிய வேண்டுமானால், "கடந்த மூன்றரை ஆண்டு காலமாக முஸ்லிம் முரசைப் படித்துவரும் நேயர்களைக் கேட்டுப் பாருங்கள்!" என்றுதான் நமது நெல்லைப் பிரமுகருக்கு நாம் அறைகூவ முடியும். அன்று முதல் இன்றுவரை முஸ்லிம்களின் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் இடைவிடாமல் வற்புறுத்தி வந்திருப்பது இந்த "முஸ்லிம் முரசு" ஒன்றுதான் என்பதை நமது வாசக நேயர்கள் அனைவரும் நன்கு அறிந்திருக்கின்றனர். எனவே,

நெல்லைப்பிரமுகரின் குற்றச் சாட்டு நேர்மையற்றது என்று சொல்ல வேண்டியதில்லை.

உண்மையில், இன்று நடை பெறும் பொதுத் தேர்தல்களில் முஸ்லிம்களின் ஒற்றுமையும் கட்டுப்பாடும் முன்போல் காணப் படாமற் போனதற்குக் காரணம், முஸ்லிம் லீகின் முன் யோசனை யற்ற தன்மைதான் என்பதை இந்த இதழின் முரசொலி யிலேயே விளக்கி யிருக்கின்றோம்.

முஸ்லிம் லீகின் மீது நாம் குறை கூறியதற்குரிய முக்கிய மான காரணத்தை மட்டும் நமது நெல்லைப் பிரமுகர் 'நைஸாக' மறைத்து விட்டு, அவருக்குத் தேவையான சில வாக்கியங்களை மட்டும் நமது கட்டுரையிலிருந்து எடுத்து எழுதுகின்றார்.

எதற்காக நாம் முஸ்லிம் லீகைக் குறைகூறி யிருந்தோம் என்ற உண்மையே நமது திரு நெல்வேலிப் பிரமுகரின் திரு முகத்தில் பிரஸ்தாபிக்கப்பட வில்லை. முஸ்லிம் லீகின் ஆதரவு பெற்ற அபேட்சர்களின் பட்டிய லில் சில ஆர். எஸ். எஸ். களும் இருந்தார்கள் என்பது எமது கவனத்துக்குக் கொண்டு வரப் பட்டபோது, அதனைக்கண்டித்து எழுதிவிட்டு, "அறியாமையால் இத்தகைய அசம்பாவிதங்கள் நிகழ்வதால், எந்த அபேட்சகரை யும ஆதரிக்குமாறு முஸ்லிம் களுக்கு முஸ்லிம் லீக் உத்திர விடுவதை விடுத்து, அவரவர் களுக்கிசைந்த, காங்கிரஸல்லாத, வகுப்புவாத புத்தியற்ற, திறமை யும், நாணயமும் ஒழுக்கமும் அதிகமாய்ப் பெற்ற அபேட்சர் களையே ஆதரிக்கலா மென்று அறிவித்து விடுவது நலம்" என எழுதியிருந்தோம்.

நமது கருத்தை ஆதரித்து, எத்தனையோ வாசக நேயர்கள், எழுதியிருக்கின்றனர்; நேரில் தெரிவித்தும் இருக்கின்றனர்.

திருநெல்வேலிப் பிரமுகர் இன்னுமொரு இல்லாத விஷயத் தையும் இருப்பதாகக் கற்பனை செய்து எழுதுகிறார். அவர் தமது கடிதத்தில், "முஸ்லிம் லீகின் மீது தங்களுக்குள்ள அபிப்ராயபேதம் காரணமாகவே இவ்வாறு எழுதி யிருப்பதாக யூகிக்க வேண்டியிருக்கிறது" என்று எமக்கு எழுதுகின்றார்.

சென்ற மூன்றரை ஆண்டு களாக முஸ்லிம் முரசைப் படித்து வரும் பல்லாயிரம் வாசகர்கள் இதற்குப் பதில் கூறக்கடவர்.

தேர்தல் காலத்தில் ஏற்பட்ட தடுமாற்றமோ என்று நமது திரு நெல்வேலிப் பிரமுகர் ஒரு கால் நினைக்கக்கூடும். இப் பொதுத்தேர் தலில் எந்த அபேட்சகரையேனும் ஆதரிக்க வேண்டுமென்று லீக் தலைவர்களை நாம் நாளது வரை அணுகியதுமில்லை; அதற்கு அவர் கள் மறுத்தது மில்லை. அல்லது, முஸ்லிம் முரசு தோன்றிய நாள் முதல், நாளது வரையில் லீக் தலை வர்களிடம் நாம் எந்த விதமான உதவியும் நாடிச்சென்ற தில்லை என்பதை நமது நெல்லைப் பிர முகர் அறிய விரும்புகிறோம்.

மூன்ருவதாக, சோஷியலிஸ்ட் கட்சி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சியுடன் தேர்தலில் முஸ்லிம் லீக் ஒத்துழைத் திருந்தால், அனேக இடங்களில் காங்கிரஸின் வெற்றியைத் தோல்வியாக மாற்றி விடக்கூடிய மகத்தான செல்வாக்கை முஸ்லிம்கள் பெற்றிருக்கலாம் என்ற பொருள்பட எழுதி, மேற்படி இரண்டு கட்சிகளுடன் முஸ்லிம் லீக் ஒத்துழைக்க முன்வராமற் போனது தவறு என்று எழுதியிருந்தோம்.

ஆனல், இன்று வரும் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது, சோஷியலிஸ்ட்டுகளுடன் முஸ்லிம் லீக் ஒத்துழைக்காமற்போனதைப்பற்றி வருந்த வேண்டியதில்லே. எனினும், கம்யூனிஸ்ட்டுகளுடன் ஒத்துழைத்திருந்தால், இன்னும் பல இடங்களில் காங்கிரஸ் நிச்சயமாக முறியடிக்கப் பட்டிருக்கும். ஆனல் கம்யூனிஸ்ட்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே அடிப்படையில் பல வேற்றுமைகள் இருப்பதால், முஸ்லிம் லீக் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைக்க முடியாது என்று நமது நெல்லைப் பிரமுகர் எழுதுகிருர். அரசியலில் இத்தகைய அடிப்படை ஒற்றுமை — வேற்றுமைகளைக் கவனிப்பதாயின், இந்தக்கால அரசியல் துறையிலிருந்து முஸ்லிம்கள் அடியோடு வெளியேறிவிடுவதே அறிவுடைமையாகும்.

"எந்தக் கட்சியையும் தோற்கடிக்க வேண்டுமென்பதும், அதற்காக எம்முறையையும் கையாள்வோம் என்பதும் முஸ்லிம் லீகின் கொள்கையல்ல. வரப்போகும் தேர்தலில் முஸ்லிம்களுக்குள் ஐக்கியத்தை உண்டு பண்ணி, அவர்களின் ஓட்டுக்களைப் பயன் பெறத்தக்க வழியில் உபயோகிக்க வேண்டும் என்பது தான் முஸ்லிம் லீகின் நோக்கம்" என்று நமது திருநெல்வேலிப் பிரமுகர் எழுதுகின்ருர்.

உண்மையில் முஸ்லிம்களின் ஓட்டுக்கள் பயன் பெறத்தக்க வழியில் இத்தேர்தலிலே உபயோகிக்கப்பட வேண்டுமாயின், முஸ்லிம் லீக் ஏதாவது ஒரு முற்போக்குக் கட்சியுடன் தற்காலிகமாகச் சேர்ந்து நின்றே போராடியிருக்க வேண்டும். எந்தக் கட்சியையும் தோற்கடிக்க வேண்டுமென்பது நோக்கமல்லவென்ருல், இத்தேர்தலில் முஸ்லிம் லீக் கலந்து கொண்டிருக்க வேண்டியதே இல்லை.

கம்யூனிஸ்ட்டுகள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்ருல், திராவிடக் கழகத்தினரைப் பற்றியும் திருநெல்வேலிப் பிரமுகர் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருப்பார் என்று நம்புகிருேம். அப்படியாயின், சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் ஆதரவு பெற்றுத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஜனுப் எம். எஸ். அப்துல் மஜீது அவர்களைப்பற்றி நமது நெல்லைப் பிரமுகர் என்ன நினைக்கின்ருர்? எம். எஸ். அப்துல் மஜீது சாஹிப் அவர்கள் முஸ்லிம் லீகின் ஒரு முக்கிய உறுப்பினர்

மட்டுமின்றி, லீக் பார்லிமெண்டரி போர்டின் அங்கத்தினராகவும் இருக்கின்றார். காங்கிரஸை முறியடிக்க வேண்டுமென்னும் ஒரே குறிக்கோளுடன்தான் இத்தகைய கூட்டுறவும் ஒற்றுமையும் நாட்டிலே பல இடங்களில் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கின்றன. இதை யொட்டித்தான், நாமும் அத்தகைய கூட்டுறவு வேண்டுமென்று கூறினோம். முஸ்லிம்களுக்குள் ஐக்கியத்தை உண்டு பண்ணி, அவர்களின் ஓட்டுக்கள் பயன் பெறத்தக்க வழியில் உபயோகிக்கப்பட வேண்டுமென்பது தான் முஸ்லிம் லீகின் நோக்கமாயின், பிற கட்சிகளின் கூட்டுறவு அவசியமல்லவா என்பதை அன்பர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

முன்னொரு காலத்தில் அகில இந்திய முஸ்லிம் லீக ஜின்னாவின் தலைமையில் டெல்லி சட்ட சபையில் (King-Maker) "கிங்மேக்கரா" இருந்து, காங்கிரஸை ஒரு சமயம் எதிர்த்தும், மற்றொரு சமயம் ஆதரித்தும், சர்க்காருக்கு வெற்றி தோல்விகளை மாறி மாறி அளித்து வந்ததல்லவா? அதே வண்ணமாக சென்னை ராஜ்யத்திலும் முஸ்லிம் லீக் ஒரு "கிங்மேக்"காராக இருக்க முடியும். இதற்கு அடிப்படைக் கொள்கைகளை அலசிப்பார்த்துக் கொண்டிருந்தால், அரசியலில் இன்று அனாதைகளைப் போல இருக்க வேண்டியது தான்.

அரசியலில் மைனாரிட்டிகளாக இருப்பவர்கள் மற்றவர்களுடன் ஒத்துழைக்க மறுத்தால் மதிப்புப் பெறமுடியாது. கொள்கையின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைக்க மறுத்த ஜெயப்பிரகாஷ் நாராயணனின் சோஷலிஸ்டுக் கட்சி இத்தேர்தலில் படுதோல்வி அடைந்திருப்பதுடன், எதிர்க்கட்சியாகிய காங்கிரஸுக்கு அநேக இடங்களில் வெற்றி கிடைக்கவும் காரணமாக அமைந்து விட்டது என்பதை அன்பர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

கம்யூனிஸ்ட்கள் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்றும், ஆகையால் அவர்களுடன் முஸ்லிம்கள் அரசியல் கூட்டுறவு கொள்ள முடியாது என்றும் கூறிக்கொண்டு குந்திவிடுவதில் பயனில்லை. கம்யூனிஸத்தைவிட இஸ்லாம் சிறந்தது என்பதை உலக மக்கள் உணருமாறு முஸ்லிம்கள் பிரசாரம் செய்தல் வேண்டும். இஸ்லாமே சிறந்தது என்பதை முஸ்லிம்கள் செயலில் காட்டவேண்டும். கம்யூனிஸ்ட்கள், ஏகதெய்வக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு இஸ்லாமிய அணியில் இணைந்து நிற்கவேண்டுமாயின், அவர்களை உலகாயதவாதிகள் என்று கூறி உதறித்தள்ளக் கூடாது. ஆனால் அவர்களும் இஸ்லாத்தின் கொள்கையில் இணைந்து நிற்குமாறு செயலாற்ற வேண்டும்.

கம்யூனிஸ்ட்கள் தங்களின் பலாத்காரக் கொள்கையில் நம்பிக்கை இழக்குமாறு செய்யக்கூடியது 'இஸ்லாம்' ஒன்றுதான். நமது கடமையைச் செய்வதன்

மூலம், கம்யூனிஸ்ட்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதை விடுத்து, அவர்களைக் கண்டு காத தூரம் ஓடுவது அறிவுடைமை யல்ல வென்பதை நமது சென்னைப் பிரமுகருக்கு நட்புணர்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

—★—



சென்னையின் புதிய மேயர்

★

பொதுநலத் தொண்டில் சிறந்த ஆர்வமும், ஏழைகளிடம் அன்பும், நண்பர்களிடையே நல்ல செல்வாக்கும் பெற்ற பிரபல வர்த்தகர் ஜனாப் சி. எச். சிப்கத்துல்லா, B. A., அவர்கள், சென்ற நவம்பர் இறுதியில் சென்னை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கின்றார்.

வாழ்த்துகிறோம்!

70 வயதுக்கு மேலும் இளமை குன்றாத தோற்றமும் மனவெழுச்சியும் நிறையப் பெற்ற, தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த தக்காச்சி வாசியும் பொதுநலப் பிரியரும், எனது ஆருயிர் நண்பருமாகிய ஜனாப் ஓ. இ. முஹம்மது ஷரீப் சாஹிப் அவர்களுக்கு கடந்த கார்த்திகை 21-ந் தேதியன்று 74-வது வயது பிறந்த செய்தியறிந்து அப்பெரியாரின் நண்பர்களெல்லாம் அகமகிழ்வதுடன், அவரது நீண்ட ஆயுளுக்கும் நோயற்ற வாழ்வுக்கும் ஆண்டவன்பால் இறைஞ்சுவதாக ஹாஜி. என். எஸ். பிச்சை, ஜே. பி. (மலாயா) எழுதுகின்றார்.

முக்கிய அறிவிப்பு

நாளது பிப்ரவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று
முஸ்லிம் முரசு
வெளிவருமென்று வாசக நேயர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு,
சென்னை-1.

அட்டைப்படம்

'அண்ணா'வின் தலைமையிலே...

சென்ற மாத மத்தியில் சென்னை மாநகரில் ஒரு மாபெரும் மாநாடு நடைபெற்றது. 4 நாட்கள் தொடர்ந்து நடந்த மேற்படி மாநாட்டிலே ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தென்னிந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதி நிதிகளாகத் திரண்டு வந்து கலந்து கொண்டார்கள். இலட்சக்கணக்கான பார்வையாளர்கள், சென்னை மாகாணத்தின் பல்வேறு ஜில்லாக்களிலிருந்தும் குடும்ப சகிதமாய் அதில் கலந்து கொண்டார்கள். இளைஞர்களின் எழுச்சிக் குரலாகிய அறிஞர் அண்ணாதுரையவர்கள் மேற்படி மாநாட்டுக்குத் தலைமைவகித்து ஆற்றிய அரிய சொற்பொழிவு, ஆயிரமாயிரம் இளைஞர்களின் எழுச்சிக்குரலாக இருந்தது. அண்ணாதுரை காட்டும் அரசியல் பாதையில் இலட்சக்கணக்கான திராவிட மக்கள், ஆடவரும் பெண்டிரும் அணிவகுத்துச் செல்ல சித்தமாயிருக்கின்றனர் என்பதை அந்த மாபெரும் மாநாட்டின் நிகழ்ச்சிகள் நிரூபித்தன. நேரில் காண்பவனைவருக்கும், அந்த மாநாடு ஒரு கண் கொள்ளாக் காட்சியாகவே இருந்தது. தென்னிந்தியாவின் எதிர்கால அரசியல் தலைமை அறிஞர் அண்ணாதுரைக்கே என்று சொல்லுமாறு, மேற்படி மாநாட்டிலே பங்குகொண்ட பல இலட்சம் மக்கள் 'அண்ணா அண்ணா' என்று அன்பார்வம் தோன்ற ஆரவாரத்துடன் அவரை வரவேற்று உபசரித்த காட்சி ஒரு கண் கொள்ளாக் காட்சியாகவே இருந்தது.

தென்னிந்தியாவிலே, இன்று திராவிட இளைஞர்களின் அரசியல், சமூக சீர்திருத்தங்களின் எழுச்சிக் குரலாகத் திகழும் அந்த திராவிடத் தளபதியின் திருவுருவப் படமே இந்த இதழின் அட்டையை அலங்கரிக்கின்றது.

"முஸ்லிம் முரசு"

3-ம் ஆண்டு பைண்டு வால்யூம்

(ஈத், மீலாத் மலர்களுடன் 11 இதழ்கள்)

இதில் உள்ள முக்கிய விஷயங்கள் :

நவீனத் துருக்கியில் நான் கண்ட புதுமைகள் ! (வெண்டல் வில்கி)
காயிதே ஆஸம் ஜின்னா ('டெக்கான் டைம்ஸ்' ஆசிரியர் ஏ. ஏ. ரஹூப்)
ஜமாலுத்தீன் ஆப்கானி (வரலாறு)
அமெரிக்காவில் லியாக்கத் அலீயும் அவரது மனைவி பேகம் லியாக்கத் அலீயும் (படங்களுடன்)
இஸ்லாமும் திருநபியும் (ஜார்ஜ் பெர்னார்ட்ஷா)
பேகம் லியாக்கத் அலீகான் (வால்ட்டர் பிரிக்ஸ்)
ஆகாகான், லியாக்கத் அலீகான் (வரலாறு)
இறைவனும் இக்பாலும் (ஷிக்வா, ஜவாபெ ஷிக்வா)
மொரோக்கோவில் முஸ்லிம்களின் நாகரிகமும் பண்பாடும்.
பாக்கிஸ்தானிலே ஒரு புதுமையான சதி
காஷ்மீரிலே இஸ்லாம் பரவிய வரலாறு
பாக்கிஸ்தான் — ஏழைகளின் சொர்க்கம் !

இவைகளுடன், அருமையான சிறு கதைகளும், சிறந்த சினிமா நட்சத்திரங்களாகிய நர்கிஸ், நஸீம், மதுபாலா, நிம்மி, மீனா முதலியோரின் வாழ்க்கைச் சித்திரங்களும் இதில் உள.

ஒரு சில வால்யூம்களே கைவசமிருப்பதால் தேவையுள்ளவர்கள் உடனே எழுதவும். (மலேயா ஆர்டர்களுக்கு முன்பணம் தேவை.)

விலை ரூ.4 —8—0 (வி. பி. தபால் செலவு தனி)
மானேஜர், "முஸ்லிம் முரசு"
132, பிராட்வே :: சென்னை-1.

முதல் இதழ் 15-2-52ல் வெளி வருகிறது !

மிட்டாய்

குழந்தைகளின் யாதமிருமுறைப் பத்திரிகை

உங்கள் குழந்தைகளின் அறிவை வளர்க்கும் விஷயங்கள் —கதைகள்—கட்டுரைகள் நிறைந்த சுவையான பத்திரிகை.

தனிப் பிரதி விலை 2 அணா

வருஷ சந்தா ரூ. 3-0-0

உடனே ரூபாய் மூன்று அனுப்பி உங்கள் குழந்தைகளை சந்தாதாரராகச் சேர்த்து விடுங்கள் அப்புறம் உங்களுக்குக் கவலையே இல்லை. அவர்கள் அறிவுக்கதிர்களாக ஆகிவிடுவார்கள்.

விவரங்களுக்கு
"மிட்டாய்" காரியாலயம்
தபால் பெட்டி 1793
37. அரண்மனைக்காரத் தெரு சென்னை-1

பரிசுத்த மனைவியரும் குமாரிகளும்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருமை மனைவியரும் குமாரிகளும் பற்றிய வரலாறுகள் அடங்கிய நூல்.

விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு தனி

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே, சென்னை-1.

மண வாழ்க்கையின் மர்மங்கள்

(படங்களுடன்)

இல்வாழ்க்கைக்கேற்ற இனிய நூல்

மலிவுப் பதிப்பு ரூ. 3-12-0
பரிசுப் பதிப்பு ரூ. 5--8-0

V. P. தபால் செலவு தனி

அன்பு நூல் நிலையம்,

132, பிராட்வே, சென்னை-1.

யூனானி ஹக்கீம் முறை

யூனானி சாலாமிசரி ஹல்வா

விசேஷ தயாரிப்பு (அரண்மனை முறை)

பாதாம் பருப்பு, பஞ்சாப் சாலாமிசரி வகைகள், பருப்பினங்கள், பழ வகைகள், தங்கம். வெள்ளி, கற்கண்டு, தேன், நெய் முதலியவைகளில் யூனானி பாகமாய் தயாரித்தது சாப்பிடுவதற்கு தேவாமிர்தம் போன்றது. மூளை, இருதயம், நரம்பைப் பற்றிய வியாதிகளையும், ரத்தக் கொதிப்பு, சோர்வு, எலும்புருக்கி, அதிக உஷ்ணம் முதலிய வியாதிகளையும், இந்திரியஸ்கலிதம், ஆண்மைக் குறைவு, இவற்றையும் போக்கும். மூளையையும் நரம்புகளையும் பலப்படுத்தும். இருதயத்திற்கும் தசைநார்களுக்கும் பலம் தரும், இரத்தத்தை சுத்திசெய்து, அதை விருத்தி செய்யும். வீரிய விருத்தியும், தேக காந்தியும் கண்களுக்கு ஒளியும் உண்டாக்கும். தாது புஷ்டியில் சிறந்தது, கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஒரு வரப்ரசாதம் போன்றது. கர்ப்பதோஷங்கள் நீங்கி நல்ல குழந்தையைப் பெறலாம். வயது சென்றவர்களும் இதை உபயோகித்தால் தேகத் தளர்ச்சியும், பலக் குறைவும் வெகு சீக்கிரத்தில் நீங்கும், இதில் மயக்கமுள்ள வஸ்துக்கள் கிடையாது. ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்,

1-சேர் டப்பி 1-க்கு ரூ. 10   ½-சேர் டப்பி 1-க்கு ரூ. 5

பூர்ண சந்திரோதயம் என்னும் தங்க சிந்தூரம்

அசல் தங்கத்தினால் செய்தது 40-நாள் மருந்து ரூ.40-0-0
25-நாள் மருந்து ரூ. 25-0-0 12-நாள் மருந்து ரூ. 12-0-0

மகா சந்தனாதித் தைலம்

ஸ்நானத்துக்கும் தலையில் தடவிக்கொள்வதற்கும் இதை உபயோகித்தால் மூளைக்குக் குளிர்ச்சியும் மனதுக்கு உற்சாகமும் உண்டாகிறது. நரம்புகளை வலுப்படுத்தி தேக சுகத்தை அளிக்கிறது. ஞாபகச் சக்தியை அதிகப்படுத்துகிறது. வாத, பித்த, கபரோகங்களைக் கண்டிக்கிறது. எலும்பில் சேர்ந்த உஷ்ணத்தைப் போக்கி உடல் நிலையைச் சமனப்படுத்துகிறது. முகவசீகரமும் மேனியில் மினுமினுப்பும் தருகிறது. ஒருமுறை உபயோகித்துப்பார்த்தால் இதன் பெருமை விளங்கும் தமிழ் நாட்டின் பிரமுகர்கள் பலரால் இது உபயோகிக்கப்பட்டு, நற்சாட்சிப் பத்திரமும் பெற்றிருக்கிறது. விபரத்துக்கு எழுதவும்.

12 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு ரூ. 3—4—0
6 „ „ „ ரூ. 1-12-0

(வி. பி. தபால் செலவு தனி)

உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் ஏஜண்டுகள் தேவை

AYURVETHA SIDDHA VAITHYAM

K. RAMANATHAN PILLAI,

Proprietor : A. KOLANTHAVELU PILLAI SONS.,

AYURVEDA SIDDHA VAITHYASALA,

Pettai North Street, Kumbakonam.

நபிகள் நாயகம்

வாழ்வும் வாக்கும்

மகான் முஹம்மது(ஸல்) இயற்றிய புதுமைகள்

அப்துல் மஜீது, எம். ஏ.

மாபெரும் பிரெஞ்சுக் கவிஞரும் அரசியல் வாதியுமாகிய **லமர்ட்டைன்** *என்பவர், 1854-ல் எழுதியுள்ள "துருக்கியர் சரித்திரம்" என்னும் நூலில், இரண்டாவது வால்யுமில், 276-277 பக்கங்களில் பின்வரும் கருத்துக்கள் காணப் படுகின்றன.*

"ஆண்டவனுக்கும் அவனது சிருஷ்டிப் பொருளுக்குமிடையே நிலவும் மூடக் கொள்கைகளைக் கல்லியெறிந்து, மனிதன் கடவுளையும், கடவுள் மனிதனையும் நேசிக்கச்செய்து, அர்த்தமில்லாத விக்கிரக வணக்கமென்னும் பல தெய்வ வழிபாட்டைப் போக்கி, பகுத்தறிவும் தெய்வீகத் தன்மையும் பொருந்திய ஏகதெய்வக் கொள்கையை உலகிலே நிலைபெறச்செய்வது என்னும் மனித சக்தியை மீறிய மகத்தான இலட்சியத்தை விட வேறு ஒரு இலட்சியத்தை எந்த மனிதரும் இன்றுவரை தனது குறிக்கோளாகக் கொண்டதில்லை.

" மனித சக்திகளையெல்லாம் மிகைத்த ஒரு மாபெரும் காரியத்தைச்சாதிப்பதில் வேறு எந்த மனிதரும் அவ்வளவு குறைந்த சாத

னங்களை ஆயுதமாகக் கொண்டு இறங்கியதில்லை. அத்துணை பெரிய திட்டங்களைச் சிந்திப்பதற்கும் செயலாற்றுவதற்கும் அவரிடம் தன்னைத் தவிர வேறு ஒரு ஆயுதமும் கிடையாது. பாலைவனத்தின் ஒரு மூலையிலே ஒரு சில மனிதர்களைத் தவிர வேறு எந்தவிதமான இராணுவ பலமும் அவரிடம் இருந்ததில்லை.

"ஓரே வார்த்தையில் கூறுவதாயின், அவ்வளவு மாபெரும் நிலையான புரட்சியை வேறு யாரும் அத்துணைக் குறைவான காலத்தில் செய்து முடித்ததில்லை. அவரது உபதேசத்துக்குப் பின் இரண்டு நூற்றாண்டுகளுக்குள், இஸ்லாம் மக்களால் புகழப் பெற்றும், பலப் படுத்தப் பட்டும் மூன்று அரபு நாடுகளிலும் ஆதிக்கம் பெற்றுவிட்டது

ஏக தெய்வக் கொள்கையை நிலைபெறச் செய்யும் பொருட்டு, அது (இஸ்லாம்) பாரசீகம், கொராசான், டிரான்ஸாக்ஸேனியா, மேற்கு இந்தியா, சிரியா, எகிப்து, எதியோபியா, வட ஆப்ரிக்கா ஆகிய நாடுகளையும், மத்திய தரைக் கடலின் அநேகத் தீவுகளையும், ஸ்பெயினையும், பிரான்ஸின் ஒரு பகுதியையும் வெற்றி கொண்டுவிட்டது.

“மாபெரும் திட்டங்கள் வகுப்பதும், அவற்றை நிறைவேற்ற மிகவும் குறைவான சாதனங்களைப் பயன் படுத்துவதும், பிரம்மாண்டமான வெற்றிகளைப் பெறுவதுமே ஒரு மனிதனின் (GENIUS) மேதாவித் தனத்துக்கு அடையாளங்கள் என்றால், இந்த நவீன கால சரித்திரத்தில் எந்தப் பெரிய மனிதரையேனும் முஹம்மதுக்கு இணையாகக் கூற யார்தான் துணியக்கூடும்?

“நவீன கால சரித்திரத்தில் புகழ் வாய்ந்த மனிதர்கள் பலர், போர்களை நடத்தியிருக்கின்றனர் சட்டங்கள் இயற்றியுள்ளனர்; சாம்ராஜ்யங்களைச் சமைத்திருக்கின்றனர், ஆனால், அவர்கள் கண்டதெல்லாம் அழிந்துபோகக் கூடிய அதிகாரங்களையன்றி வேறில்லை. அவர்கள் இயற்றிய ஆட்சியும் அதிகாரங்களும் அவர்களின் காலத்திலேயே மடிந்து போயின. ஆனால், முஹம்மது நபியவர்கள், போர்களை நடத்தினார்; சட்டங்கள் இயற்றினார்; சாம்ராஜ்யங்களைக் கண்டார். அரச பரம்பரைகளைத் தோற்றுவித்தார்; இலட்சக்கணக்கான அவரது மக்கள் இப்பூவுலகின் மூன்றில் ஒரு பகுதியில் பரந்து வாழக் கண்டார். ஆனால், அவர் கடவுளின் சின்னங்களையும், கடவுள்களையும், மதங்களையும், கொள்கைகளையும், நம்பிக்கைகளையும், ஆத்மாக்களையுங்கூட திருத்தியமைத்தார். அவர் ஒரே யொரு வேத புத்தகத்தைக் கண்டார். அதன் ஒவ்வொரு எழுத்தும் சட்டமாகி விட்டது. எல்லாவிதமான மொழிகளையும் இனங்களையும் ஒன்றாக இணைக்கத் தகுந்த ஒரு ‘ஆத்மீக தேசியத் தன்மை’யை அவர் நிர்மாணித்தார். அந்த ‘முஸ்லிம் தேசியம்’ என்பது, பொய்யான கடவுள்களை வெறுத்து, உருவமற்ற ஒரே இறைவன் மீது உறுதியான அன்பு கொள்ளுமாறு அவர் செய்து விட்டார்.

“இத்தகைய தேசபக்திதான் முஹம்மது நபியின் குழந்தைகள் (முஸ்லிம்கள்) பெற்றுள்ள குணாதிசயமாகும். இப்பூவுலகின் மூன்றில் ஒரு பகுதியை வெற்றி கொண்டதுதான் அவர்களது கொள்கையின் அற்புத செயலாகும். அந்த அற்புதம் ஒரு சாதாரண மனிதருடையதல்ல; பகுத்தறிவு செய்த புதுமை! எண்ணற்ற கடவுள்கள் இருந்த ஒரு இடத்திலே ஏக தெய்வம் பற்றி எண்ணுவதே ஒரு அற்புதம்! அந்த எண்ணத்தை அவர்கள் வெளியிடத் துணிந்து, அதனை உச்சரித்தவுடனே, விக்கிரகங்கள் நிரம்பிய பழைய கோயில்

களுக்கெல்லாம், அது தீயிட்டுப் பொசுக்கி, உலகின் மூன்றிலொரு பகுதியை ஒளிபெறச் செய்து விட்டது!

"அவர்களின் வாழ்க்கை, தியானம், மூட நம்பிக்கைகளின்மீது அவர்கள் தொடுத்த கண்டன அம்புகள், விக்கிரகத் தொழும்பர்களின் ஆத்திரத்தை எதிர்த்து நின்ற அவர்களுடைய அஞ்சா நெஞ்சம், அந்த மக்களுடைய தொல்லைகளையெல்லாம் 15 வருட காலம் மக்காவிலே பொறுத்துக் கொண்டிருந்த உறுதி, பொது மக்களின் பெருங் கோபத்துக்கு ஆளாகியது, நாட்டு மக்களுக்குள்ளே (மகான் முஹம்மது நபி) தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொண்டது, இறுதியில் (மக்கா) நாட்டை விட்டே வெளியேறியது, இடைவிடாமல் சத்திய மதப் பிரசாரம் செய்து வந்தது, சம பலம் இல்லாதவர்களுடன் சண்டைகள் புரிந்தது, தங்களின் வெற்றியில் மாபெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தது, தோல்விகளைக் கண்டு கலங்காத உள்ளம் கொண்டிருந்தது, மனித சக்தியை மீறிய அச்சமற்ற தன்மையும், வெற்றியைக்கண்டு மயங்காத நிதான புத்தியும் பெற்றிருந்தது, சாம்ராஜ்யங்களைப்பற்றி அவர்கள் அறிவை நினையாதது, முடிவில்லாத அவர்களின் பிரார்த்தனை, ஆண்டவனுடன் அவர்கள் உரையாடிய அற்புத நிகழ்ச்சி, அவர்களின் மரணம், மரணத்துக்குப் பின் அவர்கள் கண்ட மாபெரும் வெற்றி, ஆகிய இவைகள் அனைத்தும் அந்த மனிதரின் பெருமைக்கு அத்தாட்சிகளாகின்றன. ஒரு நிலையான கொள்கையை இந்த உலகில் இடம் பெறச் செய்வதற்குத் துணைநின்ற காரணங்கள் இவைகளே. இந்தக் கொள்கையில் இரண்டு அம்சங்கள் உள்ளன:

(1) ஒரே கடவுள்தான் உண்டு
(2) அது உருவ மற்றது.

ஒன்று, ஆண்டவன் இருப்பதாகக் கூறுகின்றது. மற்றொன்று அவன் உருவமற்றவன் என்று சொல்லுகிறது. ஒன்று, வாளாயுதங்கொண்டு பொய்யான கடவுள்களைப் புறக்கணிக்கின்றது. மற்றொன்று, வார்த்தைகளைக் கொண்டு, ஒரு புதிய கொள்கையை உலகிலே நிலைபெறச் செய்கின்றது.

"ஒரு தத்துவ ஞானியாகவும், நல்ல சட்டங்கள் இயற்றுபவராகவும், போர் வீரராகவும், கொள்கைளில் வெற்றிகண்ட வீரராகவும், விக்கிரகங்கள் இல்லாத, பகுத்தறிவுக்கு ஏற்ற ஒரு மதத்தினை இம் மாநிலத்தில் மீண்டும் நிலைபெறச் செய்தவராகவும், இருபது பூலோக சாம்ராஜ்யங்களையும், ஒரு தெய்வீக சாம்ராஜ்யத்தையும் கண்டவராகவும் இருப்பவர் அந்த முஹம்மதே. மனிதனின் பெருமையை அறியக்கூடிய எல்லா விதமான அளவு கோல்களைக் கொண்டும் எடைபோட்டுப் பார்க்கும் போது, இவர்களை (முஹம்மதை) விடப் பெரியவர் யார்தான் இருக்கின்றார்?

"இஸ்லாமிய தலைநகர் இஸ்தம்பலைக் கண்டேன்!"

டாக்டர் எஸ். ஏ. குலுசி, பிஹெச். டி (இலண்டன்)

[இதனை எழுதுகிறவர் ஒரு இராக் முஸ்லிம்; அரபு மொழியில் சிறந்த சிறுகதைகள் எழுதுகிறவர்; இப்பொழுது பதுதாதிலே (இராக்) டெக்னலஜி காலேஜின் போதனாசிரியர்களில் ஒருவராக இருக்கின்றார். இவர் அண்மையில் துருக்கியின் தலைநகராகிய இஸ்தம்பலுக்குச் சென்றபோது, அங்கே அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், அவர் கண்ட காட்சிகளையும் "இஸ்லாமிக் ரிவ்யூ"வில் கதை போல் வர்ணிக்கின்றார்.]

இறுதியில் எனது இன்பக் கனவுகளின் நகராகிய **இஸ்தம்பலை** அடைந்தேன். அதன் காட்சிதான் என்ன மனோகரமாயிருக்கிறது! நான் என் பேனாவைத் தூக்கி எறிந்து விட்டு, நீண்டதோர் கனவுலகில் சஞ்சரிக்க விரும்புகிறேன். ஆனால், கிரானடா, செவில், கார்டோவா ஆகிய நாகரிக நகரங்களின் நல்ல சகோதரியாகத் திகழும் இந்த இஸ்தம்பல் நகரைப்பற்றி எனக்குத் தோன்றும் இன்ப உணர்ச்சிகளையெல்லாம் 'எனது வாசக நேயர்களுக்கும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஸ்பெயின் தேசத்தில் நான் ஒரு அதிருஷ்டசாலியாக இருந்தது போலவே, இஸ்தம்பலிலும் அதிருஷ்டசாலியாக விளங்கினேன். அங்கே **அவ்ரோ** என்பவர் எனது வழிகாட்டியாகவும் உண்மை நண்பராகவும் திகழ்ந்தார். இங்கே **பாஸ்பரஸ்** நகரின் அழகிய புதல்வியாகிய **இப்(F)பத்** என்பவர் எனக்கு வழிகாட்டியாகவும் மெய்யன்பராகவும் விளங்கினார், இங்கே இருந்த இடமும் சூழ்நிலையும் சந்தர்ப்பமும் மனோகரமான இன்ப வாழ்வுக்கு ஏற்றவைகளாக இருந்தன.

இஸ்தம்பல் நகரை நான் அடைந்தவுடன், முதன் முதலாக ஒரு ஹோட்டலைத் தேடிப் பிடிக்க வேண்டியதாயிற்று. "லண்ரா ஓடேலி" என வழங்கும் இலண்டன் ஹோட்டலில் நான் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்துவதற்கு ஒரு மணி நேரம் பிடித்தது. அந்த ஹோட்டலின் பெயர் மிகவும் பொருத்தமாகவே காணப்பட்டது. அங்கே இருந்த அன்பு மிக்க நண்பர்களுடனும் ஆருயிர்த்தோழர்களுடனும் நான்

பழகிய அந்த வாழ்க்கையைப் பிறகு நினைத்தபோது எனது இருதயம் மிக வேகமாக அடித்துக் கொண்டது.

பகற்பொழுது முடிந்து இரவு வந்ததும், முதல் தடவையாக பாஸ்பரஸின் மணப்பெண்ணை அவளுடைய பூரண அழகுடன் நான் கண்டேன். நான் ஹோட்டலை விட்டுப் புறப்பட்டபோது, என்னைத் திகைக்கச் செய்த காட்சி யொன்றைக் கண்டேன். அந்த ஜலசந்தியில் இரு புறங்களிலும் எனது கால்களுக்குக் கீழே ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் பரவலாக எரிந்து கொண்டிருந்தன, சற்று தூரத்தில் விளக்குகளால் ஆகிய பாலம் ஒன்று இருக்கக் கண்டேன். அதன் பெயர் "கலட்டா பாலம்" என்பது. அது, கலட்டாவையும் பெயாஸித்தையும் இணைக்கின்றது. முதல் தடவையாக இப்போதுதான் நான் இந்த நகரைப் பார்க்கிறேன். என்றாலும் இதற்கு முன் இங்கே நான் வாழ்ந்திருப்பது போன்றதோர் உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. இஸ்லாமிஸ்தானின் ஒரு பகுதியாக இது இருப்பதாலும், முஸ்லிம் உலகின் ஒவ்வொரு பகுதியும் எனக்குத் தாயகமாகத் தோன்றுவதாலும் இத்தகைய உணர்ச்சி எனக்கு ஏற்பட்டதா? அல்லது, அந்த மக்களின் மொழி எனக்குத் தெரிந்து, அவர்களுடன் நெருங்கிப்பழகியதால் இந்த உணர்ச்சி ஏற்பட்டிருக்குமோ? இதற்கு என்னதான் காரணமாக இருந்தாலும் சரி, இதனை இஸ்தம்பலின் ஒரு பகுதியாக உணர்ந்தேன். அங்கிருந்த



துருக்கியின் தலைநகர் இஸ்தம்பலில் பெயாஸித் சதுக்கம்

ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உறவினர் எனக் கருதினேன். வீதிகளிலே நான் நடந்து சென்றேன். இரவு 9 மணி வரையில் கூட கடைகளெல்லாம் திறந்திருந்தன. மாலை 5 மணிக்குள் கடைகளெல்லாம் மூடப்படுகின்ற இலண்டனைப்போல் இங்கு கிடையாது!

இஸ்தம்பல் நகரம், ஏதென்ஸைவிட பகுதாதையே எனது நினைவுக்குக் கொண்டு வந்தது. ஏனெனில், இங்கே மண்டபங்களும் மினாராக்களும் இருந்தன. அதுவும், எண்ணிக்கையில் எவ்வளவோ அதிகமாக இருந்தன! இஸ்தம்பல் நகரை, "மஸ்ஜித்களின் நகரம்" என்று நாம் அழைப்போமாயின். அதில் தவறில்லை. நான் சென்ற இடமெல்லாம், மஸ்ஜித்களும் மினாராக்களும் இருந்தன. நகரைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு சிறிய ஊர்களிலும் ஒரு மஸ்ஜித், அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மஜித்கள் இருந்தன. துருக்கியர்கள் உண்மையான முஸ்லிம்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் அவர்களின் இஸ்லாம் ஐரோப்பிய மயமாக்கப்பட்டிருக்கிறது. இப்போதெல்லாம் அவர்களின் விடுமுறை நாள் வெள்ளிக்கிழமை அல்ல. ஞாயிற்றுக்கிழமைதான் அவர்களுக்கு விடுமுறை நாள். எல்லா கடைகளும் சர்க்கார் காரியாலயங்களும் வெள்ளிக்கிழமையன்று திறந்திருந்தன. ஆனால் ஞாயிறன்று மூடப்பட்டிருந்தன. கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேல் இவ்விதம் நடைபெற்றுவருவதாகக் கேள்வியுற்றேன். இதைத் தவிர, துருக்கியர் அனைவரும் நல்ல முஸ்லிம்களாகவே இருக்கின்றனர். நவநாகரிக ஐரோப்பிய முறையில் உடையணிந்திருந்த ஒரு இளம் பெண், "யானி ஜாமியி" என்னும் புதிய மஸ்ஜிதின் கதவுக்குப் பக்கத்தில் தனது கைப்பையைக் கணவரிடம் வைத்துவிட்டு, பிற்பகல் (அஸர்) தொழுகைக்காக உள்ளே நுழைந்ததை நான் எனது கண்களால் கண்டேன்.

துருக்கியில் மத நம்பிக்கையும் அதன் நடவடிக்கைகளும் முன்னைவிட இப்போது அதிகமாக இருக்கின்றனவென்று நான் கேள்வியுற்றேன். இஸ்தம்பலில் ஏராளமான இஸ்லாமிய வார, மாதப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. மத சம்பந்தமான பத்திரிகைகளுக்கும் தேசியப் பத்திரிகைகளுக்கு மிடையே ஒரு முக்கியமான வேற்றுமை இருப்பதை நான் கண்டேன். சமய சம்பந்தமான ஏடுகளில் அரபு மொழி தாராளமாக வழங்குகின்றது. இதற்கு மாறாக, சமய சார்பற்ற பத்திரிகைகள் பிரெஞ்சு மொழியில் பிரசுரிக்கப்படுகின்றன.

இஸ்தம்பலில் நான் என்றும் மறக்கவியலாத காட்சியொன்று கண்டேன். அன்பு தவழும் தோற்றத்துடன் விளங்கிய வயது முதிர்ந்த சீமாட்டியொருத்தி, "இஸ்லாமியத்" என்னும் முஸ்லிம் பத்திரிகையை கலட்டா பாலத்தின்மீது விற்றுக் கொண்

டிருந்தாள். இதைப் போன்ற இன்னொரு பத்திரிகையும் "சபீயுல்ரஷாத்" என்ற பெயருடன் நடைபெறுகின்றது. இது இஸ்லாத்துக்காகச் சிறந்த தொண்டு செய்து வருகின்றது.

நான் இஸ்தம்பலில் தங்கிய முதல் நாளன்று எவ்வித குறிக்கோளுமின்றி எங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன். இரண்டாவது நாள் ஒரு 'கெயிடு புத்தக (guide-book) த்தை (வழிகாட்டி) வாங்கிக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தேன். ஆனால் திருப்திகரமான புத்தகம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகையால், கருங்கடலுக்குச் சென்று, பாஸ்பரஸை நன்றாகச் சுற்றிப்பார்த்து வருவதென்று முடிவு செய்தேன். கலட்டா பாலத்திலிருந்து படகில் ஏறிச் சென்றேன். பிரயாணம் மிகவும் வெற்றிகரமாயிருந்தது. வட்டமான பல குட்டைகள் ஒன்று சேர்ந்து இணைந்திருப்பதுபோல் பாஸ்பரஸ் எனக்குத் தோன்றியது. சுயெஸ் கால்வாயைப்போல நீல நிற ஆறாக அது இருக்குமென்று நான் நினைத்திருந்தேன்; சுயெஸைவிட அதிக விசாலமாக இருக்குமென்றும் எதிர்பார்த்தேன்.

இதுதான் பாஸ்பரஸ் என்பது. இதைப் பற்றித்தான் எத்தனையோ கவிஞர்களும் எழுத்தாளர்களும் புகழ்ந்து பாடியும் எழுதியும் இருக்கின்றனர். ஜல சந்தியின் இரு புறங்களிலும் மரங்களும் வீடுகளும் மஸ்ஜிதுகளும் இருக்கின்றன. கவர்ச்சிமிக்க காட்சிகள் காரணமாகவும், பிரயாணிகள் சிலருடன் செய்த இன்ப உரையாடலின் விளைவாகவும், கருங்கடல் பிரயாணத்தை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தேன். "இஸ்திகன்ஸ்" என வழங்கும் கிளாஸ் டம்ளர்களில் தேநீர் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ருசிகரமான துருக்கியர் காப்பியும் பரிமாறப்பட்டது. ஆனால், நான் இஸ்தம்பலுக்குத் திரும்புங்கால், விதியின் விளையாட்டாக ஒரு விநோத சம்பவம் நிகழ்ந்தது. முதலில் அது மகிழ்ச்சியற்றதாகவும், இறுதியில் இன்பகரமாகவும் முடிந்தது.

போகும்போது நான் ஏறிச் சென்ற அதே படகில்தான் திரும்பிக்கொண்டிருந்தேன். அந்தப்படகு பாஸ்பரஸின் இரு மருங்கிலுமுள்ள ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் தங்கிச் சென்ற படியால், அடுத்த தங்குமிடத்தில் இறங்கி, வேறு ஒரு படகில் ஏறிக்கொள்ளுமாறு கண்டக்டர்களில் ஒருவன் எனக்கு ஆலோசனை கூறினான். அடுத்த படகு மிகவும் வேகமாகச் செல்லுமென்று அவன் சொன்னான்.

ஆகவே, அவனுடைய ஆலோசனையின்படியே நான் அந்தப் படகில் ஏறிக் கொண்டேன். ஆனால், என்ன ஆச்சரியம்! கருங்கடலுக்கே அந்தப் படகு மீண்டும் சென்று கொண்டிருந்தது! அதுவும், முந்திய படகைவிட

மெதுவாகவும் சென்றது. வழியில் ஒரு டவுனையோ அல்லது கிராமத்தையோ நான் விடவில்லை. அன்று மாலை நான் ஒரு தியேட்டருக்குச் சென்று, துருக்கியின் நாடக மேடை எப்படியிருக்கிறதென்று அறிய விரும்பினேன். சுற்றிலும் பார்த்தேன். தொலைவிலே ஒரு மூலையில் ஒரே யொரு இளம் பெண் மட்டும் குந்தியிருந்தாள். அவளைத் தவிர அந்த முதல் வகுப்பு அறையில் வேறு யாரும் கிடையாது. என்னுடைய நிலையை விளக்கிக்கூறும் பொருட்டு, நான் அவளிடம் சென்றேன். ஆனால் நான் மந்திர சக்தியால் கட்டுண்டவன்போல் ஆகிவிட்டேன்! இத்தாலியில் நான் பார்த்துவிட்டு வந்த அழகிய இத்தாலிய கற்சிலைகள் அல்லது அழகிய வர்ண சித்திரங்களில் ஒன்று எனக்கு எதிரில் இருப்பதாக உணர்ந்தேன். என் கண்கள் கூசின. எனவே, பாதியளவு என் முகத்தை கடலின் பக்கம் திருப்பிக்கொண்டு, பின் வருமாறு கூறினேன்:

"இஸ்தம்பலுக்குப் போகின்ற சரியான படகில்தான் நான் ஏறியிருக்கிறேனு என்பதை அன்பு கூர்ந்து எனக்குச் சொல்லுவீர்களோ என்று ஆச்சரியத்துடன் நோக்குகிறேன்...... இந்தப்படகு அதிக வேகமாகச் செல்லக் கூடியது என்று தெரிய வந்தபடியால் இதில் நான் ஏறிக் கொண்டேன்."

இப்போது அவளுடைய நீல நிறக் கண்கள் இரண்டும் அகல விரிந்து, என்னெதிரே புன்முறுவல்செய்தன.

"நீங்கள் சரியான படகில் தான் ஏறியிருக்கிறீர்கள். ஆனால் இதற்குப்பின்னே வருகின்ற படகிலேயே நீங்கள் ஏறியிருக்க வேண்டும். இந்தப் படகில் ஏறியிருக்கக் கூடாது. நீங்கள் விரும்பினல், அடுத்த தங்குமிடத்தில் மாற்றிக் கொள்ளலாம்.

அவளுக்கு எதிரில் உட்கார்ந்திருந்த நான், "அது கொஞ்சம் அபாயமாக இருக்கும் போல் தோன்றுகிறதே" என்றேன். "மரத்தின் மீதுள்ள 10 பட்சிகளைவிட கையிலுள்ள ஒரே பட்சி சிறந்தது என்று ஒரு அரபுப் பழமொழியும் இருக்கிறது" என்று கூறினேன்.

"ஆகவே, உங்கள் சொந்த ஊர் அரேபியா போலும். இது எவ்வளவு உற்சாகமளிக்கிறது! நான் இப்பொழுதுதான் அரபு மொழி கற்றுக் கொள்ளத் தொடங்கி யிருக்கிறேன்.

"ஆனல், 15 நாட்களில் அரபு மொழியை அபிவிருத்தி செய்து கொண்டு விடலாம் என்று நீங்கள் நினைப்பது தவறு."

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"நான் இங்கே இரண்டு வாரங்கள்தான் தங்கியிருப்பேன்."

"துருக்கியை சரியாக உச்சரிப்பது எப்படி என்று அறிந்து கொள்ள அதிக காலந்தான்

பிடிக்கும். ஆனால் நீங்கள் எங்கே அதனைக் கற்றுக்கொண்டீர்கள் ?

"கொஞ்சம் பகுதாதிலும், கொஞ்சம் இலண்டனிலும்."

"இலண்டனில் துருக்கிப் பேசுகிறார்களோ ?"

"இல்லை, கற்றுக்கொடுக்கின்றார்கள். வயது முதிர்ந்த துருக்கியர் ஒருவரை நான் சந்திக்கும் அதிர்ஷ்டம் பெற்றேன். அவருடைய பெயர் அலீ ரிஜா பே என்பது. அவர் ஒரு அன்புளங்கொண்ட மனிதர். எனக்குத் துருக்கி மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கு அவர் பெரிதும் கஷ்டப்பட்டார்."

"நீங்கள் துருக்கியை நன்றாகப் பேசுகிறீர்கள்."

"இல்லை, நான் ஆசைப்படுவது போல் அவ்வளவு நன்றாக நான் பேசவில்லை."

"துருக்கியின் சரியான உச்சரிப்பைப் பற்றி எனக்கு ஓரளவு புரியுமாறு செய்வதற்கு 15 நாட்கள் அதிகமென்று நான் நம்புகிறேன்."

நானும் அவரும் ஏககாலத்தில் ஒருவரை மற்றொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்து கொண்டோம்.

"என்ன, பேசமா பேசுகிறீர்கள் ?"

"அப்படியென்றால் ?"

"உங்களுக்குத் தெரிந்த துருக்கியைக் கொண்டு நான் உங்களுக்கு உதவுகிறேன். எனக்குத் தெரிந்த அரபியைக் கொண்டு நீங்கள் எனக்கு உதவி புரியுங்கள்."

"ஆம், அப்படியே செய்வோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறினேன்.

"என்னுடைய பெயர் இப்(F)பத். தங்கள் பெயர் என்ன ?

"இதோ என் பார்வைச் சீட்டு இருக்கிறது" என்றேன். சீட்டை கவனமாகச் உற்றுப் பார்த்துவிட்டுத் தலையை நிமிர்த்தி அவள் கூறினாள்.

"தங்கள் பெயரைப் பார்த்தால் துருக்கியைப்போல் இருக்கிறதே !"

"அதாவது, 'இஸ்லாம்' என்று கூறுகிறீர்கள் ! என்னுடைய முதல் பெயரும் பட்டப் பெயரும், 'அல்சய்யிதுல் ஹிம்யாரி' என்னும் 18-வது நூற்றாண்டில் வாழ்ந்த அரபுக் கவிஞர் ஒருவரின் கவிதையில் வருகின்றன."

"என்ன அபூர்வமான ஒற்றைச் சம்பவம் இது ! அந்தக் கவிதையின் அடியை நீங்கள் ஞாபகப் படுத்தமுடியுமா ? அதை நான் எழுதிக்கொள்ள விரும்புகிறேன்."

"சரி, அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு, அந்தக் கவிதையின் அடியை அவளுக்குக் கூறினேன். அவளும் அதிக மகிழ்ச்சியுடன் அதனை எழுதிக் கொண்டாள்.

"இந்த வார்த்தைகள் துருக்கியெங்கும் மிக அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. எனவே,

அவைகளை அரபுகளிடமிருந்து நாம் பறித்துக் கொண்டிருக்க வேண்டும்."

"பறித்துக் கொள்வது என்ற வார்த்தை பொருத்தமுடையதல்ல. கடன் வாங்கப்பட்டவை" என்று நீங்கள் கூறவிரும்புகிறீர்கள். முஸ்லிம் நாடுகள் அனைத்தும் சோதர நாடுகளாகும். கலாசார விஷயங்களில் ஒருவருக்கொருவர் எவ்வளவு வேண்டுமாயினும் கடன் வாங்கிக் கொள்வதற்கு முஸ்லிம்களுக்குப் பூரண உரிமை இருக்கிறது."

"நீங்கள் சொல்லுவதே சரி" என்று அழுத்தந் திருத்தமாக அப் பெண்மணி கூறியபோது, அவளது கண்களின் அழகும் ஒளியும் அதிகமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஒரு இலேசான புன்சிரிப்பு அவளது உதட்டிலே தோன்றி, முகமெங்கும் பரவி, கன்னங்கள் இரண்டிலும் குழி விழச் செய்தது.

அவளது இஞ்சி நிறக் கூந்தல், பாஸ்பரஸிலிருந்து அடித்த கடற்காற்றினால் அலைக்கழிக்கப்பட்டது. அது அவளுடைய முகத்தில் சரிபாதியை மறைத்துக் கொண்டது. அதனைப் பின்புறம் கொண்டு வருவதற்காக அவள் தனது வெளுத்துப் போன கையைத் தூக்கினாள். அவளுடைய கை விரல்கள் மெலிந்தும் நீளமாகவும் இருந்தன. அது ஒரு கற்பனையும் கலைத்திறமும் சங்கீத ஆர்வமுள்ள மாதரசியின் மலர்க்கரம் போல் இருந்தது. ஆனால் பெருவிரல் ஓரளவு மடங்கியிருந்தது. அது ஒரு பிடிவாத குணத்தைப் பிரதிபலித்தது. "ஆனால் மற்றப்பெண்களெல்லாம் பிடிவாதக்காரர்களாக இல்லையா? இப்பந் மட்டும் ஏன் ஒரு விதிவிலக்காக இருக்கவேண்டும்?" என்று நான் எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று அவள் தனது இனிய குரலில் கேட்டுக்கொண்டே, எனது சிந்தனையைக் கலைத்தாள்.

"நானா யோசிக்கிறேன்?" என்று கேட்டேன்.

"ஆம், நீங்கள் என்னிடம் திடீரென அகப்பட்டுக் கொண்டீர்கள்"

சற்று நேரம் சென்றபின், "இங்கே உங்களைச் சிந்திக்கத் தூண்டுவது பாஸ்பரஸ் அல்லவா?" என்று அவள் கேட்டாள்."

அவள் என்ன சொல்லுகிறாள் என்பது எனக்குத்தெரியும். ஆகையால், "அறவே கிடையாது" என்று அடித்துப்பேசினேன்.

அவள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆனால் அவளுடைய முகத்திலே, "உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்று தெளிவாக வரையப்பட்டிருந்தது. இந்தச் சமயத்தில், நாங்கள் இஸ்தம்பலுக்கு அருகில் வந்து விட்டோம். சற்று தூரத்திலிருந்து கரையோர விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. உடனே அவள் குதித்துக் கொண்டே, "அது என்ன?"

என்று உரத்தகுரலில் கேட்ட வண்ணம், "இஸ்தபலே அடைந்து விட்டோம்" என்று ஆச்சரியத் துடன்கூறினாள்.

"ஆம், நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால் நான் இஸ்தம் பலே விரும்பவில்லை. எனக்கு இங்கே பிடிக்கவில்லை. நான் வேறு ஒரு இடத்துக்குப் போயிருக்க வேண்டும்."

"அதைப்பற்றிப் பரவாயில்லை. ஒவ்வொரு அரைமணிக்கும் ஒரு படகுஇருக்கிறது. நீங்கள் விரும்பு வீர்களாயின், நாம் இருவரும் சேர்ந்து இன்றிரவு சாப்பிட லாம்."

"பரவாயில்லை. உங்களுக்கு நன்றி. எனது பெற்றோர்கள் எனக்காகக் காத்துக் கொண்டி ருப்பார்கள். நான் அங்கே போனலொழிய, அவர்கள் சாப் பிடவே மாட்டார்கள். எங்கள் குடும்பப் பழக்க வழக்கங்களில் இதுவும் ஒன்று. என்பது தங் களுக்குத் தெரியும்."

"ஆகையால்......"

"என்ன இருக்கலாம்......"?

"அவர்களை டெலிபோனில் கூப்பிட்டு விஷயத்தை விளக்கிச் சொல்லி விடுகிறேன்"

"அது ஒரு அருமையான யோசனைதான்!"

நாங்கள் கலட்டா பாலத்தை அடைந்தவுடன் அவள் செய்த முதல் காரியம் என்ன வென்றால், அவள் தனது மோதிரத்தை அன்னையிடம் கொடுத்துவிட்டு, அன்று மாலை சற்று நேரம் வெளியே சென்று வருவதாகத் தெரிவித்தாள்.

நாங்கள் பாலத்தைக் கடந்த வுடன் புதிய மஸ்ஜித்துக்குச் சென்று, மாலை நேரத் தொழு கையை நிறை வேற்றினோம். அங்கே ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து நின்று தொழுதார்கள்.

நாங்கள் பள்ளிவாயிலை விட்டு வெளியேறியபோது "என்ன ஆச்சரியம்!" என்று நான் வியந்து கூறி, "இராக் நாட்டு ஆடவரும் பெண்டிரும் விரைவில் ஒரு நாள் இம்மாதிரி செய்வார் கள் என்று நான் நம்புகிறேன்; அதாவது, ஒரே மஸ்ஜிதில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து நின்று தொழுவார்கள் என்று நினைக்கிறேன்!" என் றேன்.

நாங்கள் பாலத்தின்மேலே சென்று கொண்டிருந்தபோது, அவள் தனது கைகளை என்னி டம் நீட்டி, "கை குலுக்குங்கள்! நீங்களும் நானும் இப்போது சகோதர சகோதரிகளாகி விட் டோம். ஏனெனில், ஓரே பள்ளி வாயிலில் இருவரும் சேர்ந்து தொழுது கொண்டோம்"— என்றாள்.

"எனக்குச் சகோதரியே கிடை யாது. அந்த அதிருஷ்டத்தை நான் பெற்றதில்லை. உங்களைப் போல் அழகிய ஒரு சகோதரி யைப் பெறுவது எனக்கு மகிழ்ச் சளிக்கிறது."

"உண்மையான சோதரராக இருப்பேன் என்று எனக்கு உறுதிமொழி கூறுங்கள்."

"நான் உறுதிமொழி யளிக்கிறேன்."

"இப்பொழுது நான் போக வேண்டும். தங்களுடைய அன்பழைப்புக்காக எனது நன்றி."

"அப்படியானால் சரி. அதைப் பற்றி நான் வற்புறுத்த மாட்டேன். நாளைக்கு நான் தங்களை சந்திக்கலாமென்று நம்புகிறேன்."

"ஆம், நாளைக் காலையில் 9-30 மணிக்கு இதே இடத்தில் சந்திப்போம். முக்கியமான எல்லா இடங்களையும் என்னால் இயன்ற வரை சுற்றிக் காட்டுவேன். போய் வருகிறேன், வணக்கம்."

"வணக்கம்"

இவ்விதமாக நான் என் அழகிய பாஸ்பரஸ் கன்னியை வழியனுப்பினேன். பின்னர், சற்று தொலைவில் இருந்த சாப்பாட்டு விடுதிக்கு விரைந்து சென்றேன். அவ்வாறு நான் சென்று கொண்டிருந்தபோது எனக்கு ஒரு மயக்கம் ஏற்பட்டது. ஆம், அதுதான் அந்தக் கனவுகளின் மயக்கம்!

அடுத்த நாளுக்காக நான் ஆவலுடன் காத்திருந்தேன். அந்த இரவுக்கு ஒரு முடிவே இல்லையோ என்று எனக்குத் தோன்றியது. இறுதில் ஒருவாறு பொழுது புலர்ந்தது. அந்த நிலையில் காலை உணவு பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். துருக்கியில் எல்லா பொருள்களும் கிடைக்கின்றன. ஆனால் ஒரு உல்லாசப் பிரயாணிக்கு துரதிருஷ்ட வசமாக அதிகச்செலவில்தான் அவைகள் கிடைக்கும். நாணய மாற்றில் மட்டும் ஒரு பவுனுக்கு இரண்டு ஷில்லிங்குகளுக்குமேல் நஷ்டமாகி விடுகின்றன. ஊரைப் பார்க்க வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு நாணய மாற்று விஷயத்திலே கொஞ்சம் சலுகை காட்டப் பெற்றால், இஸ்தம்பல் நகரம் ஒரு பிரயாணிகளின் சொர்க்கமாகத் திகழும். இத்தகைய எண்ணங்களுடன் நான் கலட்டா பாலத்தை நோக்கி ஓடினேன். சரியாக 9-30 மணிக்கு குறித்த இடத்தில் நான் இருந்தேன். எனது இளம் பாஸ்பரஸ் இராணியைக் காண்பதற்காக நான் அங்கே இரண்டு நிமிஷந்தான் காத்திருந்தேன்.

சூரியன், ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. "எனது இதய ராணியே, வருக!" என்று சொல்லிக் கொண்டே எனது கைகளை நீட்டிக்கொண்டு, அவள் முன் நான் சென்றேன். சற்று நேரம் அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனால், அவள் தனது நீல நிறக் கண்களுடன், நேற்றுக் கண்ட வழிப்போக்கனை வரவேற்று நின்றாள்.

"குட் மார்னிங், நண்பரே! தங்களை எனது சகோதரர் என்று அழைக்கட்டுமா?" என்று அவள் கேட்டாள். இவ்விதம் கேட்டபோது அவளது முகத்திலே ஒரு இலேசான புன்முறுவல் தோன்றி மறைந்தது. "இங்

கிருந்து ஆயா சோபையாவுக்கு டிராமில் செல்வது நலம் என்று நான் நினைக்கிறேன்." என்று அவள் சொன்னபோது, அவளுடைய கண்கள் கூட புன்முறுவல் செய்தன!

டிராமில் ஏறிக் கொண்டவுடன் எங்கள் உரையாடல் மஸ்ஜித்களின்மீது திரும்பியது.

"ஒரு காலத்தில் இந்த நகரில் 900 மஸ்ஜித்கள் இருந்தன" என்று பெருமிதத்துடன் கூறினாள், இப்பத். "அவைகளில் இப்பொழுது 500 மஸ்ஜித்களே இருக்கின்றன. இரட்டை மினாராக்கள் உள்ள பள்ளிவாயில்களெல்லாம் சுல்தான்களாலும் அவர்களின் நெருங்கிய உறவினர்களாலும் கட்டப் பெற்றவைகளாகும். அந்த மஸ்ஜித்களின் பக்கத்தில் அநேகமாக காலேஜ்களும், லைப்ராரிகளும், ஆஸ்பத்திரிகளும் ஏழை விடுதிகளும் இருக்கும். உண்மையில் சிறந்த கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய லைப்ரரி(நூல் நிலையங்)கள் எல்லாம் மஸ்ஜித்களைச் சேர்ந்தவைகளையாகும்!" என்று அப்பெண்மணி எனக்கு விளக்கிக்கூறினாள்.

கையெழுத்துப் பிரதிகளைப் பற்றிக் கேட்டபோது, நான் ஆச்சரிய மிகுதியால் அசந்து போனேன். அவளுடைய வெளுத்துப்போன சிறிய கையைப் பிடித்துக் கொண்டு, ஒரு குழந்தையைப் போல் நான் அவளிடம் மன்றாடினேன்:

"என்னருமை இப்பத்! நீங்கள் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். அரபுக் கையெழுத்துப் பிரதிகள் நிறைந்த நூல் நிலையங்களில் ஒன்றுக்கு முதலில் என்னை அழைத்துச் செல்லுங்கள்" என்றேன்.

பிறைபோல் வளைந்த தனது அழகிய புருவங்களை அவள் மேலே உயர்த்திக்கொண்டு, "பொறுமையாக இருங்கள்" என்றாள். "அதற்கு ஏராளமாக நமக்கு நேரம் இருக்கிறது. ஊருக்குப் போவதற்குமுன் நீங்கள் பார்க்க விரும்பும் ஒவ்வொன்றையும் பார்த்து விடலாம்" என்றாள்.

"ஆனால், எல்லா மஸ்ஜித்களையும் பார்க்க முடியாதே! முக்கியமான மஸ்ஜித்கள் கூட முப்பதுக்கு மேல் இருக்கின்றனவே!" என்றேன்.

"ஆம், எனக்குத் தெரியும். அவைகளுள் சையின்ட் சொபியாவிலுள்ள மஸ்ஜித்களையும் சுல்தான் அஹ்மத் பள்ளியையும், சுலைமான் நபி (ஸல்) பள்ளிவாயிலையும், 'வெற்றிவீரர் முஹம்மது'வின் மஸ்ஜிதையும் மட்டுமாவது சுற்றிப் பார்த்துவிட வேண்டும்" என்று அந்த மங்கை மீண்டும் கூறினாள்.

(அடுத்த இதழில் முடியும்)

அரசியல் உலகத்துக்கே ஒரு அதிசய மனிதராக, அழுது கொண்டே வெற்றிமிக்க ஒரு அரசியல் வாதியாகவும், மக்கள் தலைவராகவும் விளங்குகிறார்; பிரிட்டிஷ், அமெரிக்க ராஜதந்திரிகளுக்கெல்லாம் ஒரு பெரிய கேள்விக் குறியாகவும் காணப்படுகின்றார். அத்தகைய அரசியல் வாதியின் அந்தரங்க வாழ்க்கையில் சில ருசிகரமான உண்மைகள்.

டாக்டர் முஹம்மது முஸத்திக்

எஸ். ஏ. குமால்

இன்று ஈரானிய பிரதமராகத் திகழும் டாக்டர் முஹம்மது முஸத்திக் அவர்கள், சென்ற சில மாதங்களாக உலக அரசியல் வாதிகளின் கவனத்தையெல்லாம் ஒருங்கே கவர்ந்து வருகின்றார். ஈரானிய எண்ணெய்ப் பிரச்னையில் பிரிட்டனுக்கு விரோதமாக அவர் எடுத்துக்கொண்டுள்ள தீவிர நடவடிக்கைகளின் விளைவாக, அவரது அரசியல் வாழ்வு மயிரிழையில் தொங்கிக் கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் பயமுறுத்தின; அமெரிக்க ஏடுகளும் அரசியல் வாதிகளுங் கூட அச்சுறுத்தி எச்சரிக்கை செய்தனர். எனினும் முஸத்திக் அவர்கள் கடைசி வரையில் எண்ணெய்ப் பிரச்னையில் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. அது மட்டுமின்றி, பிரிட்டிஷ் அமெரிக்க ராஜதந்திரிகளின் இன்பக் கனவுகளையெல்லாம் இடித்துத் தகர்த்துவிட்டார்.

அழுது அழுது, ஒரு அரசியல் வாதி தனது தோல்விகளையெல்லாம் வெற்றிகளாக மாற்றிக் கொள்ளும் மந்திர சக்தியை ஒருவர் பெற்றிருக்கிறார் என்றால், அவரது அரசியல் தந்திரத்தை என்னென்பது?

நாளையதினம் முஸத்திக் தமது மந்திரிப் பதவியை விட்டு ஓடப் போகிறார் என்று முழு உலகமும் எதிர்பார்க்கின்றது. அந்த அளவிற்கு அவர் மீது ஈரானிய மக்களின் எதிர்ப்புணர்ச்சி பெருகியிருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அடுத்த நாள் காலையில் அந்த மனிதர் வெற்றிபெற்று விட்டார் என்ற விந்தையான செய்தியை வெளியுலகம் அறிகின்றது! இதன் உட்கருத்து என்ன?

ஈரானிய மஜ்லீஸிலே முஸத்திக் அழுதுகொண்டே பேசினார். அதனால் அவருக்கு மகத்தான வெற்றி கிடைத்து விட்டது என்று நாம் நம்புவதற்கில்லை. அர்த்தமின்றி அழுவதாலேயே ஒருவர் அரசியல் தலைவராகிவிட முடியாது. காரணமின்றி

வெறுங் கண்ணீர்த் துளிகளைச் சிந்தினால் மட்டும் ஒருவர் முஸத்திக்கைப் போன்ற மாபெரும் மக்கள் தலைவராக மாண்புடன் விளங்க முடியாது. அக்கிரமக்காரர்களாகிய எதிரிகளைப் பற்றி, உணர்ச்சி வசப்பட்டு உள்ளக் கொதிப்புடன் பேசும்போது யாருக்கும் ஆத்திரம் வருவது இயல்பு. இந்த ஆத்திரம் அழுகையாக மாறுவதில் ஆச்சரியமில்லை. டாக்டர் முஸத்திக் அவர்களின் வெற்றியின் ரகசியமும் இதுதான். அழுது அழுது காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் அரசியல் தந்திரமல்ல இது.

அடிக்கடி அழுவதும் கண்ணீர் சிந்துவதும் பலவீனத்தின் அறிகுறி என்பதும் ஓரளவு உண்மைதான். ஆனால் முஸத்திக் அவர்கள் வயது தளர்ந்தவராகவும் உடல் நலம் குன்றியவராகவும் இருப்பினும், அவரது உள்ள உறுதியை இவ்வுலகில் ஒருவராலும் அசைக்க முடியவில்லை! அவ்வளவு வன்மையும் உறுதியும் பொருந்தி, இரும்புபோல இருக்கிறது அவரது இதயம்! ஏககாலத்தில் எத்தனை ஆயிரம் குண்டுகள் வெடித்தாலும் அவரது எஃகு உள்ளத்திலே எத்தகைய அதிர்ச்சியும் ஏற்படுவதில்லை!

இத்தகைய எஃகு மனம் படைத்த மனிதர்தான் இன்று ஈரானின் தலைவிதியை நிர்ணயிக்கும் தனிப் பெரும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இவரது அரசியல் வாழ்வு முழுதும் ஆரம்ப முதல் போராட்டமயமாகவே இருந்து வந்திருக்கிறது. அதுவும் முதுமைப்பருவத்தில் இவர் நடத்தி வரும் போராட்டம் உலக வரலாற்றிலேயே ஒப்பற்றதாய் விளங்குகிறது. ஐரோப்பாவிலே படித்துப் பட்டம் பெற்று அரசியல் துறையில் இவர் இறங்கியது முதல், நாளது வரையில் அன்னிய ஏகாதிபத்தியங்களின் பரம வைரியாகவே இருந்து வருகின்றார். அது மட்டுமின்றி, உள்நாட்டிலேயே ஒரு வன்மை மிக்க மன்னரின் எதிரியாக இருந்து எதிர்ப்புரட்சி நடத்தியிருக்கின்றார். இன்று ஈரானின் மன்னராக விளங்கும் முஹம்மது ஷாவின் தந்தையாகிய அந்த ரஜா கானின் அரசியல் சமுதாய சீர்திருத்தங்களை எதிர்த்து இவர் நடத்திய போராட்டங்கள் பல. இவைகளின் விளைவாக, இவர் பலவித அடக்குமுறைகளுக்கும் ஆளாக வேண்டியிருந்தது.

பயங்கரவாதிகளின் அரசியல் ஸ்தாபனமாகிய தேசிய முன்னணிக் கட்சியைத் தோற்றுவித்தவரும் இவரே. தாய்நாட்டிலே அரசியல் துறையில் பயங்கர நடவடிக்கைகளுக்கு இவர் ஆதரவாளராக இருப்பினும், கம்யூனிஸ்டுகளின் விரோதியாகவே இருக்கின்றார்.

ஏறத்தாழ ஏழு மாதங்களுக்கு முன் இவர் ஈரானியப் பிரதமராகப் பதவி ஏற்றபோது, இவரைப்

பற்றிப் பிரிட்டிஷ் அரசியல் நிபுணர்களெல்லாம் ஏளனமாகவும் இழிவாகவும் நினைத்தனர். 'நெஞ்சிலே உரமில்லாதவர், பயங்கொள்ளி, பைத்தியம்' என்றெல்லாம் பலவிதமாகக் கருதினர். எனினும், சில மாதங்களுக்குப் பின் நடந்த எண்ணெய் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளின் போது முஸத்திக் எத்தகைய அறிவுக் கூர்மையும் எஃகு மனமும் படைத்த இரும்பு மனிதர் என்பதை மேல் நாட்டு அரசியல் வாதிகளெல்லாம் அறிந்து வியந்தனர் என்பதில் ஐயமில்லை.

இன்றைய அரசியல் உலகில் ஒரு அதிசய மனிதராக விளங்கும் டாக்டர், முஸத்திக் அவர்கள், "இரத்தக் கொதிப்பு" என்னும் வியாதியால் அடிக்கடி வருந்துகிறார். எண்ணெய்ப் பிரச்னையில் ஒரு சுமுகமான முடிவு காணும்பொருட்டு, அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனின் தூதராக,ஏ. ஹாரிமன் என்பவர் ஈரானுக்கு விஜயம் செய்தாரல்லவா? அப்போது ஹாரிமன் முஸத்திக்கை அவரது இல்லத்தில் கண்டு சில மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். அது சமயம், ஒரு டாக்டரும் ஈரானிய பிரதமரின் பக்கத்திலேயே இருந்து கொண்டு, பதினைந்து நிமிஷத்துக்கு ஒரு முறை அவரது கையைப் பிடித்து நாடிப் பரீட்சை செய்துகொண்டிருந்தார். சில சமயம் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதற்கு அந்த டாக்டர் அனுமதியளித்து வந்தார். ஆனால் அவர்களின் பேச்சு அதிகமாகப் போகும் போதெல்லாம் அண்மையில் வீற்றிருந்த டாக்டர் தமது கைகளை நீட்டி, உரையாடலை உடனே நிறுத்துமாறு உத்திரவிட்டு, 15 நிமிஷ நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்று கூறிக் கொண்டிருந்தார்.

ஈரானிலே அமெரிக்க அரசாங்கத் தூதராக இருந்த ஹென்ரி கிரேடி என்பவர் ஒரு முறை டாக்டர் முஸத்திக்கின் படுக்கைக்கு அருகில் சென்று உடல் நலம் விசாரித்தபோது, "சற்று முன்புதான் அமெரிக்க மருந்து ஒன்று என் உடம்பில் இன்ஜெக்ஷன் செய்யப்பட்டது. எனினும் அதன் காரணமாக நான் அடங்கி நடப்பேன் என்று நினைக்க வேண்டாம்" என டாக்டர் முஸத்திக் அவர்கள், ஹென்ரி கிரேடியிடம் கூறினார்.

எண்ணெய்ப் பிரச்னையில் ஏதாவது ஒரு நல்ல முடிவு காண வேண்டுமென்னும் கருத்துடன் தெஹ்ரானுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூது கோஷ்டியின் தலைவர் ரிச்சர்டு ஸ்டோக்ஸ் என்னும் கத்தோலிக்க கிறிஸ்துவரிடம், எண்ணெய்ப் பிரச்னையைப் பற்றி முஸத்திக் என்ன கூறியிருக்கின்றார் என்பது ருசிகரமாக யிருக்கின்றது ஸ்டோக்ஸ் இடம் அவர் கூறியதாவது: "ரோமன் கத்தோலிக்கர்களாகிய நீங்கள் உங்கள் மனைவியரை விவாகரத்துச் செய்யமுடியாது. ஆனால் முஸ்லிம்களாகிய நாங்கள் எங்கள் மனைவியருக்கு மண

விலக்கு அளிக்கமுடியும். அதே விதமாக ஆங்கிலோ ஈரானிய எண்ணெய்க் கம்பெனிக்கும் நாங்கள் 'தலாக்' சொல்ல முடியும்."

ஈரானிய எண்ணெய்த் தொழிலை ஈரானியர்கள் நடத்தவே இயலாது என்று பிரிட்டிஷ்காரர்கள் எவ்வளவோ விளக்கிக் கூறியும் விடாக்கண்டராகிய முஸத்திக் ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டார். நடைமுறையில் ஏற்படக்கூடிய இன்னல்களையெல்லாம் பற்றி விவாதிக்கவும் அவர் தயாராக இல்லை. "பிரிட்டிஷ்காரர்களின் கருத்து சரியானதாகவே இருக்கலாம். எனினும் ஈரானியர்கள் தங்கள் எண்ணெய்த் தொழிலை நடத்தியே காட்டப்போகின்றனர். அதனால் அத்தொழிலே அழிந்து போனாலும் சரிதான். அவர்கள் பின்வாங்கப்போவதில்லை" என்று அவர் கூறுகின்றார்.

76 வயது நிரம்பிய முஸத்திக் அவர்கள், குழந்தைகளின் மீது மிகுந்த அன்பும் ஆசையும் பூண்டுள்ளார். இவருக்கு, குலாம் ஹுஸைன் முஸத்திக் என்னும் பெயருடைய மகன் ஒருவர் இருக்கின்றார். இவர்தான் தமது தந்தைக்கு டாக்டராக இருந்து வைத்தியம் செய்து வருகின்றார். முஸத்திக் அவர்களின் அருமைப் புதல்வியொருவர் இருக்கின்றார். இவரே தமது வயது முதிர்ந்த தந்தையின் நர்ஸாக இருந்து பணிவிடைகள் செய்து வருகிறார்.

முஸத்திக் அவர்களின் பௌத்திரியும் (பேத்தி) குலாம் ஹுஸைன் முஸத்திக்கின் புத்திரியுமாகிய மஸ்லோமே என்னும் மூன்றுவயது குழந்தை டாக்டர் முஸத்திக்கின் வீட்டிலேயே வளர்ந்து வருகின்றது. பிரதமரும் இப்பெண் குழந்தையின் மீது பேரன்பு கொண்டிருக்கிறார். ஆதலால், இக் குழந்தையும் தனது பாட்டனாரை விட்டுப் பிரியாமல் இருந்து வருகின்றது. அநேகமாக ஒவ்வொரு நாளும் முஸத்திக் அவர்களும் இக்குழந்தையும் சேர்ந்தே சிற்றுண்டி சாப்பிடுகின்றனர். அரசியல் சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் நடைபெறும் போதெல்லாம் இந்த மஸ்ஸோமேயும் அனேகமாக அந்த இடத்தில் இருக்கத் தவறுவதில்லை.

மஞ்சள் செங்கற்களால் கட்டப்பெற்ற இரண்டடுக்கு மாடிகளுள்ள ஒரு வீட்டில் முஸத்திக் வசித்து வருகின்றார். மன்னரின் அரண்மனையைச் சேர்ந்த "கியாபன்காக்" "பாலஸ் அவென்யூ" ஆகிய இடங்களில் அந்த வீடு இருக்கின்றது. இந்த வீட்டுக்கு இரு பக்கத்திலும் ஒரு மகனும் பேரக் குழந்தைகளும் வாசம் செய்யும் இரண்டு வீடுகள் இருக்கின்றன.

முஸத்திக் அவர்கள் தமது நேரத்தின் பெரும் பகுதியை அவரது பழைய இரும்புப் படுக்கையிலேயே கழித்து வருகின்றார்.

ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு படுக்கையைவிட்டு எழு

கின்றார். உடனே தேநீர் பருகி, சரியாக 6 மணிக்கு ரொட்டியைச் சாப்பிட்டுவிட்டு, தந்திகளையும் அறிக்கைகளையும் படிக்கின்றார். 8 மணி அடித்தவுடன், படுக்கையறையின் இரண்டாவது மாடிப்படியின் வழியாக உத்தியோகஸ்தர்கள் ஏறிச் சென்று, பிரதமரின் படுக்கையைச் சுற்றிலுமுள்ள நாற்காலிகளில் உட்காருகின்றனர். உடனே அன்றைய வேலைகள் ஆரம்பமாகின்றன. பிரதமர் தமது மாலை நேர சிற்றுண்டியைச் சாப்பிட்ட பின், சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு இரவு 11 மணி வரையில் வேலை செய்கின்றார் !

இரத்தக் கொதிப்பு காரணமாகவும் இருதய பலவீனத்தாலும் சென்ற சில ஆண்டுகளாக மூஸத்திக் அவர்கள் தமது வேலைகளையெல்லாம் படுக்கையில் இருந்தபடியே செய்து வருகின்றார்.

மூஸத்திக் அவர்களிடம் குடிப் பழக்கமும் புகை பிடித்தலும் அறவே கிடையாது. மிகவும் குறைந்த அளவான உணவையே உட்கொள்ளுகிறார். அரிசியும் காய்கறிகளும் தவிர இறைச்சி அநேகமாக சாப்பிடுவதே இல்லை. [இரத்தக் கொதிப்பு (Blood Pressure) வியாதியுள்ளவர்கள் மாமிச உணவைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று டாக்டர்கள் கூறுகின்றனர்.]

ஈரானின் முக்கியமான ஏற்றுமதிப் பொருள்களில் பாதம்பருப்பும் ஒன்றல்லவா? அதனை ஈரானிய பிரதமர் மிகவும் விரும்பிச் சாப்பிடுகிறார். மாலை நேரத்தில் கை நிறைய பிஸ்தாப் பருப்பை வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார்.

ஈரானின் பழைய அரச பரம்பரையில் தோன்றிய மூஸத்திக் அவர்கள், இன்னமும் ஒரு பெரிய நிலச்சுவான்தாராகவே இருந்து வருகின்றார். சமீப காலத்தில் சில சொத்துக்களை விற்று விட்டாராயினும், பழைய நிலைமையில் மாறுதல் ஒன்றும் காணப்படவில்லை. பிரதம மந்திரியின் சம்பளமாக வாரந்தோறும் அவருக்குக் கிடைக்கின்ற சுமார் 100 டாலர்களையும் க்ஷய ரோக நிவாரண ஸ்தாபனம் ஒன்றுக்கு நன்கொடையாக அளித்து விடுகின்றார். பிரதம மந்திரியாக வந்த பின்பு இவரது தினசரி வாழ்க்கையில் ஒரேயொரு மாறுதல்தான் காணப்படுகிறது. வெள்ளிக் கிழமைகள் தோறும் இவர் தமது 'ஜூம்ஆ' தொழுகைக்காக அஹமதாஷாபாத் என்னும் கிராமத்துக்குச் செல்லுவது வழக்கம். தெஹ்ரானுக்கு 37 மைல் தொலைவில அந்த கிராமம் இருக்கிறது. இங்கே செல்லுவதை இப்பொழுது நிறுத்தி விட்டார். விவசாயத்திலே டாக்டர் மூஸத்திக் அவர்கள் ஆழ்ந்த அக்கறையும் ஆர்மும் கொண்டு, வேலை செய்கின்றார்.

சாதாரணமாக வெள்ளிக்கிழமைகளில இவர் வேலை செய்வது வழக்கமில்லையென்றாலும், தற்சமயம் கட்டாயமாக ஏதாவது

அரசியல் அலுவல்களைச் செய்து முடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது. எவ்வளவு அதிகமான அலுவல்கள் இருந்தாலும், அருமைப் புதல்வர்கள், புதல்விகள், பேரன் பேத்திகள், மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து சிற்றுண்டி சாப்பிடுவதற்காக சில மணி நேரங்களை ஒதுக்கிவைத்து வருகின்றார்!

பிரதம மந்திரிகளுக்காக "குலிஸ்தான் அரண்மனை" என்னும் பிரதமர் காரியாலயம் ஒன்று இருக்கிறது. இங்கே சென்று தமது அலுவல்களைக் கவனிப்பதற்கு இவர் மறுத்து விட்டார்! இதேவிதமாக பிரதமர்களுக்காக அரசாங்கம் அளிக்கும் மிகப் பெரிய மோட்டார் வாகன வசதியையும் வேண்டாமென்று மறுத்துவிட்டு, அவருக்குச் சொந்தமான பச்சை நிற "டிசோட்டோ" காரையே உபயோகித்து வருகின்றார்!

முஸத்திக் தமக்குச் சொந்தமாக 2 சூட்களும் 6 சட்டைகளுமே வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஓவர் கோட்டுகளை இவர் விரும்புவதில்லை. எனினும் தெஹ்ரானின் கடுமையான குளிர் காலத்தை சமாளிப்பதற்காக இரண்டே ஓவர் கோட்டுகள் வைத்திருக்கின்றார். இதில் ஒன்றை இவர் அணிந்து கொள்ளுகிறார். மற்றொன்றை மோட்டார் டிரைவர் அணிந்து கொள்ளுகிறார்!

திருமணமும் பிரிவினையும்

(நிக்காஹும் தலாக்கும்)

முஸ்லிம்களின் விவாக சம்பந்தமான, தலாக் சம்பந்தமான சட்டங்களும், ஒழுங்கு முறைகளும், அனுஷ்டான வகைகளும் இதுவரை தமிழில் வெளிவந்ததேயில்லை. எனவே, மிகுந்த பிரயாசைப்பட்டு, நன்கு ஆராய்ச்சி செய்து இவ்வபூர்வ அனுஷ்டான நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதில் இஸ்லாமிய விவாகச் சடங்கு சார்பான சகல விஷயங்களும் அங்கங்கே அரபு விளாக்குகளுடனும், தமிழ் உச்சரிப்புடனும், தமிழ் அர்த்தத்துடனும், சகலருக்கும் புரியும் வண்ணம் அச்சிடப்பட்டுள்ளன. எவ்வெக் காரணத்தால் தலாக் சொல்லலாம், எவ்வெக் காரணங்களால் சொல்லத் தகாது என்பனவெல்லாம் இதில் விளக்கப்பட்டுள்ளன. தமிழ் முஸ்லிம் ஒவ்வொருவரும் தவறாமல் வாங்கிப் படிக்க வேண்டிய அரிய நூல். விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே, சென்னை—1.

மத்தியக் கிழக்கிலே மற்றுமொரு முஸ்லிம் நாட்டில் உரிமைச் சூரியன் உதயமாகிவிட்டது !

சுதந்தர லிபியா

“ சாரா ”

மத்தியக் கிழக்கில் மற்றொரு முஸ்லிம் நாடு இப் புதிய ஆண்டின் துவக்கத்திலே சுதந்தரம் பெற்றுவிட்டது. அரபு நாடாகிய அந்த லிபியாவிலே இன்று ஏறத்தாழ 11 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

லிபியாவுக்குக் கிழக்கே எகிப்தும், மேற்கே டுனீஷியாவும், வடக்கே மத்தியதரைக்கடலும், தெற்கே சஹாரா பாலைவனமும் இருக்கின்றன. சிரனைகா, திரிப்போலித்தானியா, பெஸ்ஸான் ஆகியமுக்கிய மாகாணங்கள் மூன்றும் லிபியாவைச் சேர்ந்தவைகள். திரிப்போலித்தானியாவில் 750,000 மக்களும், சிரனைகாவில் 300,000 மக்களும், பெஸ்ஸானில் 30,000 மக்களும் வாழ்கின்றனர்.



லிபியா மன்னர் அமீர் சன்னூஸி

1942-ல் ஸ்பெயினிலிருந்து நாடு கடத்தப்பட்ட 30,000 யூதர்களும், 1820-ல் லிவோர்னுவிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட பொக்ரோமியர்களும் இந்த நாட்டிலேதான் அடைக்கலம் புகுந்துள்ளனர். 1912-ல் இந்த நாட்டினை இத்தாலி வெற்றி கொண்டபின்பு, 45 ஆயிரம் இத்தாலியர்கள் இங்கே குடியேறியுள்ளனர்.

இவர்களைத்தவிர, இந்த நாட்டிலே பெரும்பான்மையாக வாழும் பழங்குடி மக்கள் யாவரும் அரபுகளேயாவர். இவர்கள் 6-வது நூற்றாண்டிலே இங்குகுடியேறினர். இங்கு வழங்குவது அரபுமொழி. லிபியாவின் மக்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச்சேர்ந்தவர்களாகவும், மதம், மொழி, இனம் ஆகியவற்றில் ஒன்றுபட்டவர்களாகவும் இருக்கின்றனர். இது மட்டுமின்றி, இந்த நாட்டிலுள்ள மூன்று மாகாணங்களும் பொருளாதாரத்தில் ஒன்றை மற்றொன்று ஆதாரமாகக் கொண்டு வாழ வேண்டியிருக்கிறது. நாட்டின்

ஒற்றுமைக்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறலாம்.

உதுமானிய சாம்ராஜ்யம் உலகிலே நிலைபெற்றிருந்த காலத்தில் லிபியாவும் அந்த சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இருந்தது. துருக்கி சாம்ராஜ்யத்தின் மாகாணத்துக்கு "விலாயத்" என்று பெயர். லிபியாவும் ஒரு 'விலாயத்' என்றே வழங்கியது. அந்த மாகாண அரசாங்கத்தின் தலைவராக ஒரு கவர்னர் ஜெனரலும் இருந்து வந்தார்.

1520-ல் உதுமானிய சாம்ராஜ்யத்துடன் லிபியா இணைத்துக் கொள்ளப்பட்டபோது கூட, இந்த நாடு சுயாட்சி பெற்றதாகத்தான் இருந்தது. லிபியர்களைத் தலைவர்களாகக் கொண்ட பிரதேசக் கவுன்ஸில்களாலும், முனிசிபாலிடிகளாலும் இது ஆளப்பட்டுவந்தது. 1908-ல் துருக்கியிலே புதிய அரசியல் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டபோது, உதுமானிய பார்லிமெண்டுக்கு லிபியா மக்கள் தங்களின் பிரதிநிதிகளை அனுப்பினர். லிபியர்கள் தங்களின் சுதந்தரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, இத்தாலியர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆண்மையுடன் போராடினர். முப்பது வருட காலம் லிபியா தனது சுதந்தரத்துக்காகப் போராடியிருக்கின்றது. இறுதியில் நேச தேச இராணுவம் தலையிட்டு லிபியாவின் விடுதலைக்குப் போராடியதின் விளைவாக, லிபியாவில் சுதந்தரச் சூரியன் உதயமாயிற்று. லிபியாவை விடுவித்த நேச தேசராணுவத்திலே 14 ஆயிரம் திறமைமிக்க லிபியா வீரர்கள் சேர்ந்து ஆண்மையுடன் போராடி யிருக்கின்றனர். வட ஆப்ரிக்காவில் நடந்த போர்கள் அனைத்திலும் லிபியா மக்கள் பங்குகொண்டு போராடியுள்ளனர்.



லிபியாவின் தேசியக் கொடி

சிரனேகாவில் இஸ்லாம் பரவிய வரலாறு

சிரனேகா என்பது அரபு மொழியில் "பர்க்கா" என வழங்குகிறது. இது ஆப்ரிக்காவில் மத்தியதரைக்கடல் ஓரத்தில் எகிப்துக்கு மேற்கே இருக்கிறது. ஏறத்தாழ இதன் பரப்பளவு 330,000 சதுர மைல்கள். இதன் ஜனத்தொகையும் ஏறக்குறைய இவ்வளவுதான்! இங்கே வாழும் மக்களில் பெரும்பான்மையோர் அரபுகளும், "மாலிக்கி" முஸ்லிம்களுமாக இருக்கின்றனர்.

ஹிஜ்ரி 22-ல் (கி. பி. 643) அரபுகள் இதனை வெற்றி கொண்டனர். சமாதான முறையிலேயே அரபுகள் இதனைக் கைப்பற்றினர். இங்கு வாழ்ந்துவந்த பெர்பர் கூட்டத்தினர் அரபுகளாகிய அன்னியர்களை எதிர்க்கவே இல்லை! அதற்கு மாறாக அரபுப் படைகளின் தலைவராகிய அமீர் இப்னுல் ஆஸ் அவர்களை, பெர்பர்களிற் சிலர் வரவேற்றதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு இரண்டுவிதமான காரணங்கள் இருக்கவேண்டும். அரபுகளின் மாபெரும் சைன்யங்களை எதிர்த்துப்போராடுவது இயலாத காரியம் என்பதை பெர்பர்கள் உணர்ந்திருக்கவேண்டும். அல்லது,நாட்டின் குழப்ப நிலையைப் போக்கி நல்லாட்சி நடைபெற வேண்டுமென்னும் ஆர்வத்தினால் அரபுகளை அவர்கள் வரவேற்றிருக்கவேண்டும்.

அரபுகள் இதனை வெற்றி கொள்வதற்கு முன்பே, இஸ்லாம் இங்கே பரவிவிட்டது. சிரனேகாவில் வாழ்ந்துவந்த பெர்பர்களும் புதிய மதத்தை மனமுவந்து ஏற்றுக் கொண்டனர். இதற்குக் காரணம் என்ன? அரபுகள் இங்கே வெற்றிகொண்ட போது இந்நாட்டு மக்களாகிய பெர்பர்களை மிக்க அன்புடன் நடத்தினர். இதைத்தவிர, அரபுகள் வருமுன்பு இங்கிருந்த கிறிஸ்துவ மதத்திலே போரும் பூசலும் பெருகிக் கிடந்தன. பைஸாண்டைன் ஆட்சியிலே கிறிஸ்துவர்கள் பலர் கொடிய தண்டனைகளுக்கெல்லாம் ஆளாகிவந்தார்கள்.

முற்காலத்தில் பெர்பர்களுக்கு எழுத்து மூலமாக எந்த மொழியும் சொந்தமாக இல்லை. ஆதலால், அரபு மொழியையே அவர்கள் தங்களின் தாய்மொழியாக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் இஸ்லாத்தின் திருமறையையும் ஏற்றுக் கொண்டனர்.

பெர்பர்கள் ஒரு புதிய மதத்தை ஏற்றுக் கொண்டவுடன் ஒரு புதிய நாகரிகத்தையும் அடைந்தனர். இவ்வாறாக, இதுவும ஒரு அரபு நாடுபோல எல்லா வகைகளிலும் ஆகிவிட்டது. நாளது வரையில் சிரனேகா ஒரு அசல் அரபு நாடாகவே இருந்து வருகின்றது.

அரபு சாம்ராஜ்யம் அதன் உன்னத நிலையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக இறங்கி வீழ்ச்சி

யுற்றபோது, சிரனைகாவும் 1550-ல் உதுமானியர்களால் கைப்பற்றப்பட்டது. 1835 வரையில் இந்த நாடு உதுமானிய ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. உதுமானிய ஆட்சியின்கீழ் வந்தவுடன், சிரனைகாவில், சன்னூசி என்னும் புதிய சீர்திருத்த இயக்கமொன்று துவக்கமாயிற்று. இதனைத் தோற்றுவித்தவர், சய்யித் முஹம்மது இப்னு அலீயுல் சன்னூசி என்பவர். இந்த இயக்கம் இன்னமும் இங்குள்ள மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருக்கிறது. இந்த இயக்கம், இஸ்லாமிய அனுஷ்டான முறைகளில் சில சீர்திருத்தங்களைப் புகுத்தின. மக்களிடையே இது மிக விரைவில், நாளடைவில் பரவி அதில் அரசியல் கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த இயக்கத்தின் தலைவர்களே நாளடைவில் உதுமானிய ராஜ்யத்தின் ஆதரவு பெற்று சிரனைகாவை ஆளக்கூடியவர்களாகவும் அமைந்து விட்டார்கள்.

19-ஆம் நூற்றாண்டின் நடுவிலே துருக்கி ஒரு "நோயாளி" என்று அழைக்கப்பட்டு வந்தது. ஐரோப்பிய வல்லரசுகள் உதுமானிய சாம்ராஜ்யத்தை விழுங்கி ஏப்பம் விட காத்துக்கொண்டிருந்தன. இந்த வல்லரசுகளில் ஒன்றாகிய இத்தாலி, லிபியாவின் மீது குறி வைத்துக் கொண்டிருந்தது. முதலில் இத்தாலியிலிருந்து மதப் பிரசாரகர்கள் இங்கே வந்தனர். இதைத் தொடர்ந்து, நாட்டு மக்களுக்குக் கடன் கொடுத்து உதவுவதற்காக இத்தாலியர்கள் இங்கே பாங்கிகளையும் வைத்து நடத்தினர். இவைகளில் கடன் வாங்கிய லிபியா மக்கள் பலர், தாங்கள் பெற்ற கடனைத் திருப்பித் தரவியலாமல், தங்களுக்குச் சொந்தமான நிலங்களையே இழக்க நேர்ந்தது. இப்படித் தான் இத்தாலியர்கள் லிபியாவிலே ஆதிக்கம் பெறத் தொடங்கினர். ஆனால் இதேவிதமான சமாதான முறைகளை இத்தாலி இங்கே நீண்டகாலம் பின்பற்றவில்லை. 1911-ல் துருக்கியின்மீது இத்தாலி போர்ப் பிரகடனம் செய்து, சிரனைகாவையும் தாக்கத் துணிந்துவிட்டது. திறமைமிக்க நாற்பதாயிரம் போர்வீரர்களைக் கொண்டு இத்தாலி இந்த நாட்டைத் தாக்கியது. ஆனால் இங்கே இருந்த துருக்கி சைன்யத்தில் 4000 போர் வீரர்களே இருந்தனர்! எனவே நாட்டைக் காப்பாற்றவேண்டிய கடமையும் பொறுப்பும் நாட்டு மக்களாகிய அரபுகளுடையதாகிவிட்டன. எனவே, சன்னூசித் தலைவர்களால் (ஜிஹாத்) யுத்தப் பிரகடனம் செய்யப்பட்டது.

பால்கன் யுத்தத்திலே துருக்கியர் தோல்வியுற்றுப் பின் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டபடியால், அன்று முதல் சன்னூசிகளே நாட்டின் பாதுகாவலர்களாக இருந்து வருகின்றனர். லிபியா மக்களின் போராட்டம் நீண்ட

காலமாக இடைவிடாமல் நடந்து வந்திருக்கிறது. அதுவும், படை பல மிக்க பகைவர்களை அவர்கள் எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். 1917 முதல் 1923 வரையில் ஏறத்தாழ ஏழு ஆண்டு காலந்தான், யுத்த நிறுத்த உடன்படிக்கையின் விளைவாக வாளாயுத மோதல்கள் இல்லாமல் வாழ்ந்து வந்தனர்.

லிபியா மக்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பொதுவாக அரபு நாடுகளும், முக்கியமாக எகிப்து மக்களும் தங்களின் பூரண அனுதாபத்தையும் ஆதரவையும் அளித்து வந்திருக்கின்றனர். இதற்கு அறிகுறியாக எகிப்து நாட்டு வீரர்களும் லிபியாவுடன் சேர்ந்து நின்று எதிரிகளை எதிர்த்துப் போராடியிருக்கின்றனர். ஆனால் 1932-ல சிரனைகாவைச் சேர்ந்த அரபுகள் தங்கள் வாளாயுதங்களைக் கீழே போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அவர்களின் போர்த் தளபதியாக விளங்கிய அமீருல் சன்னூசியும் எகிப்திலே அடைக்கலம் புகுந்தார். சிரனைகா மக்கள் இவ்விதமாகப் போரை நிறுத்துவதற்கு முன்பே திரிப்போலித்தானியா மக்களும் தங்களின் போராட்டத்தை நிறுத்திக்கொண்டனர். இத்தாலியரை எதிர்த்து நடத்திய இந்த உரிமைப் போராட்டத்திலே ஏறத்தாழ, 4,500 அரபுகள் தங்களின் அரிய உயிர்களைத் தியாகம் செய்தார்கள். மற்றும் பலர் இத்தாலியர்களால் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள்.

இந்தப் போரின் விளைவாக் சிரனைகாவில் வாழ்ந்த அரபுகளின் எண்ணிக்கை சரிபாதியாகக் குறைந்துவிட்டது. குறைந்துபோன மக்களிற் பலர் இத்தாலியர்களால் கொலை செய்யப்பட்டார்கள். மற்றும் பலர் அவர்களின் கொடுமைகளுக்கஞ்சி நாட்டைவிட்டு வெளியேறினர். லிபியாவிலே அரபு மக்களின் நாகரிகமும் கலாசாரமும் அறவே ஒழியவேண்டுமென்னும் கருத்துடன் இத்தாலியர்கள் இரக்கமற்ற முறையில் கொடுமைகள் பல புரிந்தனர். அரபுகளின் நிலங்களையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்து, அவர்களை அடிமைகளைப்போல் நடத்தினர். அரை குறையான ஆரம்பக் கல்வியைத்தவிர வேறு எந்தவிதமான உயர்தரக் கல்வி வசதியும் அரபுகள் அளிக்கப்படவில்லை. லிபியா மக்கள் ஏனைய அரபு நாடுகளுடன் எந்தவிதமான உறவும் கொள்ள வியலாதபடி தடுத்து நிறுத்தப்பட்டார்கள். இத்தாலியர்கள் ஏராளமாக லிபியாவில் குடியேறத் தொடங்கினர்.

இந்த நிலையில்தான் இரண்டாவது உலகப்போர் துவங்கி, லிபியாவின் விடுதலைக்கு வழிகோலியது. எகிப்து நாட்டிலே அடைக்கலம் புகுந்த அமீருல் சன்னூசி அவர்கள் நேசதேசப் படைகளுடன் சேர்ந்து லிபியாவின் படைகளுக்குத் தலைமை தாங்கிப் போராடினார். இதன் விளைவாக, 1943-ல் இத்தாலியர்கள் லிபியாவிலிருந்து

திரத்தியடிக்கப்பட்டார்கள். 1949-ல் அமீருல் சன்னூசியை பிரிட்டிஷ் அரசாங்கம் "சிரனேகாவின் அமீர்" (அரசர்) என்று ஏற்றுக்கொண்டு, அதன் உள்நாட்டு அதிகாரத்தை அவரிடம் ஒப்புவித்தது. இதற்காக ஒரு அரசியல் நிர்ணய சட்டமும் இயற்றப்பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கமும் அதனை அங்கீகரித்துள்ளது.

1947, பிப்ரவரியில் கையெழுத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி, ஆப்ரிக்காவில் அதற்குமுன் தனக்குச் சொந்தமாக இருந்துவந்த நாடுகளின் மீது இனி எவ்வித உரிமையும் கொண்டாடுவதில்லை என்று இத்தாலி ஒப்புக் கொண்டது. ஆனால் இந்த நாடுகளின் தலைவிதிகளை நிர்ணயிக்கும் பொறுப்பு, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய வல்லரசுகளிடம் விடப்பட்டது. இதற்கிணங்க, 1947-ல் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப் பெற்று, மேற்படி கமிஷனும் அந்த ஆப்ரிக்க நாடுகளுக்கு நேரிற் சென்று, அங்குள்ள மக்களின் மனப்பான்மையையும் அந்த நாடுகளின் அரசியல் பொருளாதார நிலையையும் அறிந்துவந்தது. எனினும், இந்தக் காலனிகள் விஷயத்தில் வல்லரசு நாடுகள் ஒருமுகமான தீர்மானத்துக்கு வரமுடியவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் தனது மேலாதிக்கத்தை மீண்டும் லிபியாவில் வைத்திருக்க விரும்பி, அந்தச் சிறிய நாட்டை மூன்று பகுதிகளாகப் பிரித்து, சிரனேகாவை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலும், திரிப்போலித்தானியாவை இத்தாலியின் ஆதிபத்தியத்திலும், பெஸ்ஸானை பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழும் கொண்டுவர திட்டம் தீட்டியது. எனினும் இந்த மூன்று மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் இதற்குச் சம்மதியாமல் தீவிரக் கிளர்ச்சியில் இறங்கினர். முப்பதாயிரம் மக்கள் வாழும் பெஸ்ஸானும், மூன்று இலட்சம் பேர்கள் வதியும் சிரனேகாவும் திரிப்போலித்தானியாவுடன் சேர்ந்திருந்தாலொழிய முதலிரண்டு மாகாணங்களும் சுதந்தரமாக வாழ முடியாது. எனவேதான், இந்தப் பிரச்னை ஐக்கிய நாடுகளின் மன்றத்திலே விவாதிக்கப் பட்டபோது, எகிப்தும், பாக்கிஸ்தானும் லிபியாவின் ஒற்றுமைக்காகப் போராடின; வல்லரசுகளின் வஞ்சக புத்தியைக் கண்டித்துப் பேசி, லிபியாவின் ஒற்றுமையையும் சுதந்தரத்தையும் வற்புறுத்தின.

லிபியாவின் வரலாற்றிலே பெரும்பகுதியும் அந்த நாடு பூரண சுயாட்சி பெற்றதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் சென்ற 30 ஆண்டு காலத்தில் தான் அது அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடக்க நேர்ந்தது. இந்த 30 வருட காலத்திலும் லிபியா மக்கள் தங்களின் உரிமைக்காக இடைவிடாமல் போராடி வந்திருக்கின்றனர். அத்தகைய போராட்டத்தின் விளைவாகவும், உலக நாடுகளின்

உதவியாலுந்தான், பிரிட்டிஷ் யோசனையை ஐக்கிய நாடுகளின் பொதுமன்ற அரசியல் கமிட்டி நிராகரித்து நியாயம் வழங்கத் துணிந்தது என்று கூறலாம்.

இறுதியில், 1949, நவம்பர் 29-ந்தேதியன்று, ஐக்கிய நாடுகளின் பொதுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, லிபியாவும் ஒரு பரிபூரண சுதந்தர நாடு என்பது உலகத்துக்குப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டது. இதற்கிணங்க, இன்று திருப்போலித்தானியா, சிரனைகா, பெஸ்ஸான் ஆகிய மாகாணங்களின் மக்கள் அனைவரும் சேர்ந்து, அமீர் சன்னூசி என்பவரை லிபியாவின் அரசராக இருக்குமாறு வேண்டிக்கொண்டனர்.

ஐக்கிய நாடு தீர்மானத்தின்படி, 1952, ஜனவரி முதல் தேதியன்று உதயமாக வேண்டிய "ஐக்கிய லிபியா", ஒரு வாரம் முன்னதாகவே சென்ற மாத இறுதியில் மலர்ந்துவிட்டது! சய்யித் முஹம்மது இத்ரிஸ் அல் சன்னூசி அவர்களும் மக்களின் விருப்பத்துக் கிணங்க, ஐக்கிய லிபியாவின் மன்னராகிவிட்டார். இவரே லிபியாவின் இஸ்லாமிய சீர்திருத்த இயக்கமாகிய 'சன்னூசியா'வின் தலைவராகவும் விளங்குகிறார். இவர், 1922-லிருந்து 1943 வரையில் 21 ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டு, எகிப்து நாட்டிலே இருந்து வந்தார். இவரது பாட்டனாராகிய சய்யித் முஹம்மது அல் சன்னூசி என்பவரே 'சன்னூ'சி இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவருக்கு வட ஆப்ரிக்க மக்களிடையே மாபெரும் செல்வாக்கு இருந்துவந்தது. இவரது இயக்கத்தைச் சேர்ந்த மக்களே அமெரிக்கா மக்களிடையே இஸ்லாமிய பிரசாரம் செய்து வருகின்றனர். 'சன்னூசியா' இயக்கத்தின் முயற்சியால் இலட்சக்கணக்கான மக்கள் இஸ்லாத்தில் சேர்ந்திருக்கின்றனர்.

சுதந்தர லிபியா வாழ்க!
இஸ்லாம் ஓங்குக!

வாழ்க்கையில் வெற்றி

எழுதியவர் : எம். ஆர். எம். அப்துர் ரஹீம், பி. ஏ.

"நான் இவ்வுலகில் ஒரு தடவைதான் வாழமுடியும், அவ் வாழ்நாளை ஒரு குமாஸ்தாவாக இருந்து நான் கழிக்கப்போவதில்லை" என்று பேரறிஞர் பெர்னார்ட்ஷா கூறியதாகத் தொடங்கி, விறுவிறுப்பான இனிய தமிழிலே வாழ்க்கையில் வெற்றி பெறும் வழி வகைகளைக் கூறிச் செல்லும் சிறந்த நூல். விலை ரூ. 2—8—0 (தபால் செலவு தனி.)

அன்பு நூல் நிலையம்
132, பிராட்வே, சென்னை-1.

சிறு கதை

எதிர்பாராதது!

"எம்மெஸ்"

அன்று மாலை சந்திரமோஹன் தளர்ந்த நடையுடன் வீட்டிற்கு வந்தான். வந்ததும் வாராததுமாக கைகளைக் கன்னத்தில் ஊன்றியவாறு 'ஈஸிசேரில்' உட்கார்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து விட்டான்.

"அம்மா! அண்ணா வந்து விட்டார்" என்று பக்கத்து அறையிலே நோயாளியாகப் படுத்திருந்த தனது அன்னையிடம் ஆவலுடன் கூறினாள், அவன் தங்கை பிரேமலதா.

இதற்கிடையிலே மோஹன் தன் அன்னையின் அருகில் வந்து நின்றான். அவனுடைய வாடி, வதங்கிய முகத்தைக் கண்டதும் அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

"ம்.., இந்த வரனும் நிச்சயமாகவில்லை போலிருக்கிறது! என்ன தான் கேட்கிறார்கள?" என்றாள், அவள் ஒரு பெருமூச்சுடன். பிரேமலதா அங்கிருந்து மெல்ல நழுவி விட்டாள்.

"அம்மா, அவர்கள் மூவாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கேட்கிறார்கள். ஒரு வாரத்தில் முடிவு சொல்வதாகச் சொல்லி வந்திருக்கிறேன். என்னவோ எனக்கு நம்பிக்கை இல்லை." என்று சொல்லியபடி வெளியே சென்றான் மோஹன் விரக்தியுடன்.

* * *

மத்தியதர வகுப்பு என்று சொல்லப்படும் இரண்டுங் கெட்டான் வகுப்பிலே மோஹனுடைய குடும்பம் ஒரு நிரந்தர அங்கத்தினராக இருந்து வந்தது. இரண்டு சகோதரர்கள், ஒரு சகோதரியுடன் பிறந்த அவனுக்கு வாழ்க்கை ஒரு பெரும் போராட்டமாகவே இருந்து வந்தது. மிகவும் கஷ்டப்பட்டு, உபகாரச் சம்பளத்தின் உதவியாலும், தனது திறமையினாலும் எம். ஏ. வரை படித்து விட்டான். அவனது குடும்பத்தினர் அவனை ஒரு கலங்கரை விளக்கமாகவும் நம்பிக்கை நட்சத்திரமாகவும் கருதினர். அவர்களுடைய நம்பிகைகை வீண் போகவில்லை. பட்டம் பெற்ற அந்த ஆண்டிலேயே ஒரு கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளனாக நியமிக்கப் பெற்றான். சம்பளம் பஞ்சப்படி எல்லாமாகச் சேர்ந்து மாதம் 250 ரூபாய் வந்தது. அதைக் கொண்டு சிக்கனமாகச் செலவு செய்தான். தன்னுடைய இரு

ச்சேர்த்தார்களையும் காலேஜில் சேர்த்துப் படிக்கவைத்தான். தங்கை பிரேமாவை எஸ். எஸ். எல்.ஸி. வரை படிக்க வைத்தான். அதற்குள் அவள் 'தள தள' வென்று காட்டு ரோஜா போல் வளர்ந்து பருவமடைந்து விட்டாள். அவளை நல்ல இடத்திலே காலாகாலத்தில் கலியாணம் செய்துவிடவேண்டும் என்ற ஆவலும் கவலையும் அவனிடம் மேலோங்கி நின்றது. அதன் விளைவாக நடந்த இரண்டு வருடங்களாக முயற்சி செய்தான். ஆனால் சில காரணங்களினால் அதுவரை கலியாணம் தடைபட்டு வந்தது. பிரேமாவைப் பற்றிய கவலையினால் அவனுடைய அன்னையின் உடல் மெலிந்து நாளடைவில் படுக்கையில் படுத்து விட்டாள். மன நோயும், உடல் நோயும் அவளைப் பிடித்துக் கொண்டன. தன் இன்னுயிர் அன்னையைக் காப்பாற்றுவதற்காகவேனும் பிரேமாவைக் கலியாணம் செய்து கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு அன்று காலையில் ஒருவரனைப் பார்க்கச் சென்றிருந்தான்.

அது நல்ல இடம்தான். மாப்பிள்ளை ஒரு பட்டதாரி. பார்ப்பதற்கு அழகாகவுமிருந்தான். பிரேமாவுக்கு நல்ல ஜோடி என்று அவன் கருதினான். மாப்பிள்ளை வீட்டார்களும் அவனை நன்கு வரவேற்று உபசரித்தார்கள். ஆனால் அவர்கள் விதித்த நிபந்தனை அவனை தூக்கிவாரிப்போட்டது. அதுவரை மிகவும் சிரமத்துடன் சேர்த்து வைத்திருந்த சில நூறு ரூபாயுடன், கொஞ்சம் கடன் வாங்கி கலியாணத்தை நடத்திவிடலாமென்று அவன் அதுவரையில் கனவு கண்டிருந்தான். ஆனால் மாப்பிள்ளை வீட்டார் மூவாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கேட்டார்கள். அது கேட்டு, அவன் திகைத்தான். அவனுக்கு மேலே பேசுவதற்கு நா எழவில்லை. அவன் முகத்திலேற்பட்ட மாறுதல்கள் அவனுடைய ஏமாற்றத்தை நன்கு எடுத்துக் காட்டின. எவ்வளவு குதூகலத்துடன், நம்பிக்கையுடன் அங்கு சென்றானோ அவ்வளவு வருத்தத்துடனும், வேதனையுடனும் அவன் தனது வீட்டிற்கு வந்தான். தன்னை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் தன் அன்னையிடம் இந்தத் தோல்வியைக் கூறி வருத்தத்திற்குள்ளாக்காமலிருப்பதற்காகவே அவன் வந்தவுடன் அவளிடம் செல்லாமல் நாற்காலியிலே உட்கார்ந்துவிட்டான்.

* * *

அந்த வாரம் முழுதும் ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்துகொண்டிருந்த மோஹனுக்கு சோர்வு ஏற்பட்டது. தனது அத்தையின் ஊரிலே சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினான். இதற்கு வேறு ஒரு காரணமுமிருந்தது. அப்பொழுதுதான் கல்லூரி பரீட்சை முடிவடைந்திருந்தது. அவ்வருடத்திய பி.ஏ

பரீட்சையின் விடைத்தாள்கள், 600 அவனிடம் வந்திருந்தன. இரண்டு வாரத்திற்குள் அவற்றைப் பரிசீலித்து சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு அனுப்பியாக வேண்டும். அவற்றை நிதானத்துடனும், நிம்மதியுடனும் பார்க்க வேண்டுமல்லவா? வீட்டிலே, அவ்வளவு தொல்லைகள், வேலைகளுக்கிடையே அவற்றையும் ஒழுங்காகப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. ஆகவே மறுநாள் காலையிலேயே தனது அத்தையின் ஊருக்குப் புறப்பட்டு விட்டான். வழி நெடுக தனது தங்கையின் கலியாணத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். உலகம் அவனைப் பார்த்துச்சிரித்தது! ஆனால் அவனுக்கோ, உலகைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா என்று தோன்றவில்லை. கேவலம் சில ஆயிரம் ரூபாய்களில் பிரேமாவின் நல்வாழ்வு ஊசலாடுவதைக் கண்டு வருந்தினான். சிந்தனை என்ற கொந்தளிக்கும் கடலிலே சிக்கி, ஏழ்மை, ஏமாற்றம், தோல்வி என்பனபோன்ற சுறுமீன்கள், திமிங்கிலங்களின் தாக்குதலுக்குட்பட்ட மனிதனுனன் அவன்.

போர்ட்டர் ஏதோ ஒரு ஊரின் பெயரை மூன்று முறை உறக்கக் கூவினன். அது கேட்டு உணர்வடைந்த மோஹன் பரபரப்புடன் எழுந்து கையிலே பெட்டியை எடுத்துக் கொண்டு வண்டியினின்றும் இறங்கினன். அருகிலிருந்த குழாயில் முகத்தை அலம்பிக் கொண்டு ஒரு ரிக்ஷாவைத் தேடிச் சென்றுன்.

"ஹலோ! மிஸ்டர் மோஹன்" என்ற தனக்கு எப்பொழுதோ பழக்கமான குரல் கேட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே அவனுடன் பி. ஏ. வரை படித்த கல்லூரி நண்பன் ஒருவன் நின்று கொண்டிருந்தான், கைலாகு கொடுத்தவாறு.

"அட, நீயாப்பா! அடையாளமே தெரியவில்லையே! ஆமாம் உன் பெயர், கனகு...கனகா...கனக சபாபதி! அப்படித்தானே?" என்றுன் மோஹன் உற்சாகத்துடன்.

"சரிதான்! பெயரையே மறந்து விட்டாயா? ஆமாம் இங்கு எங்கு வந்தாய்?" என வினவினன் நண்பன்.

"என் அத்தை வீடு இருக்கிறது, விடுமுறை காலம்; ஒரு வாரம் தங்கிப் போகலாமென்று வந்தேன்" என்றுன் மோஹன்.

"ஒரு வாரமென்ன! ஒரு மாதம் தான் தங்கிவிட்டுப் போயேன்! நான் கூட இப்பொழுது இவ்வூரில்தான் இருக்கிறேன். இப்பொழுது நேராக எனது வீட்டிற்கு வந்து விடு" என்று சொல்லியவாறு யாரோ ஒரு பெயரைக் கூவியழைத்து, மோஹனுடைய பெட்டியை எடுத்துக் கொள்ளச் செய்தான். அவன், அருகில் நிறுத்தப் பட்டிருந்த 'பாண்டியாக்' காரின் கதவைத் திறந்து மோஹனை காரில் ஏறுமாறு கேட்டுக் கொண்டான். மோஹன் திகைப்புடன் அந்தக் காரில் ஏறிக்கொண்டான்.

"சபாபதி! இது உன்னுடைய கார்தானு? எப்பொழுதுவாங்கினய்?" என ஆச்சரியத்துடன் மோஹன் வினவினன்.

அது கேட்டு, சபாபதி சிரித்தான். "பழைய சபாபதி என்று நினைக்கி

ரூயா? இந்தக் கார் மட்டுமல்ல, இன்னும் ஒரு 'ப்யூக்' கூட இருக்கிறது; அதெல்லாம் ஒரு பெரிய கதை" என்று சொல்லிக் கொண்டே வாயிலிருந்த சிகரெட் புகையை சுருள் சுருளாக வெளியே தள்ளிவிட்டு, காரை 'ஸ்டார்ட்' செய்தான். கார், காற்றைக் கிழித்துக் கொண்டு ஓடியது. மோஹனுக்கு, பழைய நினைவுகள் எழுந்தன.

சபாபதி, மோஹனுடன் பி. ஏ. வரை ஒரே கல்லூரியில் படித்தவன். படிப்பிலே மோஹன் எவ்வளவு சூட்டிகையாக விருந்தானோ அவ்வளவு மக்காக இருந்தான் சபாபதி. பேராசிரியர் எவ்வளவோ பாடுபட்டு, மாணவர்கள் ரசிக்கத்தக்க முறையிலே தன்னுடைய விரிவுரைகளை, விளக்கவுரைகளை ஆற்றுவார். ஆனால் சபாபதி, ஹாலின் ஒரு மூலையிலே தூங்கி வழிந்து கொண்டிருப்பான்! இடையிடையே மெல்ல நழுவிச் சென்று விடுவான்! அவனை தோற்றத்திலே ஒரு மாணவன் என்றே கூறமுடியாது. மடிப்புக் கலையாத வெள்ளை வேஷ்டியும் சட்டையும்தான் அவன் எப்பொழுதும் அணிந்து வருவான். சட்டையின் காலரை மேலே தூக்கி விட்டுக் கொள்வான். கையிலே எந்தவித புத்தகமும் இருப்பதில்லை. சட்டைப் பையிலே பேனாவோ பென்சிலோ காண்பது அரிது! ஆனால் எப்பொழுதும் அவனை விட்டுப் பிரியாத 'சிகரெட்' சட்டைப்பையில் இருக்கும்!

அவ் வருடம் நடந்த பி. ஏ. டிகிரி பரீட்சையில் எல்லோரும் எதிர் பார்த்தவாறே சபாபதி தேர்வடையவில்லை. 'மார்ச், செப்டம்பர், மார்ச்' என்னும் பலருக்குப் பழக்கமான அந்த முடிவில்லாத பாதையில் அவன் சென்று கொண்டிருப்பதாகக் நண்பர்கள் மூலம் மோஹன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அதே சபாபதி இன்று ஒரு பெரிய பணக்காரன்! 'ஏதாவது எதிர் பாராத விதத்தில் கிடைத்த சொத்தாக இருக்குமோ? அல்லது 'லாட்டரி'யில் கிடைத்திருக்குமோ?

"என்ன மோஹன்! காரிலிருந்து எழுந்து வர மனமில்லையா?" என்ற சபாபதியின் குரல் கேட்டு, மோஹன் உணர்வடைந்தான். பரபரப்புடன் கரை விட்டிறங்கினான். அது ஒரு பெரிய பங்களா. வாசலிலே காவல்காரர்கள் நின்றனர். வேலையாட்கள் அங்குமிங்கும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர். சபாபதியுடன் வீட்டிற்குள் நுழைந்த மோஹனின் கண்கள் ஆச்சரியத்தினால் அகல விரிந்து எங்கும் நோக்கின.

சபாபதி, மோஹனின் திகைப்புக்குரிய காரணத்தைப் புரிந்து கொண்டான். அவன் மெல்ல சிரித்தான்.

"மோஹன்! நீ மட்டுமல்ல, எனது கல்லூரி நண்பர்களில் பலரும் இப்படித்தான் ஆகிவிடுகிறார்கள் இங்கு வந்ததும். கல்லூரியிலே தூங்கி வழிந்து கொண்டிருந்த, உருப்படாதவன், உதவாக்கரை என்று பலரால் சபிக்கப்பட்ட நான் இன்று கௌரவமாக வாழ்கிறேன்; பல இலட்சங்களுக்கு அதிபதியாக விருக்கிறேன் என்பதைப் பார்த்ததும் அவர்கள் திகைத்துப்போகிறார்கள்! பலவிதமான கேள்விகளைக்கேட்டு மூளையைக் குழப்பிக் கொள்கிறார்கள்! அதிலே நீயும் ஒருவன் என்பது இப்பொழுது நிதர்சனமாகிவிட்டது" என்று சொல்லி, மோஹனை ஒரு சோபாவில் உட்காரச்செய்து, தானும் உட்கார்ந்து கொண்டு தன்னுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தான்:

"உண்மையில், இத்திரண்ட செல்வத்தை, என்னுடைய இடையறாத உழைப்பினால், :திறமையினால் நானே

இந்தக் குறுகிய காலத்தில் சம்பாதித்தேன். அது கூட தவறு! சந்தப்பத்தைப் பற்றிப் பிடித்து கொள்ளையடித்தேன்!”

“பல முயற்சிகளுக்குப் பிறகு மிகவும் கஷ்டப்பட்டு பி. ஏ. டிகிரி வாங்கினேன். என்னுடைய உறவினர் ஒருவரின் சிபாரிசினால் தாலுக்கா சப்ளை ஆபீஸராக நியமிக்கப்பெற்றேன்.

“முதல், ஆறுமாதம் எவ்வளவோ கஷ்டப்பட்டு நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற எண்ணத்தினால் வேலை செய்துவந்தேன். இரவு பகல் தூக்கமின்றி, காடு வனாந்தரங்களிலே கள்ளத்தனமாக அரிசி கொண்டுசெல்கிறவர்களைப் பிடிப்பதற்காக ஜீப்பிலே சென்றிருக்கிறேன். விரோதிகள் எனது உயிருக்கே உலை வைத்திடவும் எத்தனையோ தடவைகள் முயன்றார்கள். ஆனால் அதிர்ஷ்டவசத்தினால் அவற்றினின்றும் தப்பிப் பிழைத்தேன்.”

“எவ்வளவுதான் கஷ்டப்பட்டு வேலை செய்தபோதிலும், அதிகாரிகள் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. மேலும், எனக்கு உடனடியாகப் பணம் தேவையாக இருந்தது. அதற்கு வேறு ஒரு உபாயத்தைக் கையாள ஆரம்பித்தேன்.”

அன்றிரவும் வழக்கம் போல ஜீப்பை நிறுத்திவிட்டு கடற்கரை ஓரமாகச் சென்று கொண்டிருந்தேன். ஓரிடத்தில் 'மினுக் மினுக்' கென்று ஒரு விளக்கின் மங்கிய வெளிச்சம் தெரிந்தது. என்னுடன் எப்பொழுதும் வரும் போலீஸ்காரன் பின் தொடர, நான் அவ்விடத்தை அடைந்தேன். அங்கே எனக்கு ஓரளவு அறிமுகமான ஒரு பெரும் வியாபாரி நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். அந்நேரத்தில், அவ்விடத்திலே அவருக்கு என்ன வேலை? அவரை நான் கண்ணியமானவர் என்று அதுவரை கருதியிருந்தேன்.

“என்னைக் கண்டதும் அவருடைய முகம் மாறுபட்டது. என்ன மிஸ்டர் செட்டியார்” இங்கே இந்த நேரத்தில் ......என்று கேட்டேன்.

“ஒன்று மில்லை! வந்து.........” என்று இழுத்தார். என்னை அருகிலே அழைத்து ஏதோ சொன்னார். கையிலே ஒரு கத்தை நோட்டுக்களைத் திணித்தார். எனக்கு முதலில் வாங்குவதற்கு மனம் வரவில்லை. என்றாலும் என் தேவையை முன்னிட்டு அதை வாங்கிக் கொண்டேன்.”

“அது முதல் துணிகரமாக இலஞ்சம் வாங்கத் தலைப்பட்டேன். இரண்டு மூன்று ஆண்டுகளில் பதினாயிரக் கணக்கான ரூபாய்களை சம்பாதித்து விட்டேன். நான் லஞ்சம் வாங்கும் செய்தி பகிரங்க ரகசியமாகி விட்டது. எங்களது டிபார்ட்மெண்ட் மூலமாக என்னை விசாரித்தார்கள். விசாரணையில் ஒன்றும் ருசுவாகவில்லை. என்றாலும், நானே அந்த வேலையை ராஜினாமா செய்து விட்டேன்.

“ஒரு குடிகாரன், எப்படி குடித்து மயக்கமுற்ற நிலையில் கூட மேலும் மேலும் குடிக்க விரும்புகிறானோ, அதைப் போலவே நானும் மேலும் மேலும் பணத்தை சம்பாதிக்க எண்ணினேன். அதற்கான மார்க்கத்தைப் பற்றி நான் கொஞ்சமும் சிந்திக்கவேயில்லை. அதன் பயனாக, நான் கள்ள மார்க்கட்டிலே புகுந்தேன். கொள்ளை லாபம் அடித்தேன். உன்னைப்போன்றவர்களுக்கு சிமெண்ட் ஒரு மூட்டை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்த காலத்தில் என்னிடம் ஆயிரக்கணக்கான மூட்டைகள் இருந்தன! ஊரெங்கும் துணிப் பஞ்சம் தலைவிரித்தாடியபோது, என் வீட்

டில் ஜவுளி பேல் பேல்களாக இருந்தன!"

"இவ்விதமாக நான் ஒரு இலட்சாதிபதி யாகிவிட்டேன். இந்த வட்டாரப் பெரிய மனிதர்களின் வரிசையில் நானும் ஒருவன்! நான் கலந்துகொள்ளாத விசேஷ வைபவமோ, விழாவோ கிடையாது!" என்று தன்னுடைய கதையை முழுவதும் மோஹனிடம் கூறினான்.

மோஹன் வியப்புக்கடலில் ஆழ்ந்தான். அவனைப்போல் உண்மையிலேயே பாடுபடுபவருக்குப் பணப் பஞ்சம், ஆனால் தகாத வழிகளிலே, பிறரை ஏமாற்றிக் கொள்ளை யடிப்பவர்கள் பணத்தில் புரளுகிறார்கள்!

இதற்கிடையில், வேலைக்காரன் ஒருவன் காபி, பலகாரங்களை ஒரு தட்டில் எடுத்துவைத்துவிட்டுப் போனான். இருவரும் அவற்றை சாப்பிட்டார்கள்.

"மோஹன்! உன்னைப்பற்றிய விபரங்களை எனக்குச் சொல்லவில்லையே! முன்பு காலேஜில் புரொபஸராக இருந்தாய். இப்பொழுதும் அங்குதானிருக்கிறாயா? என்ன சம்பளம்?" இதைப் போன்ற கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான்.

"என் வாழ்வில் எந்தவிதமான மாற்றமுமில்லை. 250 ரூபாய் சம்பளத்தில் அதே கல்லூரியில்தானிருக்கிறேன்." என்று மோஹன் கூறினான்.

"மோஹன்! இந்த வருடம், பி.ஏ. ஆங்கிலம் முதல் பேப்பரை நீ திருத்தப்போவதாகக் கேள்விப்பட்டேன். அதனால் உன்னைப் பார்க்கவேண்டுமென்று எண்ணினேன். ஆனால் நீயே இங்கு வந்துவிட்டாய்" என்று இழுத்தான்.

அதைக்கேட்டதும், மோஹனின் முகத்தில் ஒரு மாறுதல் தோன்றியது. 'முதல் பேப்பருக்கும் சபாபதிக்கும் என்ன சம்பந்தம்?' என்று தனக்குள்ளே அவன் கேட்டுக்கொண்டான்.

சபாபதியும் மோஹனுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டவனாய்,

"மோஹன்! என் மைத்துனன் இவ் வருடம் பி. ஏ. பரீட்சை முதல் பாகம் மட்டும் எழுதியிருக்கிறான். மற்ற பாகங்களை முன்பே 'பாஸ்' செய்துவிட்டான். ஆனால் முதல் பேப்பரில் திருப்திகரமாக எழுதவில்லை என்கிறான். அவனேதான் பேப்பர் உன்னிடம் போயிருக்கிறதென்பதை அறிந்து என்னிடம் கூறினான். ஆகையால், அதைக் கவனித்து ஏதாவது செய்யவேண்டும்'! என்று கூறி, மோஹனை நிமிர்ந்து பார்த்தான்.

மோஹனுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. வழியில் போகிற சனியனை விலைக்கு வாங்கினோமே என்று நினைத்தான். மனச்சாட்சிக்கு விரோதமாக அவன் இதுவரை நடந்ததில்லை. உயிர், உடல், பொருள் அனைத்திலும் மேலானதாக மனச்சாட்சியை அவன் மதித்து வந்திருக்கிறான். ஆனால் இப்பொழுது ஒரு நண்பனுக்காக அதைக் காற்றில் பறக்க விடுவதா? என்று எண்ணினான்.

நண்பன் கூறியபடி செய்தால் பணக்காரனாகிய அவனுடைய அன்பும் அருளும் பொருளும் பெரிய அளவில் கிடைக்கும். ஆனால் அவனுடைய பரிசுத்தமான இதயம், மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பதை வழிமறித்து நின்றது.

"என்ன, மிஸ்டர் மோஹன்! என் வேண்டுகோளை பூர்த்திசெய்ய முடியாதா?" என்றான் சபாபதி, சற்று ஏமாற்ற மடைந்தவனாய்.

"மன்னிக்கவேண்டும், எவ்வளவோ நினைத்துப் பார்த்தேன். என்

மனம் இடம் தரவில்லை. சென்னை சர்வகலாசாலை இந்தியாவிலேயே தலை சிறந்தது. அதன் பெயருக்கும் புகழுக்கும் மாசு கற்பிக்க நான் விரும்பவில்லை!"

"மோஹன்! என் மைத்துனன் பணக்காரன். அவனுக்காக நீ ஒன்றும் இனாமாகச் செய்யவேண்டியதில்லை! இதற்காக ரொக்கமாக மூவாயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறான், இதைப் பெற்றுக்கொள்! காரியத்தை முடித்துவிடு. அவனிடம் எப்படியாவது முடித்துவிடுகிறேன் என்று வாக்களித்துவிட்டேன். என்னுடைய வாக்குறுதியை நண்பனாகிய நீ காப்பாற்றவேண்டும்" என்று சொல்லி, கோட்டுப் பாக்கெட்டிலிருந்து மூவாயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவனிடம் நீட்டினான்.

'மூவாயிரம்' என்றவுடன் மோஹனுடைய எண்ணம் வெகு விரைவில் தன் தங்கை பிரேமலதாவிடம் சென்றது. பிரேமா, கலியாண கோலத்திலே தன்னை வந்து வணங்குவது போலவும், அவளைத் தன் இருகரங்கொண்டு தூக்கி நிறுத்தி ஆசீர்வதிப்பதுபோலவும், தன் அருமை அன்னை அதைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிவதுபோலவும் அவனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது.

"மோஹன்! என்ன யோசனை செய்கிறாய்? காலமறிந்து நடந்துகொள்ள வேண்டாமா? ம்...இதை வாங்கிக்கொள்" என்று சொல்லி அவனுடைய கையில் கரன்ஸி நோட்டுகளைத் திணிக்க முற்பட்டான் அவன்.

ஆனால், பணத்தைக் கண்டதும் மோஹன் மிரள ஆரம்பித்துவிட்டான். அதைத் தொடவே அவன் மனம் துணியவில்லை.

"மிஸ்டர் சபாபதி! நான் என் வாழ்விலே எதை எதையோ இழந்துவிட்டேன்! சொத்து இழந்தேன், சுகமிழந்தேன். ஆனால் என்னுடைய மானம், மரியாதை, மனசாட்சி, இவைகள் என்னைவிட்டு அகல மறுக்கின்றனவே, என் செய்வது!" என்று சொல்லி, பணத்தை வாங்க மறுத்தான் மோஹன்.

சபாபதி 'இடி இடி'யென சிரித்தான்.

"மோஹன்! நீ உலகந்தெரியாதவன்! இப்படியெல்லாம் நடந்துகொண்டால் உலகிலே வாழ்ந்துவிடலாமென்று நினைக்கிறாயா? உன்னைப் போன்றவர்களுக்கு இந்த உலகம் சரியல்ல! வேறு ஒரு உலகத்தைத் தான் சிருஷ்டிக்க வேண்டும்! ஆமாம், உனக்குப் பணத்தேவையே கிடையாதோ?"

"சபாபதி! எனக்கா பணம் தேவையில்லை? என் தங்கைக்குக் கலியாணம் செய்விக்க வேண்டும். மூவாயிரம் ரூபாய் தகராறில்தான் கலியாணம் தடைபட்டிருக்கிறது. என் அன்னைக்கு அவளை எப்படியாவது கலியாணம் செய்து கொடுத்துவிட வேண்டும் என்ற ஒரே கவலை. அதே கவலையினால் அவள் இப்பொழுது ஒரு நோயாளியாகிவிட்டாள்." என்றான் மோஹன்.

அதைக்கேட்டதும், சபாபதி இன்னும் அதிகமாகச் சிரித்தான்.

"சரிதான்! நீ சாதாரண முட்டாளல்ல! வடிகட்டிய முட்டாள்! ஒரே தங்கைக்கு எப்படியாவது கலியாணம் செய்து வைப்பதை விட்டுவிட்டு, மனச்சாட்சி, மரியாதை என்றெல்லாம் உளருகிறாயே! நீ நினைப்பதுபோல் நடந்துவந்தால், உன் தங்கை உன்னோடு இருக்க வேண்டியதுதான். உன் தாயார் ஏக்கத்துடன் இறக்க வேண்டியதுதான்!" என்று தன் நண்பன் என்ற முறையில் அவனை அன்புடன் கடிந்துகொண்டான் சபாபதி.

"நீ என்னதான் சொன்னாலும், என்னால் முடியாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு, மறுநாள் அவனை வந்து பார்ப்பதாகச் சொல்லி, மோஹன் தனது அத்தை வீட்டிற்குப் புறப்பட்டான்.

நெடுநாட்களுக்குப்பின்னர் திடுமென வந்த மோஹனை, அவனுடைய அத்தை அன்புடன் வரவேற்று உபசரித்தான். மோஹன் உடனே குளித்து சாப்பிட்டுவிட்டு மேஜையின் அருகில் வந்து உட்கார்ந்து, பெட்டியைத் திறந்து சபாபதியின் மைத்துனனுடைய பேப்பரை எடுத்தான்,

கையெழுத்துப் பிரமாதமாக இருந்தது. எல்லா கேள்விகளையும் முயற்சி செய்திருந்தான். ஆனால் சரிவர எழுதவில்லை. ஒரு கேள்வியில் 'ராபர்ட் ப்ரவுனிங்கின்" வாழ்க்கைத் தத்துவத்தைப்பற்றி கேட்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் 'கீட்ஸின்' வாழ்க்கைத் தத்துவத்தை எழுதியிருந்தான்! அதிலும் எத்தனையோ இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள் மலிந்திருந்தன. உண்மையில், பதினைந்து மார்க்குகள்தான் அந்த பேப்பருக்குக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு அவன் வந்தான். ஆனால் சபாபதி முப்பது மார்க்குகள் மொத்தமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். எப்படிக் கொடுப்பது என்பது அவனுக்குப் புரியவே இல்லை! அவனது மனதிலே ஒரு பெரும் போராட்டம் எழுந்தது. அவனிருந்த வேலையிலே எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும் மொத்தமாக மூவாயிரம் ரூபாய் எங்கே கிடைக்கப்போகிறது? பயந்து நடந்தால், வறுமைதான் தொடருகிறது! இப்படியெல்லாம் அவன் எண்ணினான். அவன் கண் முன்பு, சபாபதியின் வாட்ட சாட்டமான தோற்றம், அவனுடைய ஆடம்பரமான பங்களா,வேலையாட்கள், அழகிய கார் அனைத்தும் வந்து நின்றன. அதே சமயத்தில், தான் குடியிருக்கும் வாடகை வீடும் அவனது மனக்கண் முன்பு தோன்றியது. இருவருடைய வாழ்க்கைத் தரத்திற்குந்தான் எவ்வளவு வேற்றுமை!

"முட்டாளே! கொள்ளைக்காரன் ஒருவன் சொன்னான் என்பதற்காக உன் கொள்கையை விட்டுக் கொடுக்கலாம் என்று எண்ணுகிறாயா? அவர்கள் வாழ்கிறார்களே, நான் வதைகிறேனே என்கிறாயா? அவர்களுடைய பகட்டான, படாடோபமான வாழ்வைக் கண்டு மயங்கிவிடுகிறாய்! அவர்களின் அந்தரங்க வாழ்வைப்பற்றி உனக்கென்ன தெரியும்? அவர்கள் தினந்தோறும் எத்தனை தடவை அச்சத்தால் செத்து செத்துப் பிழைக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா?" இப்படி ஒரு குரல் அவனது மனதின் மூலையிலிருந்து எழுந்தது.

மோஹனுடைய மனம் தெளிந்தது. அவனையும், சபலம் ஆட்கொள்ள முயன்றது. ஆனால் முடியவில்லை! அவன் அந்த பேப்பருக்குப் பதினைந்து மார்க்குகள், மட்டுமே கொடுத்துவிட்டு மற்றப் பேப்பர்களைத் திருத்த ஆரம்பித்தான்.

மறுநாள் காலையில் மோஹன் சபாபதியின் பங்களாவுக்குச் சென்றான். சபாபதி யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். மோஹனைக் கண்டதும் அன்புடன் வரவேற்றான். இருவரும் சிறிது நேரம் ஏதேதோ பேசினர்.

"மோஹன்! என்ன, அந்த பேப்பரைத் திருத்திவிட்டாயா? எத்தனை மார்க்குகள் போட்டிருக்கிறாய்?" என்று தனது காரியத்திலேயே கண்ணாக விருந்த சபாபதி மோஹனிடம் வினவினான்.

"சபாபதி! எவ்வளவோ தாராளமாகத் திருத்தியும் பதினைந்து மார்க்குகளுக்குமேல் கொடுக்க முடியவில்லை! சபாபதி! நீ என்னுடைய நண்பன் தான். உனக்கு என்னாலான உதவியைச் செய்யவேண்டுவது எனது கடமைதான். ஆனால் இந்த விஷயத்தில் மட்டும், நான் ஒன்றும் செய்யமுடியாமலிருக்கிறேன். அதற்காக மிகவும் வருந்துகிறேன். எனக்கு எனது கொள்கையிலே உள்ள பிடிப்புதான் இதற்குக் காரணம்."

"வாழத் தெரியாதவன், இருபதாம் நூற்றாண்டின் அதிசயப் பிறவி என்று நீ சொல்லுவது என் காதில் விழுகிறது! என்றாலும், நான் செய்த முடிவு இறுதியானது. என்னை மன்னித்துவிடு" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குச் செல்ல எழுந்தான்.

சபாபதி உடனே எழுந்து மோஹனின் கைகளைப்பற்றி, நாற்காலியில் உட்காரவைத்துப் பின்வருமாறு கூறினான்:

"மோஹன்! உனக்கும் எனக்கும் தான் எவ்வளவு வேற்றுமை! கடந்த சில வருடங்களாக நான் மனச்சாட்சிக்கு விரோதமாகவே நடந்து வந்திருக்கிறேன். நன்மை தீமைகளைப் பற்றி நான் அக்கறை கொண்டதே இல்லை. ஆனால் நீயோ உன்னுடைய வறுமைக்காலத்திலேயும், உன்னைத் துன்பமும் துயரமும் முற்றுகையிட்டுக் கொண்டிருந்த போதிலும், உயிர், உடல், பொருள் ஆகியவற்றைப பார்க்கினும் அதிகமாக உனது மனசாட்சிக்கு மதிப்புக் கொடுத்துவருகிறாய். இதைப் பார்க்கும்பொழுது நான் உண்மையாகவே வெட்கித் தலை குனிகிறேன்.

"மோஹன்! நான் எவ்வளவு பணத்தைக் கொட்டிக் கொட்டிக் கொடுத்தாலும் நீ என் கருத்துக்கு இசைந்து வரமாட்டாய் என்பது எனக்கு நன்கு தெரியும். என்றாலும், உன்னுடைய தற்போதைய தேவையை முன்னிட்டாவது பணத்தை வாங்கிக்கொண்டு என் வேண்டுகோளுக்கு இணங்குவாய் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. மேலும் உன்னை சோதிக்கவும் எனக்கு ஒரு ஆசை. ஆகவேதான் நீ மறுத்துச் சொல்லியும் அடுத்தடுத்து நான் உன்னை வேண்டினேன்.

"மோஹன்! நான் அடுக்கடுக்காக பொது மக்களுக்கும், தனிப்பட்டவருக்கும் எண்ணற்ற தீமைகளைச் செய்திருக்கிறேன். அதன் பயனாகத்தான் நான் இந்த ஆடம்பர வாழ்வு நடத்துகிறேன். என்றாலும் என் மனதிலே கொஞ்சம் ஈரமும் இருக்கிறது. உன்னைப் போன்ற உண்மையாளர்களை நான் பாராட்டுகிறேன்.

"மோஹன்! மூவாயிரம் ரூபாய் தகராறில் தங்கை பிரேமலதாவின் கலியாணம் தடைபட்டிருக்கிறது என்று கூறினாயல்லவா? இதோ இப்பொழுது அந்த தொகையைத் தருகிறேன். நீ எதற்கும் கவலைப்படாமல் அந்த வரனையே முடித்துவிடு. பணத்தை எப்பொழுது உன்னால் திருப்பித் தரமுடியுமோ அப்பொழுது கொடு. கொடுக்காவிட்டாலும் அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். உன், தங்கை என் தங்கையைப்போல! அவளுக்காக நான் செய்ததாக இருக்கட்டும்!" என்று உணர்ச்சியுடன் கூறி நிறுத்தினான் சபாபதி.

மோஹன் கனவுலகில் சஞ்சரித்தான். அவன் தனது கண்களையே நம்ப முடியவில்லை, சபாபதி உண்மைதான் பேசுகிறானா, அல்லது நாடகம் நடிக்கின்றானா என்று அவனுக்குப் புரியவில்லை. இதற்கிடையில் சபாபதி இரும்புப் பெட்டியிலிருந்து மூன்று ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவனிடம் கொடுத்தான்.

முதல் நாள் அதே தொகையைப் பெற்றுக்கொள்ள அவனது கைகள் நடுங்கின. ஆனால் இன்று ஆவலுடன் வாங்கிக் கொண்டன. மோஹனின் பார்வையிலே நன்றியறிதலுடன்கூடிய உணர்ச்சி நிறைந்திருந்தது.

"சபாபதி! உன்னுடைய வேண்டுகோளை நிராகரித்த எனக்கு நீ செய்யும் உதவி யாரும் எதிர்பார்க்க முடியாதது. நீ இவ்வளவு அன்புடன் நடந்து கொள்வாய் என்று நான் நினைக்கவில்லை. என்னுடைய, இல்லை—பிரேமாவின் அதிர்ஷ்டம்தான் இதற்குக் காரணம். சரியான காலத்தில் நீ செய்த உதவியை நான் என்றென்றும் மறக்க முடியாது" என்று தழுதழுத்த குரலில் கூறி அவனுக்கு நன்றி, செலுத்தினான்.

உங்கள் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய

முக்கியமான நூல்கள்

இஸ்லாம்

(10-ம் பதிப்பு—படங்களுடன்)

இஸ்லாத்தின் தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத் முதலிய ஐந்து கடமைகளும், அவற்றின் விபரங்களும் விரிவாக அடங்கிய நூல்.

விலை ரூ. 3—0—0 V. P. தபால் செலவு தனி.

அம்மயத் ஜுஸ்வு

தமிழ் மொழி பெயர்ப்புடன்

தொழுகைக்குத் தேவையான சில சூராக்கள் தமிழிலேயே இருக்கின்றன. அரபு மொழி அறியாதவர்களுக்கும் மதரஸா மாணவர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும்.

விலை ரூ. 1—8—0 V. P. தபால் செலவு வேறு

நாயக வாக்கியம் 451

(பாக்கெட் சைஸ்)

நபிகள் நாயகத்தின் 451 ஹதீதுகள்

விலை ரூ. 1—8—0 V. P. தபால் செலவு தனி.

குத்பா பிரசங்கம்

வெள்ளிக்கிழமைகள் தோறும் பள்ளிவாயில்களில் நடைபெறும் குத்பா பிரசங்கங்கள் அருமையான தமிழில் எழுதப் பெற்றிருக்கின்றன.

விலை ரூ. 2—12—0 V. P. தபால் செலவு தனி.

(மலேயாவுக்கு முன் பணம் தேவை)

அன்பு நூல் நிலையம்

132, பிராட்வே, சென்னை—1.

மதிப்புரை

படித்துப் பாருங்கள்!

[எழுதியவர்: எம். ஆர். எம். அப்துற்-றஹீம், B. A; பிரசுரம்: யூனிவர்சல் பப்ளிஷர்ஸ், 155-156, அங்கப்பநாயக்கன் தெரு, சென்னை-1. விலை ரூ. 2-8-0]

வாழ்வைத் துவங்கு

"வாழ்க்கையில் வெற்றி," "கவலைப்படாதே" ஆகிய, மனிதனுக்கு வாழ்வளிக்கும் மகத்தான நூல்களை எழுதி, ஆயிரமாயிரம் இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்து, அவர்களுக்கு வாழ்க்கையில் ஊக்கமும் உற்சாகமும் அளித்து, புத்துணர்ச்சியும் புதிய நம்பிக்கையும் தோன்றச் செய்த ஜனாப் அப்துர் ரஹீம், பி. ஏ, அவர்கள், இந்த "வாழ்வைத் துவங்கு" என்னும் நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இதன் ஆசிரியர் தமது வாழ்வைத் துவங்கிய வரலாற்றையே இந்நூலின் முன்னுரையாக சில வரிகளில் விறுவிறுப்பான நடையிலே இனிய தமிழில் எழுதுகின்றார். ஆசிரியருடைய சொந்த வரலாறே படிப்பவர்களின் சோர்ந்த உள்ளங்களைத் தட்டி எழுப்பி, ஊக்கமும் உற்சாகமும் அளிக்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் இவர் எழுதி வெளியிட்ட "வாழ்க்கையில் வெற்றி" என்னும் நூலே, எழுத்துத் துறையில் தாம் பெற்ற வெற்றிகளுக்கு ஆதாரம் என்று இதன் ஆசிரியர் கூறுகின்றார். இவரது "வாழ்க்கையில் வெற்றி" என்னும் நூலைப் படித்தவர்கள் நிச்சயமாக இதனை ஒப்புக் கொள்ளுவார்கள். அந்த அளவிற்கு, "வாழ்க்கையில் வெற்றி," பல்லாயிரம் தமிழ் மக்களின் இதயங்கவர்ந்த இணையற்ற நூலாக இன்றும் விளங்குகிறது! இதைப் போலவே, "வாழ்வைத் துவங்கு" என்னும் நூலும், மனித சமுதாயத்துக்கு வாழ்வளிக்கும் வழிவகைகளைக் கூறுகின்றது.

"படித்த இளைஞர்கள் தங்களின் உடுப்புகளுக்கான துணிகளை—பல மதங்களிலோ அல்லது ஒரு சில ஆண்டுகளிலோ கிழிந்துவிடக்கூடிய துணிகளைத் தேர்ந்தெடுப்பதில் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் செலவழிக்கின்றார்களேயன்றி, தங்களின் வருங்கால வாழ்வு, சுபிட்சம், ஆரோக்கியம், மனஅமைதி, ஆகியவைகளைப் பெரிதும் நிர்மானிக்கக் கூடிய தங்கள் வாழ்வின் வேலையை நிர்ணயிப்பதில் போதிய நேரத்தையோ, கவனத்தையோ செலவழிக்கின்றார்களில்லை. இஃதென்ன மதியீனம்!" என்று இடித்துக் கூறி, வாலிபர்களுக்கு வாழும் வகைகளை பல வித ஆதாரங்களுடன் விரிவாக எடுத்தியம்புகிறார் இதன் ஆசிரியர்.

"இப்பொழுது நம் இளைஞர்கள் தொழிற்படிப்புகளைப் படிக்காமல், பி. ஏ, எம். ஏ, பட்டம் பெற்று, குமாஸ்தா வேலைகளுக்கு மனுப்போட்டுக் காத்துக் கொண்டு நிற்பதையும், தொழில் படிப்பைப் படித்தாலும் தாங்கள் விரும்பாத தொழிலுக்குரிய படிப்பைப் படித்தோ, அல்லது தாங்கள் விரும்பாத தொழிலை மேற்கொண்டோ, வாழ்க்கையில் தோல்வியுற்று வருவதையும் கண்டு, என் மனம் வெதும்புகிறது. எனவேதான் அவர்களுக்கு என்னால் இயன்றவரை வழிகாட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூல், அவர்களின் எண்ணத்தை ஒரு கலக்குக் கலக்கிவிட வேண்டும், அவர்களின் வாழ்வில் ஒரு புதுவிதப் புரட்சி செய்யவேண்டும் என்று விரும்பி, இளைஞர் குழாத்திடையே இதனை அனுப்பிவைக்கின்றேன்" என்று இதன் ஆசிரியர் தமது முகவுரையில் கூறுவதிலிருந்து இந்நூலின் பெருமையை உணரலாம்.

அவ்லியாக்களை ஒழிக்க முடிவு

[ஆசிரியர் : அறிஞர் "மதனீ". பிரசுரம் : தாஜ்மஹால் பதிப்பகம், பாலக்கரை, திருச்சிராப்பள்ளி. விலை 0-8-0]

அல்லாஹ்வின் அருள் பெற்ற அவ்லியாக்களை ஆண்டவனாகவே கருதி, அவர்களின் சமாதிகளைச் சிலர் வணக்கத்துக்குரிய ஆலயங்களாகச் செய்துவரும் அறியாமையைக் கண்டிக்கும் கருத்துடன் இந்நூல் வெளிவந்திருக்கிறது. மக்களுக்குத் தொண்டு செய்து மாண்புற்ற மகான்களாகிய அவ்லியாக்களை அவமதிப்பதாக இதில் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களையே ஆண்டவன் என்று கொண்டாடும் அறியாமையை ஒழிக்க வேண்டுமென்றே இதன் ஆசிரியர் இச்சிறு நூலில் முழக்கமிடுகிறார். அவ்லியாக்களின் பெயரால் அவர்களின் சமாதிகளில் நடக்கும் அக்கிரமங்களையும் அனுசாரங்களையும் எடுத்துக் கூறி இடித்துக் காட்டும் இத்தகைய பிரசுரங்கள், இன்றைய முஸ்லிம் சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாதவைகளாகும். "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்கு உரியவர் யாருமில்லை" என்று முழங்கும் முஸ்லிம்கள், இன்று தமிழ் நாடெங்கும் பல இடங்களில் அவ்லியாக்களின் சமாதிகளையே ஆண்டவன் சன்னிதானங்களாக மதித்து மண்டியிட்டுத் தொழும் மதியீனத்தைக் காண்கிறோம். இத்தகைய காட்சிகளைக் கண்டு, 'இதுவோ இஸ்லாத்தின் ஏக தெய்வ வணக்கம்?' என்று எதிர் மத வாதிகள் ஏளனம் செய்கின்றனர்; பகுத்தறிவு வாதிகள் பரிகாசம் செய்கின்றனர். எனவேதான், இதயக் குமுறலுடன் இந்நூலை இதன் ஆசிரியர் எழுதி வெளியிட்டிருக்கின்றார். இளைஞர்கள் இதனை வரவேற்று, அவ்லியாக்களின் பெயரால் நடக்கும் அக்கிரமங்களை ஒழிக்க முன் வருவார்களென்று நம்புகிறோம். இந்நூல் கிடைக்குமிடம்: ரசூல்

நியூஸ் ஏஜென்ஸி, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.

கல்ஹின்னை மாணவர் சங்கம்—ஐந்தாம் வருட நிறைவு விழா மலர்

ஆங்கிலத்திலும் தமிழிலும் அருமையான பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ள இம் மலரில், அறிவுக்கு விருந்தாக அநேக எழுத்தோவியங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் பிரின்ஸ்பால் ஜனுப் ஏ. எம். ஏ. அஜீஸ், பி. ஏ. அவர்கள், கவிஞர் இக்பாலைப் பற்றிய கட்டுரையொன்று ஆங்கிலத்தில்வரைந்துள்ளார். தாம் மதீனாவுக்கு விஜயம் செய்தபோது அங்கே கண்ட காட்சிகளையும் சரித்திரப் பிரசித்தமான இடங்களையும் பற்றி, அல்ஹாஜ் எம். ஐ. எம். ஹனீபா, பி. ஏ. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். எகிப்திலே துருக்கியர் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய அரபி பாஷா அவர்கள், நாடு கடத்தப்பட்டு இலங்கையில் வாழ்ந்து வந்த வரலாறும் ஆங்கிலத்தில் வரையப்பட்டிருக்கிறது. பிரபல வட இந்திய எழுத்தாளர் காஜா அஹமது அப்பாஸின் ஆங்கிலச் சிறுகதை யொன்றும், மற்றும் பல தமிழ்க் கட்டுரைகளும் இதில் காணப்படுகின்றன. ஆங்கிலம் தெரிந்த இளைஞர்கள் இதனை அவசியம் படிக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இதன் விற்பனைத் தொகை அனைத்தும் மேற்படி சங்கத்தின் லைப்ரரி கட்டிட நிதிக்காகவே ஒதுக்கப்படும் என்று நாம் அறிவிக்கப்படுகின்றோம். எனவே, இந்தநல்லமுயற்சிக்குஉதவுமாறு, இலங்கையிலும் இந்தியாவிலும் வதியும் இளைஞர்கள் ஏராளமாக இதனை வாங்கிப் படிக்கவண்டுமென்று விரும்புகிறோம். காரியதரிசி, கல்ஹின்னை மாணவர் சங்கம், கண்டி, சிலோன் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

வாழ்வைத் துவங்கு

எழுதியவர் : அப்துர்-ரஹீம்

வையத்தில் பிறந்த மனிதனுக்குப் பெரும் பிரச்சினையாக விருப்பது வாழ்வை எவ்விதம் துவங்குவது என்பதுதான். வாழ்வில் குறிக்கோளற்ற தன்மையும் விரைந்ததைப் பெற தைரியமின்மையும், மனிதனை அவனது பிரகாச மிக்க வெற்றி வாழ்வில் நுழையவிடாது தடுத்து நிறுத்துகின்றன.

உள்ளம் சோர்ந்து, உடல் தளர்ந்து, நம்பிக்கை குன்றி, வாழ்வு இல்லையெனக் கருதிக் கலங்கி நிற்கும் அவனுக்கு ஆறுதல் அளித்து, 'சோதரனே! சோர்வடைய வேண்டாம். உன் வாழ்வுப்பாதை முன்னேறிச் செல்' என்று சங்கு முழக்கம் செய்கிறது இந்நூல். விலை 2-8-0,

தபால் செலவு தனி

அன்பு நூல் நிலையம்

183, பிராட்வே :: :: சென்னை 1.

திரை உலகம்

சென்னையில் நட்சத்திரங்களின் கிரிக்கெட் விளையாட்டு

சென்ற சில மாதங்களுக்கு முன் பம்பாயில் நடைபெற்றது போல், சென்னையிலும் சினிமா நட்சத்திரங்களின் கிரிக்கெட் விளையாட்டு நடைபெறப்போவதாகத் தெரிகிறது. இதில் தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள் மட்டுமின்றி, நர்கிஸ், மதுபலா, அசோக்குமார் ஆகிய பிரபல வட இந்திய நட்சத்திரங்களும் கலந்து கொள்ளுவார்களாம்.

க்ஷயரோக நிவாரண நிதி உதவிக்காக இந்த விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

மேற்படி கிரிக்கெட் ஆட்டத்தில், ஒரு கட்சிக்கு வசுந்தராதேவி காப்டனாகவும், மற்றொரு கட்சிக்கு கமலா கோட்னிஸ் காப்டனாகவும் இருந்து விளையாடுவார்கள். இதில், ரஞ்சன், சகஸ்ரநாமம், மாதுரிதேவி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், லலிதா, பத்மினி, கே. சாரங்கபாணி, டி. ஆர். மகாலிங்கம் ஆகிய மற்றும் பல தென்னிந்திய நடிகர், நடிகைகளும், மதுபாலா, நர்கிஸ், அசோக்குமார் ஆகிய வட இந்திய நட்சத்திரங்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

இந்தக் கிரிக்கெட் பந்தயத்தை நடத்தி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்காக, என். எஸ். கிருஷ்ணன், ஜி. டி. மூர்த்தி, வசுந்தராதேவி, சென்னைமேயர் ஸிப்கதுல்லா, டாக்டர் தாமோதரன் (க்ஷயரோக ஆஸ்பத்ரி) அதிகாரிபிரதாப் ஆகியவர்களைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டியொன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

ஜூபிடரின் 'கைதி'

ஜுபிடரின் 'கைதி', தமிழ் நாடெங்கும் முக்கிய நகரங்களிலெல்லாம் திரையிடப் பெற்று வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. எஸ். பாலசந்தர், ஜி. எம். பஷீர், ரேவதி ஆகியோர் இதில் இயற்கையாகவும் இணையற்ற விதமாகவும் நடித்திருக்கின்றனர். 'கைதி'யின் கதைப் போக்கு, விறு விறுப்பாகவும், நவீன முறையிலும் அமைந்திருக்கிறது.

மின்னும் நட்சத்திரங்கள்

மெஹ்தாப்

சென்ற சில ஆண்டுகளாக சினிமா வானிலிருந்து மறைந்திருந்த நடிகை மெஹ்தாப், மீண்டும் திரை உலகில் பிரவேசித்துவிட்டார் என்ற செய்தியை சினிமா ரசிகர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். மினர்வா மூவிடோனின் 'ஷாமா' என்ற படத்தில் நடித்த பிறகு, ஐந்து ஆண்டுகள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, இப்பொழுது மீண்டும் மின்னும் நட்சத்திரமாகத் தோன்றி, "ஜான்ஸி-கி-ராணி" என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். மெஹ்தாப் இப்பொழுது 33 வயதை எட்டிப் பிடித்துவிட்டார். எனினும் அவரிடம் முன்பிருந்த முகப்பொலிவும் கவர்ச்சியும் குன்றாமல் இருக்கின்றன.

மெஹ்தாபின் இயற்பெயர் நஜ்மா' என வழங்குகிறது. இவர், 20-4-1918ல், கௌரவமான ஒரு அராபிய குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தை, சூரத் நகருக்கு அண்மையிலுள்ள சாச்சின் சமஸ்தானத்தின் நவாபாக இருந்தார். எனவே இவரது இளமைப்பருவம் சூரத்திலேயே கழிந்தது. கடுமையான பர்தா முறையில் பழக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவராதலின், இவர், அப்போது ஆங்கிலக் கல்வி பயில் முடியவில்லை. நான்காவது வகுப்பு வரை உர்தா கல்வி மட்டுந்தான் கற்றுக்கொண்டார்.

இளமையிலேயே மெஹ்தாபுக்குச் சினிமாப் படங்களில் நடித்துப் பெயரும் புகழும் அடையவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அதிர்ஷ்ட வசத்தால் மெஹ்தாபின் அன்னையும் அவருடைய கருத்தை ஆதரித்து, உற்சாகப்படுத்துவதற்காகவே, 1929ல் ஒரு 'சினிமா யூனிட்'டை ஆரம்பித்து வைத்தார். அதன் முதல் தயாரிப்பான "கமலே ஷம்ஷீர்" என்ற ஊமைப் படத்தில் மெஹ்தாப் பிரதான பாகம் ஏற்று, மிகத் திறமையுடன் நடித்தார். இந்த சமயத்தில்தான் 'நஜ்மா' என்ற பெயர் 'மெஹ்தா'பாக மாறியது. அப்பொழுது அவருக்கு 11 வயதுதான். என்றாலும், தனது பண்பட்ட நடிப்பின் மூலம், எதிர்காலத்திலே ஒரு சிறந்த நட்சத்திர

மெஹ்தாப்

நடிகையாக விளங்க முடியுமென் பதை வெளிப்படுத்தினர்.

அந்தக்காலத்தில்தான் பேசும் படங்களும் வெளிவரத் தொடங் கின. மெஹதாப் அவற்றிலே நடிக்க ஆரம்பித்தார். பவானி என்பவரின் தயாரிப்பான "வீர் குணல்' என்ற படமே, மெஹ்தாப் முதன் முதலில் நடித்த பேசும் படம். அடுத்த படம், 'போலோ-ஷிகார்' என்பது. அதிலும் மிகத் திறமையுடன் நடித்து தனது நல்ல பெயரை நிலைநாட்டிவிட் டார்.

அதற்கடுத்து, டைரக்டர் கிதார் சர்மாவின் ஒப்பற்ற தயாரிப்பான 'சித்ரலேகா'வில் தத்ரூபமாக நடித்து நல்ல பெயர் வாங்கினர். அடுத்தடுத்து, "மாஸூம்". "பக்த கபீர்" என்ற படங்களில் நடித் தார். 'பக்த கபீரில்" குணச்சித் திர பாத்திரமேற்று நடித்து, பம் பாய் பட முதலாளிகளின் கவ னத்தைக் கவர்ந்தார். அதன் பயனுக, கல்கத்தாவிலிருந்து பம் பாய்க்குச் சென்று குடியேறினர்.

பம்பாயில், கர்தாரின் "ஷர்தா" என்ற படத்திலும், ":ஷான் ஜோக்", "விஸ்வாஸ்", "கானூன்" என்ற படங்களிலும் நடித்தார். இந்தப் படங்களில் இவ ருக்குக் கிடைத்த அமோகமான ஆதரவும் வெற்றியும்தான் அவ ரது வாழ்க்கையின் வெற்றியாக முடிந்தது. பிரபல குணசித்திர நடிகரும், டைரக்டருமான சொஹ் ரப் மோடி, இவருடைய நடிப் பைப் பாராட்டித் தமது 'பராக்" என்ற படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டார். அந்தக் காலத்தில் மாதத்திற்கு 2000 ரூபாய் வாங்கிய நடிகைமெஹ் தாப் ஒருவர்தான்! "பராக்" 1944ம் ஆண்டிலே தயாரிக்கப் பட்ட சிறந்த படம் என்பதற்காக அவ்வருடப் பரிசை அது தட்டிக் கொண்டு போய்விட்டது. இதற் குப்பின், "பைராம்கான்", "ஏக் தின்-கா-சுல்தான்", "ஷாமா" என்ற மூன்று படங்களிலும் நடித்தார்.

அப்பொழுதுதான் இவரது வாழ்விலே ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று! "பராக்" படம் தயாரிக்கப்படும்போதே டைரக் டர் ஷொஹ்ரப்மோடிக்கும் மெஹ் தாபுக்கும் ஏற்பட்ட காதல், இரண்டு ஆண்டுகளில் கலியாண மாகக் கனிந்தது! "ஷாமா"தான் இவர் கடைசியாக நடித்த படம். கலியாணமானதும், பகட்டான திரை உலகினின்றும் வெளியேறி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட் டார். ஐந்து வருடகாலம் சினிமா

ஆஷியானு" என்னும் படத்தில் நர்கிஸ்

உலகையே ஏறிட்டுப் பார்க்க வில்லை.

இப்பொழுது மீண்டும் படவுல கில் தோன்றிப் பிரமாதப் புகழ் எய்தத் துணிந்திருக்கின்றார் மெஹ்தாப். இவர் தனது குழந்தைப் பருவத்திலேயே சிவாஜி, ஜான்ஸி-கி-ராணி போன்ற சரித்திரப் பிரசித்திபெற்ற வீரர்-வீராங்கனைகளின் கதைகளைக் கேட்டிருக்கிறார். அவர்களைப் போல் நடிக்கவேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாகவே இவருக்கு இருந்துவந்ததாம். உண்மையிலேயே, இவருடைய கணவர் சொஹ்ரப் மோடிக்கும் அத்தகைய சரித்திரப் பிரசித்திபெற்ற வீராங்கனைகளின் வரலாற்றைப் படமெடுக்க வேண்டும் என்ற ஆசையும் அதிகமாக இருந்தது. "சிக்கந்தர்" படத்திற்குப் பிறகு "ஜான்ஸி-கி-ராணி" படத்தை தயாரிக்க முற்பட்டார். ஆனால் அப்பொழுது நிலவிய அரசியல் சூழ்நிலையில் அது முடியாமற் போய்விட்டது. சுதந்திர இந்தியாவில், அதை ஒரு ஒப்புயர்வற்ற படமாகத் தயாரிக்க விரிவான திட்டமிட்டிருக்கிறார் செஹ்ராப் மோடி. இந்தியாவிலேயே முதன் முதலில் எடுக்கப்படும் டெக்னிகலர் படம் "ஜான்ஸி-கி-ராணி;"தான். அது மட்டுமல்ல! இப் படம், ஹிந்தி-ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தயாராகின்றதாம். இத்தகைய ஒரு உன்னதமான படத்திற்கு, சற்று வயது அதிகமான மெஹ்தாபை சேர்த்திருப்பதுபற்றி, அதன் வெற்றியில் சிலருக்குச் சந்தேகம் ஏற்பட்டது.எனினும் இதில் நடித்து வெற்றிபெற்று விடவேண்டும் என்ற ஆர்வ மிகுதியால் மெஹ்தாப் ஒரு நாளைக்குப் பதினன்கு மணி நேரம் ஸ்டுடியோவில் வேலை செய்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாகத்தை பன்முறை நடித்துப் பழகுகிறார். இந்தப்படத்தில் நடிப்பதற்காகவே சண்டையும் குதிரையேற்றமும் தினமும் கற்றுக் கொள்கிறார். இவர் குதிரை ஏற்றம் பயிலும் பொழுது பலர் பயமுறுத்தினராம்; அண்மையில் குதிரையிலிருந்து விழுந்து அகால மரண மடைந்த ஷியாமையை நினைவூட்டினராம். ஆனல் மெஹ்தாப், பிடிவாதமாக குதிரையேற்றத்தைக் கற்றுக் கொண்டுவிட்டார். ஒரு நாள், கடிவாளக் கயிற்றை வாயில் இடுக்கிக் கொண்டு, இரண்டு கைகளிலும் கத்திகளை வைத்து,சண்டைக்கான பயிற்சிகளைச் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது கடிவாளக் கயிறு வாயிலிருந்து கீழே விழுந்துவிடவே, குதிரை வேகமாக ஓட ஆரம்பித்தது. அருகிலிருந்தோர், பயத்துடன் கூவினர். ஆனல் மெஹ்தாப் சற்றும் பயப்படாமல், அமைதியாக இருந்து கயிற்றை கையில் எடுத்துக் கொண்டார்!

ஜான்ஸீ-கி-ராணிக்குப் பிறகு, தான் எந்தப் படத்திலும் நடிக்கப்போவதில்லை என்று மெஹ்தாப் கூறுகிறார். இவர் தாராள புத்தியும் தயாள குணமும் உடையவர். இவருக்கு 'மெஹிலி' என்ற ஒரே புதல்வன் இருக்கிருன். இவருக்குத் தன்னலமற்ற சேவைகளிலே ஒரு தனி ஆர்வம் இருக்கிறது. —'சய்யித்'

கேள்வி—பதில்

இந்த இதழில் கேள்விகள் கேட்ட அன்பர்களில் தலைக்கு இரண்டு ரூபாய் வீதம் அன்பளிப்புப் பெற்றவர்கள்.

(1) எம். முஹம்மது இப்ராஹீம், தஞ்சாவூர்.

(2) எஸ். ஏ. முஹம்மது தாவுது, விஜயபுரம்.

கேள்வி ? பதில் !

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர். எல்லா கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால் பதில் அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என்று அன்பர்கள் தவறாக நினைக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்,]

எம், முஹம்மது இப்ராஹீம், தஞ்சை

இப்பொழுது நடைபெறும் பொதுத் தேர்தல்களின் விளைவாக காங்கிரஸை மீண்டும் வெற்றி பெற்றால், நாட்டிலே பாழாகும் பணம் எவ்வளவு இருக்கும் ?

ஏறத்தாழ இருபது கோடி ரூபாய்! இதில் சர்க்கார் செலவு 10 கோடி. தேர்தல்களுக்கு அபேட்சகர்களாக நிற்பவர்களின் செலவு, 10 கோடி.

டி. ஏ. ஹனீப், புரகாயல் கோட்டா, மதனபள்ளி

முஸ்லிம் முரசு தமிழில் முழங்குவதுபோல் ஏனைய பிரதேச மொழிகளைத் தாய்மொழியாகக்கொண்ட ஆந்திர முஸ்லிம்களிடையும் கன்னட முஸ்லிம்களிடையும் முழங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

கோயங்காவைப் போன்ற கொழுத்த பணக்காரர்களின் ஆசை உங்களையும் அடிமை கொண்டு விட்டதே !

யு. கே. தயினுர் முஹம்மது, சித்தயன்கோட்டை

சென்ற உலகப் போருக்குப் பின், சுபாஷ் சந்திரபோஸின் சேனையில் சேர்ந்திருந்த காப்டின் லக்ஷ்மி இப்பொழுது எங்கே இருக்கிறார்? என்ன வேலை செய்து கொண்டிருக்கிறார்?

காப்டின் சைகால் என்னும் பஞ்சாபியை மணந்து, பாஞ்சாலத்துக்கே சென்று குடித்தனம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்வி.

எம். முஹம்மது இப்ராஹீம், மதுரை

மதுபாலாவும் திலிப் குமாரும் சேர்ந்து நடிக்கும் அடுத்த படத்தின் பெயர் என்ன ?

"சங்தில்."

வி, எஸ். அப்துல் ஷுக்கூர், காட்பாடி

பிரேம்நாத் இப்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் ?

வர்மா பிலிம்ஸாரின் 'அவ்ரத்' என்னும் படத்தில்.

முஹம்மது ஜாபிர், காயல்பட்டணம்

'பஹார்' (வாழ்க்கை) ஹிந்திப் படத்தில் யார் யார் நடித்திருக்கின்றார்கள்? டைரெக்ஷன் யார்? சங்கீத டைரெக்டர் யார்? வசனம் யார்?

வைஜயந்திமாலா, பத்மினி, ஓம் பிரகாஷ், கரன்திவான், பிரான், பேபி தபஸும் ஆகியோர் நடித்திருக்கின்றனர். டைரேக்ஷன்: எம். வி. ராமன். சங்கீத டைரேக்ஷன்: எஸ். டி. பர்மன். வசனம்: ராஜேந்திர கிருஷ்ணா.

ஏ. எம். முஹம்மது இப்ராஹிம், அம்பகரத்தூர்.

பி. பானுமதி எத்தனை பாரம் வரையில் படித்திருக்கிறார்? அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?

6 வது பாரம் வரையில்

சென்னைக்கும் பம்பாய்க்குமிடையே பறந்து பறந்து சென்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

P. மதார் பாவா, பேகம்பூர், திண்டுக்கல்

சி. என். அண்ணாதுரைக்கு அறிஞர் பட்டம் எப்படிக் கிடைத்தது? அந்தப் பட்டம் அவருக்குத் தகுமா?

'அறிஞர்' என்பதாக ஒரு பட்டம் கிடையாது. அதனை ஒரு சர்வகலாசாலையோ சர்க்காரோ வழங்குவதுமில்லை. அண்ணாதுரையவர்களுக்கு மக்கள் மன்றம் உவந்தளித்ததே 'அறிஞர்' பட்டம். அந்த அறிஞர் பட்டம் அவருக்குத் தகுதியில்லையாயின், வேறு யாருக்குத் தகுதியுள்ளதாகும்?

ஏ. எம். ஷரீப், திருப்பூர்

காயிதெ ஆஸம் முஹம்மது அலீ ஜின்னா, லியாகத் அலீ கான், காஜா நஜீமுத்தீன், கமால் அத்தாதுர்க்; ஜனாதிபதி சுகர்னோ இவர்களில், நிர்வாகத்திறமையில் சிறந்தவர்கள் யார்?

முதலில், கமால் அத்தா துர்க்; இரண்டாவது, லியாக்கத் அலீ கான்.

ஏ. எம் மைதீன், எம். சமது, ஏனங்குடி

10 மாதங்களுக்கு முன் சிங்கப்பூரில் கைது செய்யப்பட்ட கரீம் கனியை, அவர் விருப்பப்படி பாக்கிஸ்தானுக்குப் போக

" ஸகி"யில் மதுபாலா

சிங்கப்பூர் அரசாங்கம் சம்மதித்தால், பாக்கிஸ்தான் சர்க்கார் அனுமதிக்குமா?

அனுமதி மறுக்கக் காரணம் இல்லை என்று தான் நினைக்கிறேன்.

எஸ். எம். பத்ருத்தீன்,
தொடங்கஸ்லந்த, இலங்கை

முஸ்லிம்கள் குதிரைப் பந்தயங்களுக்குச் செல்ல இஸ்லாத்தில் அனுமதியுண்டா?

எந்த விதமான சூதாட்டத்தையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை. குதிரைப்பந்தயமும் ஒரு சூதாட்டந்தானே!

எஸ்.ஏ. முஹம்மது தாவுது, விஜயபுரம்

சுதந்தர இந்தியாவில் நாம் கண்ட முதல் காட்சி என்ன?

ஆறவுன்ஸ் அரிசி ரேஷன்!

தென்னாட்டில் இன்று சிறந்த பேச்சாளர் யார்?

அறிஞர் அண்ணாதுரைதான்!

எம். எச். சுல்தான்,
என். எம். இப்ராஹீம்

கணவன் இறந்த பின், மனைவி 'இத்தா' இருப்பது இஸ்லாமிய மதக் கடமையல்லவா?

எல்லோருக்கும் கடமையில்லை. 60, 70 வயது மாதர்கள் தங்கள் கணவர்களை இழந்தால், 'இத்தா' இருப்பதில்லை. குழந்தைப் பேறுக்கு ஏற்ற வயதும், கணவன் மனைவி என்ற முறையில் கூடிப் பழகும் இயல்பு முடைய மனைவிகளுக்குத்தான் 'இத்தா' இருப்பது கடமை. கணவன் மரணமெய்தும் போது, மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தால், அவள் 'இத்தா' (வீடு அடங்கித் தனித்து) இருக்க வேண்டியதில்லை.

சென்ற மாத இதழில் கடைசிக் கேள்விக்குக் கடைசிப் பக்கத்தில் பதில் அளிக்கும்போது குறிப்பிடப்பட்டுள்ள பம்பாய் வாரப் பத்திரிகையின் பெயரும் தேதியும் என்ன?

பெயர்: "போரம்" என்னும் வார இதழ். தேதி:2-12-51

கே. முஹம்மது அலீ, திருச்சிராப்பள்ளி

நபிகள் நாயகம் இறந்த நாளன்று திருச்சியில் சிலர், "நாயகத்தின் திருமுடி"யைக் காட்டுகின்றனர். இது நம்பத் தகுந்ததா?

நம் நாட்டிலே ஏமாளிகள் சிலர் இன்னமும் இருக்கிறார்கள் என்பது நம்பத் தகுந்ததுதான்!

ப. செய்யது அபூதாஹிர், ஏர்வாடி.

ஒரு புகைப் படத்தில் காயிதே ஆஸம் ஜின்னா அவர்கள் பாக்கிஸ்தான் தேசியக் கொடிக்கு 'சல்யூட்' (வணக்கம்) செய்வதைப் பார்த்தேன். அது உண்மையாயிருந்தால், இஸ்லாமிய சட்டம், கொடி வணக்கத்தை அனுமதிக்கின்றதா?

தாய் நாட்டின் கோடிக்கு வணக்கம் செலுத்துவதென்றால், மரியாதை செலுத்துவது என்றுதான் பொருள். இது இஸ்லாமிய சட்டத்துக்கு முரணானதல்ல.

ஏ. எஸ். உதுமான் லெப்பை,
கட்டுப்போட்டா, சிலோன்

கணவனை மனைவி என்ன சொல்லி அழைப்பது? மனைவியை கணவன் எப்படி அழைக்கலாம்?

கணவனை மனைவி, மரியாதையுடன் 'வாருங்கள்' என்று அழைக்கவேண்டும். கணவன் மனைவியை அவள் பெயரைக் கூறி, அன்புடன் அழைக்கலாம்.

எஸ். அப்துல் காதிர், மதுரை

திலிப்குமார், ராஜ்கபூர், அஷோக்குமார், நர்கிஸ், மதுபாலா, சுரையா, நளினி, ஜய்வந்த் ஆகியோர், ஒவ்வொரு படத்தில் நடிப்பதற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறார்கள்?

75 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரையில்!

எம். எஸ். கபூர், யாழ்ப்பாணம்,
சிலோன்

நளினி ஜெய்வந்தின் வாழ்க்கை வரலாறு எழுதுவீர்களா? அவர் நடித்த முதல் படம் எது? அவர் இது வரை நடித்துள்ள படங்கள் எவை? அவருடைய விலாசம் என்ன?

நளினியின் வாழ்க்கைச் சித்திரம் 1951, ஏப்ரல் மாத முஸ்லிம் முரசில் இடம் பெற்றுள்ளது. அவர் நடித்த முதல் படம் 'ரதிகா' என்பது. 'அனோகாபியார்' 'சமாதி' 'சங்கிரம்' 'முக்கத்தர்' 'ஏக்நஸார்' ஆகிய மற்றும் பல படங்களில் நடித்துள்ளார். விலாசம்: பாம்பே டாக்கீஸ் ஸ்டுடியோ, பம்பாய்.

வி. டி. யாகூப்பிள்ளை, நீர்கொழும்பு
சிலோன்

வட இந்திய நடிகை நூதன் பாலா, எந்த மதத்தைச் சேர்ந்தவர்? அவருடைய வாழ்க்கை வரலாறு முரசில் வருமா?

நூதன் பாலா, ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்; பிரபல நடிகை சோபனா சமர்த்தின் புதல்வி. இவரது வாழ்க்கைச் சித்திரம் முஸ்லிம் முரசில் விரைவில் வரும்.

எம். அன்சாரி, விஜயபுரம்

பக்ஷிராஜா பிலிம்ஸார் இப்பொழுது தயாரித்து வரும் படங்கள் எவை? மேற்படி கம்பெனியின் விலாசம் என்ன?

'காஞ்சனா', 'மரகதம்' ஆகிய இரண்டு படங்கள். விலாசம்: பக்ஷிராஜா பிலிம்ஸ், கோயம்புத்தூர்.

ஏ. திருப்பதி, ஏ. வி. எம். ஸ்டுடியோ,
சென்னை-24

ராஜ்கபூர், சஜ்ஜன், கரன் திவான், தேவ் ஆனந்த், கோப், சேகர், ஜெப்ராஜ், பிரேம்நாத், அஜித் இவர்களில் ஹிந்துக்கள் யார்? முஸ்லிம்கள் யார்?

அஜித் தவிர, மற்ற அனைவரும் ஹிந்துக்களே.

எஸ். எம். எம். ஜுனைத், கட்டுக்கலை,
இலங்கை

சுரையா, மதுபாலா ஆகியவர்களின் விலாசம் என்ன?

சுரையா, கிருஷ்ண் மஹல், மரைன் டிரைவ், பம்பாய்.

மதுபாலா, அராபியன் வில்லா, பால் ரோடு, பந்த்ரா, பம்பாய்-20

ஏ. எச். ஏ. வாஹித், வெலிகாமம், இலங்கை

ரபீ, முகேஷ், தல்அத் முஹம்மது, சிடல்கர், ஷம் ஷாத், லதா, கிஷோர்ராய், ஆஷா இவர்களில் மிகச் சிறந்த பாடகர், பாடகிகள் யார்?

ரபீ, லதா, ஷம்ஷாத்.

எஸ். எம். சையத் நஜீமுத்தீன், விஜபுரம்

மன்னர் இப்னு சவூத் ஆட்சியில் (அரேபியா) திருட்டுக் குற்றம் செய்தவர்களின் கைகள் துண்டிக்கப்படுவது உண்மையா?

உண்மைதான்!

என். ஏ. அஹ்மது தம்பி, பினாங்கு

மதுபாலா இப்பொழுது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் எவை?

'சங்தில்', 'புரோடக்ஷன் நம்பர் 2', 'பஞ்சம்'

ஜுபிடர் பிரியன், மதுரை

அசோக்குமார், அனூப்குமார், கிஷோர் குமார் ஆகிய மூவரும் சகோதரர்கள் என்பது உண்மையா?

உண்மைதான்.

சென்ற மாத முஸ்லிம் முரசு மீலாத் மலரில், ஹிந்திப் பாடகர் சிடல் கரும், சங்கீத டைரெக்டர் ஸி. ராமச்சந்திராவும் ஒருவரே என்று ஒரு கேள்விக்கு பதில் எழுதியிருக்கிறீர்கள்! அது தவறு என்று நினைக்கிறேன்.

ஆம், தவறுதான், சங்கீத டைரேக்டர் ஸி. ராமச்சந்திராவேதான், சிடல்கர் என்ற பெயருடன் பாடுகிறார் என்பது உண்மை.

இந்திய சர்க்காரின் நிர்வாகத்துக்கு வந்து பல ஆண்டுகளாகி விட்டனவே!

எம். முஹம்மது சுல்தான், நொச்சியகம், சிலோன்,

பாத்திமா ஜின்னாவுக்குத் திருமணம் ஆகிவிட்டதா? அவர் சொந்த விஷயம் ஏதாவது தெரியுமா?

பாத்திமா ஜின்னாவுக்கு விவாகம் நடைபெறவில்லை. அவர், பல் வைத்தியப் பரீட்சையில் தேறி, சொந்த ஆஸ்பத்திரியும் வைத்து நடத்திக் கொண்டிருந்தார். அதற்குபின் காயிதே ஆஸம் ஜின்னா அவர்களுடனேயே இருந்து, அவரது ஆயுட் காலம் வரையில் அவருடைய உடல் நலத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்,

கலீக் குஜ்ஜமான், அடியக்கமங்கலம்

வட இந்திய முஸ்லிம் நடிகர்களில் தலைசிறந்தவர் யார்?

திலிப்குமார்

டி. எச். முஹம்மது ஷரீப், தேவராயம்பாளையம்

ஹஜ்ஜுக்குச் செல்லும் பெண்கள், ஆண்களுடன் சேர்ந்து நின்று தொழுவார்களா?

சேர்ந்து நின்றுதான் தொழுகிறார்கள்

எம். எஸ். ஆபிதீன், மட்டக்களிப்பு, இலங்கை

சில உலமாக்களிடம் மார்க்க சம்பந்தமான கேள்விகளைக் கேட்டால், கோபமும், ஆத்திரமும் அடையக் காரணம் என்ன?

உங்கள் கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில் சொல்லத் தெரியாமையால்தான்! —"கமால்"

வெளிவந்து விட்டது!

முன்னேறுவது எப்படி?

ஊக்கமும் ஆர்வமும் படைத்த மனிதன் வாழ்வில் முன்னேறுவதற்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றான். ஆனால் அதற்கான வழிவகைகளை அவன் அறியாது தயங்கி நிற்கின்றான். உள்ளத்தில் ஆவல் கொழுந்துவிட்டெரிகின்றது. அதற்கொரு வழியினைக்காட்டி ஆரம்பித்துவிட்டுவிட்டால் அவன் வெற்றித் துறையை அடைவது நிச்சயம். அந்த உன்னத வேலையையே இந் நூல் புரிகின்றது.

சிலர் முன்னேறுவதைப்பற்றியே சிந்தியாது அமைந்திருக்கின்றனர். அவர்களின் உள்ளத்தில் ஓர் கிளர்ச்சியை எழுப்பி வாழ்வில் உயரவேண்டுமென்ற ஆசையை ஜ்வாலை விட்டெரியச் செய்வதே இந் நூலின் நோக்கமாகும். தகிக்கும் ஆசையைப்பெற்றபின் அமைதியாக இருக்கமுடியாது. அத் தகையவர்களுக்கு ஒளிகாட்டி வழிகாட்டுகின்றது, இந் நூல். விலை ரூ. 2—8—0 தபால் செலவு தனி.

அன்பு நூல் நிலையம்.

132, பிராட்வே, சென்னை-1.

முஸ்லிம் முரசு

சந்தா விகிதம்

ஈத், மீலாத் மலர்களுடன்

உள்நாடு இந்தியா, சிலோன்	ரூ.	அ.	வெளிநாடு பர்மா, மலேயா, சிங்கப்பூர்	ரூ.	அ
தனி இதழ்	0	6	தனி இதழ்	0	8
ஒரு வருடம்	4	8	ஒரு வருடம	6	0
அரை வருடம்	2	8	அரை வருடம்	3	8
2 வருடம்	8	8	2 வருடம்	11	0

ஒரு வருடத்துக்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத், மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப்படும்.

மானேஜர்,

முஸ்லிம் முரசு

132, பிராட்வே, சென்னை—1.

சென்னையில் கெயிட்டி, தங்கம் டாக்கீஸ்களில்
நடைபெறுகிறது.

Edited & Publihsed by S. A. Shukoor. 132. Broadway. Madras 1 & Printed by M. M. Thani
Kaimalai at the Sengunthar Mithran Press. 36, Armenian Street. Madras-1.